# மக்கட் செல்வம்

மணப்பரிசு



அ.மு.ப

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# மக்கட் செல்வம்

—மணப் பரிசு

அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ., எம். லிட்.,
துணைத் தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பர் கல்லூரி, சென்னை-30.

தமிழ்க்கலை இல்லம்,
சென்னை-30.

உரிமைப் பதிப்பு

விலை ரூ. 2-00.

அச்சிட்டோர்:
ஜெனரல் பிரிண்டர்ஸ், பெரியமெட், சென்னை-3.

விற்பனை உரிமை:
பாரி நிலையம்,
59, பிராட்வே, சென்னை-1.

# முன்னுரை

சில திங்களுக்குமுன் எனது நண்பர் ஒருவர் வீட்டுக்கு வந்தார்; நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார். கடைசியில் புறப்படும்போது 'குழந்தையை'ப் பற்றி ஒரு கட்டுரை வேண்டும் என்று கேட்டார். அவருடைய நண்பர்தம் குழந்தைக்குப் பிறந்த நாள் விழா என்றும், அதுபற்றி மலர் வெளியிடப் போவதாகவும் சொன்னர். அவர் வந்து பெசிக்கொண்டிருந்த அதே வேளையில் என் மகள் செல்வி மங்கையர்க்கரசியும் முதல் மகவு பெற்றெடுத்தாள். இரண்டும் ஒன்றிய அந்த வேளையில்தான் இந்த நூல் எழுதவேண்டும் என்ற உணர்வும் தோன்றிற்று. எனவே மகளுக்கு அவள் பெற்ற மகப்பேற்றினை விளக்கும் வகையிலே இந்நூலைக் கடித வடிவில் எழுதத் தொடங்கினேன். அதன்படியே ஒவ்வொரு கடிதமாக எழுதி முடித்தேன். ஒரு கடிதத்தை என் நண்பருக்குக் கொடுத்தேன். பிறவற்றைத் தொகுத்து வைத்தேன். பதினேழு கடிதங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

மனித வாழ்வில் பெறவேண்டிய செல்வங்கள் எத்தனையோ உள்ளன. எனினும் அவற்றுளெல்லாம் தலையாயது **மக்கட் செல்வமே** என்பதைப் பலரும் நன்கு விளக்கிக் காட்டியுள்ளார்கள். உலக வாழ்விலே இல்லறம் துறவறம் என்ற இரண்டும் இருப்பினும் இல்லறமே துறவறத்தினும் மேம்பட்டு விளங்குகின்றது. உலகைப் பற்றிக் கவலையுறாது, தன்னைப்பற்றியும் தன் உயிரைப் பற்றியுமே கவலைகொள்ளும் தனிநலம் சூழ்ந்த துறவறத்திலும், தன்னை ஒவ்வொரு வகையினும் மற்றவர்களுக்கு ஒப்படைக்கும் இல்லறம் சிறந்ததுதானே. தனித் தனி

யாக வாழ்ந்த தலைவனும் தலைவியும் மணத்தால் ஒன்று கூட, ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, தன்னலமற்று வாழக் கற்றுக் கொள்ளுகின்றனர். பின் தங்கள் மக்களுக்காக இருவருமே வாழ்வைத் தியாகம் செய்கின்றனர். பிறகு அன்பின் எல்லை விரிவடையச் சுற்றத்தார், ஊரார், உலகத்தார், பிறர் என்றெல்லாரும் வாழவேண்டித் தம்மையும் தம் நலன்களையும் கட்டுப்படுத்திக் கொள்ளுகின்றனர். இல்வாழ்வான் எல்லார்க்கும் நல்லாற்றின் நின்ற துணை என்பதை வள்ளுவர் பலவகையில் விளக்குகின்றாரன்றோ. அந்த இல்லற வாழ்வில் முளைக்கும் கான்முளைகளாகிய குழந்தைகள் தாம் பெற்றோர் வாழ்ந்த வழியைப் பின்பற்றி அவர்களை உலகில் வாழையடி வாழையாய் வாழ்வைக்கின்றன.

இந்த மக்கட் செல்வத்தைப் பற்றி உலகம் தோன்றிய நாள்தொட்டு இன்றுவரை பாடாத புலவர் இல்லை. கலைநலம் கண்டு கவிபாடும் புலவர்கள் மட்டுமன்றி, இன்றைய விஞ்ஞானிகள்கூட இந்தக் குழந்தைச் செல்வத்தின் சிறப்பைக் காட்டுகிறார்கள். ஓரறிவுடைய உயிரினங்கள் தம் மக்கட் செல்வங்களை எவ்வெவ்வகையில் வளர்த்து இனப் பெருக்கம் செய்கின்றன என்பதைத் தாவரநூற் புலவர் விஞ்ஞான ஆய்வு களத்தில் கண்டு கண்டு எழுதியுள்ளனர். பிற உயிரினங்களின் இனப்பெருக்கத்தையெல்லாம் விலங்கு பறவை இவைகளை ஆராயும் உயிர்நூல் புலவர்கள் தத்தம் ஆய்வு களத்தும் இயற்கைச் சூழலினும் கண்டு கண்டு உலகுக்கு உணர்த்தியுள்ளார்கள். அதேபோன்று மனிதனுடைய கருவின் வளர்ச்சிபற்றியும் அதன் சிறப்புப் பற்றியும் விளக்கிக் காட்டுகின்ற புலவரும் பலர்.

இந்த நூலில் குழந்தை நலம் பற்றிய பலருடைய கருத்துக்களைத் தொகுத்துப் பதினேழு கடிதங்களாக எழுதி இருக்கின்றேன். சங்க காலம் தொடங்கி இன்று

வரை வாழ்ந்த தமிழ்நாட்டுப் புலவர்கள் இக்குழந்தையைப் பற்றிப் பாராட்டிய கருத்துக்களை ஓரளவு காட்டியுள்ளேன். இங்கே நான் காட்டாத புலவர்தம் வாய்ச்சொற்கள் இன்னும் எத்தனை எத்தனையோ இருக்கலாம். நான் அக்கருத்துகளை இந்நூலில் சில கடிதங்களாகப் பல்வேறு தலைப்புக்களில் எழுதியுள்ளேன்.

நூலின் பிற்பகுதியில் வெறும் இலக்கியங்களை மட்டும் எடுத்துக்காட்டாது, இன்றைய விஞ்ஞானிகள் கருவில் வளரும் குழந்தையையும் பிறந்து வளரும் குழந்தையையும் எப்படி எப்படி ஆராய்கின்றூர்கள் என்பனவற்றை ஓரளவு தொட்டுக் காட்டியிருக்கிறேன். கருவில் குழந்தை வளரும் முறை பற்றியும், பிறந்த குழந்தை மெல்லமெல்ல உலகச் சூழலை உணர்ந்துகொள்ளும் முறை பற்றியும் தனித்தனி இரண்டிரண்டு கடிதங்களில் காட்டியுள்ளேன். மக்கட் செல்வத்தை அன்போடு அணைத்து வளர்க்க வேண்டிய அவசியம் பற்றி ஒரு கடிதத்தில் விளக்கியிருக்கிறேன். கடைசிக் கடிதத்தில் இன்றைய உலகப் போக்கைக் கண்டிக்கு முகத்தான் குடும்பக் கட்டுப்பாடு தேவையற்ற ஒன்று என்பதையும் விள்க்கியுள்ளேன்.

இருபதாம் நூற்றுண்டு நாகரிகத்தின் கோலம் எத்தனையோ வகையில் புலப்படுகிறது. இயற்கையை மறந்த செயற்கை வாழ்வு தலை விரித்தாடுகிறது. அதன் அங்கமாக அமையும் குடும்பக் கட்டுப்பாடு பற்றி விளக்கி எழுதி இயற்கை வாழ்வுக்கு அது முரண்பட்டது எனச் சுட்டிக் காட்டியுள்ளேன். சிலர் குடும்பக் கட்டுப்பாட்டு சூழலில் சிக்கியும், சிலர் மணம் செய்துகொள்ளாது இயற்கைக்கு முரண்பட்ட வாழ்வு வாழ்ந்து வகைகெட்டும் மக்கட் பிறவியில் என்றென்றும் பெற்று நலமுற வேண்டிய மக்கட் செல்வத்தை இழக்கும் நிலையை எண்ணின் அறிவந்த மக்கள் வருந்துவரல்லரோ! உலகம் தோன்றிய நாள்தொட்டு இலக்கியமும் கவிதையும் பாடிய கற்பனைப்

புலவர்களும், சமயநெறியையும் வாழ்க்கை நெறியையும் பண்பாட்டையும் உலகுக்கு உணர்த்தும் தலைவர்களும் போற்றும் ஒரே செல்வம் இம்மக்கட் செல்வமேயன்றோ ! இதை மறந்தும் துறந்தும் வாழ்வோம் என எண்ணுவது மனிதப் பண்பாடு ஆகுமா ?

இத்தகைய மக்கட் செல்வமே மணவாழ்வின் இன்பப் பரிசு. எனவே இந்நூலுக்கு 'மக்கட் செல்வம் – மணப் பரிசு' என்ற பெயரையே இட்டுள்ளேன். இதில் எனது உள்ளத்தெழுந்த ஆர்வம்பற்றி இரண்டொரு கடிதங்களைச் சற்று நீள விட்டிருப்பேன். இதுபோன்றே மக்கட் செல்வம் பற்றிப் பலப்பல விளக்கங்களை எழுதிக் கொண்டே போகலாம். வளர்ந்த குழந்தைகளைப் போற்றும் விதத்தையும், தந்தை மகற்காற்றும் உதவியையும் பிறவற்றைப் பற்றியும் விளக்கிக்கொண்டே செல்வின் நூல் விரிவடையும். இளங்குழந்தைகளை உள்ளத்தில் கொண்டு, அந்த அடிப்படையிலே இக்கடிதங்கள் அமைகின்றமையின் இத்துடன் நிற்கின்றேன். காணும் அறிஞரும் அன்பரும் தத்தம் கருத்தை எழுதவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**வாழ்க இல்லறம்!** **வளர்க மக்கட் செல்வம் !**

அன்பன்,

*சென்னை-30.*
*25 – 3 – '60*

**அ. மு. பரமசிவானந்தம்.**

## உள்ளே


| கடிதம் | | பக்கம் |
|---|---|---|
| 1. பிள்ளைக் கனியமுது | ... | 8 |
| 2. குழவி கொள்பவன் ஓம்புமதி ! | ... | 14 |
| 3. புதல்வர்தம் மழலை | ... | 22 |
| 4. மறத்துக்கும் அஃதே துணை | ... | 29 |
| 5. தாயில்துவாக் குழவி | ... | 35 |
| 6. சிறுவர்ப் பயந்த செம்மலோர் | ... | 44 |
| 7. தம்பொருள் என்ப தம்மக்கள் | ... | 53 |
| 8. குழந்தையும் தெய்வமும் | ... | 60 |
| 9. பாலுண்ணும் பசுங்குழவி | ... | 68 |
| 10. பிள்ளைத் தமிழ் | ... | 74 |
| 11. பாரதியும் பாப்பாவும் | ... | 82 |
| 12. கருவில் குழந்தை I | ... | 89 |
| 13. கருவில் குழந்தை II | ... | 96 |
| 14. குழந்தையின் ஐம்புல நுகர்வு | ... | 104 |
| 15. குழந்தையின் மன வளர்ச்சி | ... | 114 |
| 16. அடித்தா ? அணைத்தா ? | ... | 122 |
| 17. மக்கட்பேறு வேண்டாவா ? | ... | 127 |

## 1. பிள்ளைக் கனியமுது

**அன்புள்ள செல்வி மங்கையர்க்கரசிக்கு,**

நலன். மனைவாழ்வுக்கு அணிகலனும் நன்மகப்பேறு வாய்த்தது அறிந்து மகிழ்கின்றேன். வாழ்வில் பெறக் கடவதாகிய செல்வங்களுள் **மக்கட் செல்வமே** சிறந்த ஒன்றாகும். பொருள் என்று எதைஎதையோ கூறுவார்கள். எனினும் 'தம் பொருள்' என்று உரிமையோடும் உறுதி யோடும் கூறக் கூடியது 'மக்கட் செல்வமே'யாகும். எனவேதான் வள்ளுவர், 'தம் பொருள் என்ப தம்மக்கள்' என அழகாகவும் தெளிவாகவும் கூறுகின்றார். அம்மக்க ளைப் பேணி வளர்க்குங்கால் பெறும் இன்பம் பெரிது. குழந்தை மழலைச் சொல் மற்றெவற்றினும் இனியது; அதன் மெய்தீண்டல் இனிது; அதன் விளையாட்டு இனிது. இவ்வாறு அக்குழந்தை தரும் இன்பம் ஏட்டில் குறிக்க முடியாதது. உள்ளத்து உவகை பெருக்கும் ஒப்பற்ற வாழ்வுச் செல்வமே குழந்தையாகும். அதனாலேதான் ஆண்டவனைப் பாடவந்த அடியவரில் சிலர் ஆண்ட

வனையே—அப்பாலுக்கப்பாலாக நின்ற ஒருவனையே—அருமைக் குழவியாக்கிப் போற்றிப் பாடிப் பேரின்ப முற்றார்கள்!

குழந்தையைப் பற்றிக் கூறாத இலக்கியங்களே இல்லை என்னலாம். தமிழில் தொல்காப்பியனார் காலந் தொட்டு இன்றுவரை சிறக்கப் பாடி, நிலைத்த புகழால் வாழும் புலவர் அனைவரும் குழந்தை நலத்தை-பிள்ளைமை இன்பத்தைப் போற்றிப் பாடுகின்றனர். திருவள்ளுவர் ஓர் அதிகாரத்தையே குழந்தை இன்பம் காட்டக் கொண்டுள்ளார். சங்ககாலத்தில் வாழ்ந்த புலவர்கள் பல்வேறு வகையில் குழந்தை எழில் பற்றியும், அது தரும் இன்பம் பற்றியும், அதைப் போற்றி வளர்க்கவேண்டிய பொற்பு பற்றியும் பலப்பல வகையில் பாடியுள்ளனர். அவற்றையெல்லாம் இங்கே விளக்கத் தொடங்கினால், அது ஒரு பெருநூலாகவே முடியும். எனவே அவ்வளவை யும் கூறாது இக்கடிதத்தில் சங்ககாலப் புலவர் ஒருவர் கூறியதை மட்டும் எடுத்துக் காட்டி அமைகின்றேன்.

**அன்பின் அரசி !**

தமிழ் நாட்டில் பலவகைப் புலவர்கள் வாழ்ந்துள்ள னர். வறுமையில் வாடிய புலவரும் பலர். செல்வராய் இருந்த புலவரும் பலர். ஏன்? அரசர்களுக்கு அரசராக இருந்த புலவரும் பலர். பாராண்டு பல செல்வம் பெற்ற புலவருள்ளே பாண்டியரே சிறந்தவர். அவருள் ஒருவன் அறிவுடை நம்பி! ஆம்! அவனுடைய பாட்டே அவனை அறிவுடைய நம்பியாகக் காட்டுகிறது. அவனுடைய அறிவுநிலையை முன்னமே அறிந்து வைத்துத்தானோ ஏனோ அவனுடைய பெற்றோர்கள் அவனுக்கு அப்பெயர் இட்டனர்.

அறிவுடை நம்பி மன்னர் மன்னன்; செல்வச் சீமான்; வற்றாத வளம் உடையவன். அவன் படைப்பில்–

சொல்லில்—ஆணையில் எத்தனையோ மக்கள் வாழ்ந்திருப்பர். தனது ஆணைவழி அழியாத இன்பம் கண்டிருப்பான் அவன். எனினும் அவனே கற்று, நின்று, நிலைத்து எண்ணும்போது அவன் உள்ளம் எல்லாச்செல்வங்களுக்கும் மேலான ஒரு செல்வத்தையே கண்டது. ஆம்! அதுதான் மக்கட்செல்வம். பாராண்டு பகடேறிவரும் கணக்கற்ற இருநிதி படைத்தோ ராயினும் அவர்களுக்கு மக்கட் செல்வம் இன்றாயின் பயன் இல்லை என்பதை அந்த அறிவுடை நம்பியின் உள்ளம் உணர்ந்து கூறுகின்றது. அவன் மக்கட் செல்வம் பெற்றவனா அல்லனா என்பது பற்றி நாம் இங்கு நினைக்க வேண்டா. குழந்தைத் தன்மையை அவன் கொண்டாடுவதிலிருந்து அவன் கட்டாயம் நன்மக்களைப் பெற்று, அவர்களைச் சுமந்து, அவர்தம் மிச்சில் உண்டு, அவர்தம் குறுநடை கண்டு மகிழ்ந்தவனாகவே இருக்க வேண்டும். அவன் கற்றவனல்லனோ! அதனாலேதான் 'தாம் இன்புறுவது உலகின் புறக்காண' வேண்டும் என எண்ணிற்று அவன் உள்ளம். குழந்தைச் செல்வத்தால் தான் பெற்ற இன்பத்தினை வையகமெல்லாம் பெற வாரி வழங்குகின்றான், பாட்டாக. ஆம்! அவன் வாய்மொழிப்படி எத்தனை எத்தனைச் செல்வங்கள் பெற்றிருந்தாலும் குழந்தைச் செல்வமட்டும் இன்றேல் அவர்களுக்கு என்ன பயன்? அவர்தம் வாழ்நாளே பயனற்றதாக முடியும் என்கின்றான். மக்கள் நலம் எத்தகையது என்பதை ஒருசில அடிகளாலே உணர்ந்து போற்றுகிறான் அவன்.

## அன்பின் செல்வி !

குழந்தை அளிக்கும் கவின் காட்சியைக் காட்டுகிறான் அவன். குழந்தை தத்தித்தத்தி நடக்கும் அருமைக் காட்சி அவனுக்கு அருள்கனிந்த காட்சியாகின்றது. தான் உண்ணும் கலத்தில் அக்குழவி கையிட்டு வாரி,

வாயிட்டும் கவ்வியும் விதிர்க்கும் அடிசில் அதன் உடலெல் லாம் பட்டு நழுவும் காட்சி நல்காட்சியாகிறது. ஆம்! அக் குழந்தை உலகை மயக்குகிறது; பெற்றவரை மயக்குகின் றது. உலகில் எத்தகைய துன்பம் பெற்றிருந்த போதி லும் குழந்தையைக் கண்டால் அத்துன்பத்தை மறப்ப தைக் காண்கிறோமே! அன்றாட வாழ்வில் அலுவகத்தே அல்லும் பகலும் உழைத்து வீடு வந்த காலத்தில் 'அப்பா' என அழைத்து, அப்படியே கட்டி அணைக்கும் அருங் குழந்தைச் செல்வத்தால் நம் உழைப்பின் அலுப்பையும் —ஏன்? அவதியையும்கூட மறக்கிறோமே? ஆம்! அந்த இன்பத்தைப் பெற்றவர்தாம் நன்கு அறிவர். பாண்டியன் அறிவுடை நம்பி அந்த இன்பத்தைப் பெற்றிருக்கிறான். அவனுடைய பாராளும் பெரும் சுமையை இப்பிள்ளைமை இன்பம் மிக எளிமையாக மாற்ற உதவி இருக்கும். போர் மேல் சென்று, பகைவரை வென்றுச் சிவந்த கண்ணோடு வந்த இவனுடைய தோற்றம் அப்பசச்சிளங் குழந்தையைக் கண்டதும் மாறியிருக்கும்தான். அரச வாழ்விலும், போர் முழக்கத்திலும், கொடைச் சிறப்பிலும் பிற நலங்களிலும் காணாத பேரின்பத்தை இப்பிள்ளைமை இன்பத்தால் கண் டிருப்பான் பாண்டியன் அறிவுடை நம்பி. அவ்வுள்ளம் புலமை நிரம்பிய ஒன்று. எனவே உணர்ச்சி பாட்டாக உருப்பெற்று உருண்டோடி வருகிறது. இதோ அவன் பாட்டு. நன்றாக விளங்கும்; நீயே படித்துப் படித்துப் பொருள் அறிந்து கொள்ளலாம். படி; நன்றாகப்படி.

படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெரும் செல்வ ராயினும்; இடைப்படக்;
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லை தாம்வாழும் நாளே (புறம் 188)

இதுதான் அவன் பாட்டு. அன்பின் அரசி! இதைப் படித்தாயா? ஒரு முறை இருமுறை அல்ல; பலமுறை படி. படிக்கப்படிக்கப் புதுப்புது இன்பமும் பொருளும் உள்ளத்துத் தோன்றிக்கொண்டே இருக்கும். அதன் முடிந்த முடிவு எத்துணைச் செல்வம் பெறினும், மக்கள் இன்றேல் அவர்தம் வாழ்நாள் பயனற்ற வீழ்நாட்களே யாகும் என்பதுதான். இன்று நீ நன்மகப்பேறு உற்றுச் சிறந்துள்ளாயாதலின், இனி நீ உன் வாழ்நாட்களின் பயனைக் காண்பாய் என்று கூறி வாழ்த்துகிறேன்.

**செல்வி !**

இப்படிப் பிள்ளைமை இன்பத்தைப் பாடிய புலவர் பலர். அவர்களின் பெயரை வரிசையாகச் சொன்னாலும் இவ்வேடு இடம் தராது. சங்ககாலப் புலவர் பலர் இக் குழந்தை இன்பத்தைப் பெற்று மகிழ்ந்ததோடு–மற்றவர்களுக்கும் காட்டியதோடு–அக்குழந்தை வளர்க்கும் நெறி காட்டி உலகுக்குப் பலப்பல உண்மைகளை உணர்த்தி உள்ளார்கள். அவற்றை இங்கே விரிக்கின் பெருகும். அதோ, உன் அருமைக் குழந்தை உன்னை அழைக்கிறது. அதன் முகம் காண உன் உள்ளம் விழைகிறது. எனவே மேலும் இக்கடிதத்தை நீட்ட நான் விரும்பவில்லை. அடுத்த கடிதங்களில் ஔவையும் பிறரும் குழந்தை பற்றிக் கூறிய கருத்துக்களை எழுதுகிறேன். தொடர்ந்து பிற புலவர்தம் வாய்மொழிகளையும் நீ காண்பாய். நன்மக்கட்பேறு நனி சிறக்க எனக்கூறி இன்று இத்துடன் அமைகின்றேன்.

அன்புள்ள,

**அப்பா.**

## 2. குழவி கொள்பவரின் ஓம்புமதி !

**அன்புடைச் செல்வி மங்கையர்க்கரசி,**

*எனது முன்னைய கடிதம் சேர்ந்திருக்கும். அதில் குழந்தை இன்பத்தைப் பற்றிக் குறித்திருந்தேன் அல்லவா ! அந்த இன்பத்தைக் காட்டிய அதே இலக்கியம் புறநானூறு மற்றொன்றையும் காட்டத் தவற வில்லை. மட்டற்ற இன்பத்தைப் பெற்றவருக்கு வாரி வழங்கும் குழந்தைச் செல்வத்தைப் போற்றி வளர்க்க வேண்டியது அப்பெற்றோர்களின் கடமை என்பதை அது நன்கு விளங்குகிறது. 'பொருள் தனைப் போற்றி வாழ்' என்பது தமிழில் வழங்கும் நல்ல பழமொழி. அதன் நிலைநின்று பெற்ற பொருளைப் போற்றிப் பாதுகாத்தால் தான் அது நிலைத்து நலம் பெற்று ஓங்கும். எல்லாப் பொருளுக்கும் இவ்வுண்மை பொருந்தும். எனவே பொருள்களில் பொருளாகிய குழந்தையை எவ்வாறு பாதுகாக்கவேண்டும் எனச் சொல்லவும் வேண்டுமோ? வள்ளுவர் குழந்தைச் செல்வத்தையே 'தம்பொருள்*

என்ப தம்மக்கள்' என விளக்கிக் காட்டுகின்றூர். அப்பொருளைப் போற்றி வளர்க்கவேண்டிய வகையினைப் பற்றி நீ நன்கு அறிந்து கொள்ளவேண்டும்.

பெற்றதாய் குழந்தையைக் கண்ணும் கருத்துமாகப் போற்றி வளர்க்க வேண்டும். மழலைச் சொல்லாலும் தளர் நடையாலும் மகிழ்வூட்டும் இளமைச் செவ்வியும், பின் வளர்ந்து பெற்றவரை ஓம்பும் வாழ்க்கைப் பண்பும் ஒருசேர, பெற்ற அக்குழந்தையின் வளர்ப்பை ஒட்டியே வளம் பெற்றதாக அமையும். எனவே பெற்றதாய் குழந்தையை வளர்ப்பதிலேயே அதன் வருங்கால முழுதும் அடங்கி இருக்கிறது. அதன் வருங்காலம் மட்டுமன்று ; தாயின் வருங்காலமும் பிற சுற்றத்தார் வருங்காலமும் கூடத்தான். 'தன் மகனைச் சான்றோன் எனக் கேட்க' வேண்டுமாயின் தாய் தன் குழந்தையை எத்தனையோ வகையில் போற்றி வளர்க்கத்தான் வேண்டும்.

## அன்பின் செல்வி!

இந்த இருபதாம் நூற்றுண்டில் ஒரு சிலர் நாகரிகம் என்னும் பேரால் தம் குழந்தைக்குப் பாலூட்டுவதும் வேண்டா என நிறுத்தி, குழந்தைச் செல்வத்திலும் தம் அழகுச் செல்வத்தையே பெரிதென மதிக்கின்றனர். அவர்தம் வாழ்வு இயற்கைக்கு மாறு பட்ட வாழ்வேயாகும். தாய்மை இன்பத்தின் முதற்படி பெற்ற குழந்தைக்குத் தன்பால் ஊட்டி வளர்ப்பதே யாகும். அந்த அடிப்படையே தவறுமாயின் பின் எந்த வேறு அடிப்படையில் குழந்தை வளரும்? மேலும், பெற்ற குழந்தையைப் பார்த்துக்கொள்ள 'ஆயா'வை அமர்த்திக் கொள்ளும் நாகரிகமும் இன்று நீ காணும் ஒன்றுதான். எனினும் அது குழந்தையை வளர்க்கும் நல்நெறியாகாது. ஆணும் பெண்ணும் அலுவலகங்களுக்குச் சென்று

உழைக்கும் நிலையில், பெற்ற பெண் வேறு என்ன செய்ய முடியும் என்று நீ எண்ணுவது எனக்குப் புரிகிறது. எனினும் அத் தாய் வீட்டில் இருக்கும்போது குழந்தையைப் போற்றி வளர்க்கத் தவற மாட்டாள் என்பது பெரும்பாலும் நாம் காண்பதுதான். என்றாலும் இதை நான் குறிக்கவில்லை. சில செல்வர் வீட்டுப் பெண்கள் தங்கள் அழகும் நாகரிக வெளிப்பகட்டும் குழந்தைக்குப் பால் கொடுப்பதால் குறைபடும் என்பதற்காகவே வளர்க்கும் வழக்கத்தைக் கைவிடுகிறார்கள். அவர்களைப் பற்றித் தான் நான் மேலே குறிப்பிட்டேன். நிற்க, பழங்கால இலக்கியங்களில் நற்றாய், செவிலித்தாய் என இரு தாயார் இருப்பதாகக் காண்கிறோமே என்று நீ கேட்கலாம். ஆனால் அதில் வரும் செவிலித்தாய் இப்போது இருப்பவர்போன்று கூலிக்கு வளர்ப்பவளல்லள். பெற்ற தாயை மறக்கவைப்பவளு மல்லள், அவள் நற்றாயோடு உடன் வளர்ந்து உற்ற தொடர்பு கொண்டவள். தாய் சீராட்டிப் பாலூட்டி வளர்த்த பிறகு அக்குழந்தையை மணப் பருவம்வரையில் வளர்ப்பவளாவள். எனவே செவிலி எந்த வகையிலும் இன்றைய 'கூலி' வளர்ப்பாளருக்கு ஒப்பாக மாட்டாள். இவையெல்லாம் பொது விதியாக நான்குறிப்பிடவில்லை என்பதை நீ அறிந்து கொள். எங்கோ ஒருசிலர் அறியாமையால் நாகரிகம் என்றபேரில் செய்யும் கொடுமைகளைத்தான் குறித்தேன். இளங்குழந்தையை வளர்ப்பதில்தான் எத்தனையோ இன்னல்கள் உள என்பதை நீ அறிந்துகொண்டு பக்குவமாக உன் குழந்தையை வளர்க்க முயலவேண்டும். இன்று குழந்தை வளர்ப்பைப்பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் சில நூல்கள் வந்துள்ளன. மற்றும் உன் பக்கத்திலுள்ள குழந்தைகளைப் பெற்று வளர்த்து வாழும் பெரியவர்களும் உனக்கு வழிகாட்டுவார்கள். நான் இரண்டொன்றைத்தான் காட்ட முடியும்.

## அன்புடைச் செல்வி !

பார் அனைத்தையும் பொய்யெனத் துறந்த பட்டினத்து அடிகள் தன் அன்னையை மட்டும் மறக்க வில்லை. அவரைத் தெய்வமாகப் போற்றினர். அவர் இருக்கும் வரையில் அடிகள் ஊரைவிட்டு வெளியே செல்ல வில்லை. அவர் இறந்த பிறகுதான் அந்தச் சேய் உள்ளம்—துறவு கொண்ட உள்ளம்—எப்படிக் கொதித்தது! பெற்றதாய் தன்னை எங்ஙெந்த வகையில் வளர்த்தாள் என்பதை எண்ணிப் பார்த்த அவ் உள்ளத்தின் நினைவுகள் உதட்டில் பாட்டாக உருப்பெற்று ஓடி வந்தன.

'ஐயிரண்டு திங்களாக அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்து—செய்யவொரு
கைப்புறத்தி லேந்திக் **கனக முலை தந்தாளை**
**எப்பிறப்பில் காண்பேன் இனி'**

'நொந்து சுமந்துபெற்று நோவாம லேந்தி**முலை**
**தந்து** வளர்த்தெடுத்துத் தாழாமே—அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்
தனக்கோ
**மெய்யிலே தீமூட்டு வேன்'**

'வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும்
தோள்மேலும்
கட்டி அணைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்'

என்று அவர் பாடும்போது நாம் நம்மை மறந்தே விடுவோம். ஆம் ! பெற்றதாய், இந்த வகைகளிலெல்லாம் என்றென்றும் மக்கள் நினைக்கும் வண்ணம், குழந்தையை வளர்த்துத்தான் ஆகவேண்டும்.

கரு வயிற்றில் தங்கியிருந்த காலத்தில் குழந்தை பெறும் மாற்றத்தையெல்லாம் பிறகு ஒரு கடிதத்தில் விளக்கமாக எழுதுகிறேன். அந்தப் பத்து மாதங்களிலும் நீ உன் உடலில் உண்டான பல்வேறு மாற்றங்களை அறிந்து உற்ற நோய்களைப் பொறுத்துக்கொண்டு, கரு வளரத்தக்க வகையில் உணவும் மருந்தும் உண்டு உன் வாட்டம் எண்ணாது உருத்தெரியாக் கரு வளர அரும்பாடுபட்டாய். இனியும் அப்பாடு பெரிதாகும். ஆம்! அக் குழந்தைக்கு ஏதேனும் நோய் வந்தால் நீதான் மருந்து சாப்பிட வேண்டும். அக்குழந்தைக்கு ஒன்றும் தெரியவழியில்லை அல்லவா! நீதான் இடைவிடாது அதன் பக்கத்தில் இருந்து ஈ, எறும்பு அதைத் தீண்டா வழியில் பாதுகாக்க வேண்டும். அதற்குப் பசி எடுக்கும் வேளை அறிந்து நீதான் பால் ஊட்டவேண்டும். ‘அம்மா பசிக்கிறது’ என்று அது வாய் திறந்து கேட்கச் சில ஆண்டுகள் கழிய வேண்டும். எனவே நீதான் அதன் பசியறிந்து, வேளையறிந்து உணவு அளிக்க வேண்டும். இரவுக் காலத்தில் அது உறங்காது உனக்குத் தொல்லை கொடுக்கலாம். மகப்பேறுற்ற சோர்விலே உனக்கு உறக்கம் மிகுதியாக வரலாம். எனினும் நீ அந்த இரவு வேளைகளில் உன் உறக்கத்தைத் தியாகம் செய்யத்தான் வேண்டும். இரவு முழுதும் அது தூங்காது அழுமாயின் நீயும் விழித்துக் கொண்டுதான் இருக்கவேண்டும். இவ்வளவும் செய்ய எத்தனையோ பக்கத் துணைகள் உனக்கு இருக்கலாம். என்றாலும் நீயே அதைச் செய்தால்தான் உனக்கு மனநிறைவு ஏற்படும். இவ்வுண்மையை நீ இதற்குள் அறிந்திருப்பாய் என நம்புகின்றேன்.

**குழந்தாய் !**

ஆம்! இனி நீ உன் குழந்தையைக் கொஞ்சித் தாலாட்டப் போகிறாய். என்றாலும் நீ எனக்குக்

குழந்தைதானே ! அந்தக் குழந்தை உள்ளத்தால் மறந்தும் பெற்ற பிள்ளையைக் காக்கச் சோம்பல்படாதே. அதற்கு வரும் நோயைப்போக்க நீ மருந்து உண்டு, அதன் வாழ்வு மலர நீ தியாகம்செய்து, அது வளர உன் வளத்தைச் சுருக்கித்தான் ஆகவேண்டும். சுருங்கச்சொன்னால் இனி உன் வாழ்வு, அக்குழந்தையின் வளர்ப்பிலே—அதன் வளர்ச்சியிலே—அதன் வாழ்விலே அமைந்து விட்டது. இனி உன்னை அக்குழவியிடமிருந்து பிரிப்பார் யார் ?

## அறிவுடைச் செல்வி !

இத்தனை உண்மைகளையும் அன்றுதொட்டு அறிவறிந்த மக்கள் உலகுக்கு உணர்த்திக்கொண்டேதான் வருகின்றனர். தமிழ் நாட்டிலே வாழ்ந்த புலவர்கள் இவ்வுண்மையைப் பலவகைகளில் உணர்த்துகிறார்கள். குழவியின்பம் பற்றிப் பாண்டியன் அறிவுடை நம்பி கூறிய பாட்டை முன் கடிதத்தில் கண்டாய். இதோ மற்றொரு அறிஞரை உனக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன். அவர் குழந்தை வளர்க்கும் முறைகளையெல்லாம் நன்கு அறிந்தவராக வேண்டும். எனவே அதை உவமையாக வைத்து ஓர் அரசனுக்கு அறிவுறுத்த நினைக்கிறார், நாடாளுகின்ற ஓர் அரசன் தாய் போன்றவன்; நாடு குழவிபோன்றது. நாடென ஈண்டு வெறும் மண்ணை மட்டும் நான் குறிக்கவில்லை. அதிலே வாழ்கின்ற மக்களையும் பிற உயிர்களையுமே நான் இங்கே குறிக்கின்றேன், தன் நாட்டில் வாழ்கின்ற மக்கள் வாழ்வே தன் வாழ்வாக எண்ணவேண்டியவன் அரசன். அவர்களுக்கு ஒருநோய் - அல்லல் – துன்பம் — அவல நிலை வந்தால் அதை நீக்கத் தான் மருந்துண்ணும் வகையில் முன்னின்று வழிகாண வேண்டும். எங்கோ உப்பரிகையில் வாழாது, தானே முன்வந்து அவர்கள் குறையை

நீக்கவேண்டும். சில குறைகளை அவர்கள் காட்டியும் வாய் திறந்தும் கூற முடியாதிருக்கலாம். ஆனால் அவற்றை நாடி அறிந்து அக்குறை களைய முற்பட வேண்டும். அக்குடிகள் வாடத் தான் வாழுதல் அரச நெறிக்கு—அமைச்சு நெறிக்கு—ஆட்சி நெறிக்கு மாறுபட்டது. சுருங்கக் கூறின் மேலே நான் உனக்குக் காட்டிய வழியில்—பெற்ற குழவியைத் தாய் தழுவி ஓம்பி அல்லல் வராது ஆதரித்துக் காக்கும் வழியில்—நாடாளும் நல்லவர்கள் தம்நாட்டை நன்கு காக்கவேண்டும்.

அவ்வாறு காக்கும் உள்ளத்து அருளும் அன்பும் நிலைபெற்றிருக்கும். அல்லா உள்ளத்தோ வன்பும் வன்கணும் குடிகொள்ளும். எனவே அரசன் வன்புடையார் போன்று மக்களை வாட்டாது, அன்புகொண்டு 'குழவியைத் தாய் வளர்ப்பது போன்று' நாட்டைக் காக்க வேண்டு மென்கின்றார் அப்புலவர். ஆம்! புலவர் எளிமையாகச் சொல்லிவிட்டார். நானும் உனக்கு எளிமையில் எத்தனைப் பக்கம் வேண்டுமானாலும் எழுதி விடலாம். ஆனால் அதை நீ செயலில் மேற்கொள்ளும் போதல்லவா அதன் அருமைநிலை உனக்குத் தெரியும். இதையேதான் அந்தப் புலவரும் சொல்லிய உடன் எண்ணிப்பார்க்கிறார். குழந்தை வளர்ப்பது எளிதன்று. அது செய்தற்கரிய ஒரு சிறப்பு என உணர்த்துகின்றது அவர் உள்ளம். அத்தகைய சிந்தனை உடைய புலவர் யார் என்று நீ அறிய விரும்புகிறா யல்லவா? உன் போன்ற மக்களைப் பெற்று அவர்களை வளர்க்கும் அருமை அறிந்த அப்புலவரை உனக்கு இதோ அறிமுகப் படுத்தி விடுகிறேன். அவர் பெயர் **நரிவெரூத் தலையார்** என்பது. அவர் சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாட்கோ பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேர மன்னனைப் புறநானூற்று ஐந்தாம் பாடலால் பாராட்டி வாழ்த்துகின்றார். அதிலேதான் அவன் நாடு காக்கவேண்டிய பண்பை

மக்களைப் பெற்றூர்மேல் ஏற்றிக் காட்டுகின்றூர். இதோ அவர் வாய்மொழியை நீயே படி.

'எருமை அன்ன கருங்கல் இடைதோறு
ஆனிற் பரக்கும் யானைய முன்பின்
கானக நாடனை நீயோ பெரும!
நீயோர் ஆகலின் நின்ஒன்று மொழிவல்;
அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொடு ஒன்றூது, காவல்
**குழவி கொள்பவரின் ஓம்புமதி**
**அளிதோ தானே, அதுபெறலருங் குறைத்தே'**

(புறம் 5)

கடைசி அடிகளை நீ படித்து படித்து அதன் சிறப்பை நன்கு உணர்ந்துகொள். அதில்தான் அவர் குழந்தையை வளர்ப்பதில் உள்ள அருமை பெருமைகளையெல்லாம் எப்படிச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறூர்!

அன்புள்ள,
**அப்பா.**

## 3. புதல்வர் தம் மழலை

**அன்புடைச் செல்வி மங்கையர்க்கரசிக்கு,**

எனது முன்னைய கடிதங்களைப்பற்றி நீ எழுதிய குறிப்பை அறிந்தேன். குழந்தை வளர வளரத்தான் அதனுடைய இன்பம் மெல்லமெல்லப் புலனாகும். இளங் குழந்தை எப்போதும் அழுதுகொண்டிருக்கிறது எனக் கடிதம் எழுதியுள்ளாய், இளங்குழந்தைகள் அழாது வேறு என்ன செய்யும்? வேண்டியதை அறிந்து வாய் திறந்து கேட்க முடியுமா ?. பேச முடியுமா? பேசினால் தான் புரியுமா? அதன் அழுகைக் குறிப்பறிந்து நாம் தாம் அதற்கு வேண்டியதைக் காலம் அறிந்து தருதல் வேண்டும். குழந்தைகள் அழாது இருந்தாலும் அழாத 'மக்கு'ப்பிள்ளை என்பார்கள். அதிகமாக அழுதாலும் தொல்லை கருதிக் குறைபடுவார்கள். என்றாலும் அழா திருப்பதைக் காட்டிலும் அதிகமாக அழுதலே நல்லது. எனவே நீ குழந்தை அழுவதைப் பொருட்படுத்தாது அதற்கு வேண்டிய வகையில் வேண்டிய பால் அளித் துப் பாதுகாப்பாய் என நம்புகிறேன்.

குழந்தை வாய்திறந்து பேச ஆரம்பித்தாலும் உடனே அதைப்புரிந்து கொள்வது அவ்வளவு எளிது அன்று. குழந்தை மொழியே தனியானது. என்றாலும் இன்று மொழிநூல் ஆராய்ச்சி செய்கின்ற உலகப் பெரும் பேராசிரியர்களெல்லாம் இக்குழந்தை மொழியைக் கொண்டே மொழிவரலாற்றை ஆராய முற்படுகின்றனர். எனவே புரியாத மொழி பேசும் குழந்தை உலகுக்குத் தன் வாய்ச் சொல்வழி பல உண்மைகளை உணர வைக்கின்றது. அக்குழந்தை வாய்திறந்து மெள்ள மெள்ளப் பேசும் அசைவுச் சொற்களையும் அவற்றின் சிதைவுகளையும் காண்கின்ற ஆசிரியர் ஒருவர் அக்குழந்தை முதலில் தன் உறவினர்களுள் முக்கியமானவரை அறிந்து விளித்தே பிறகு மற்றவரை விளக்கிறது என்பர். 'தாத்தா,' 'ஆயா' 'அம்மா', 'ஆத்தாள்' போன்ற சொற்களே முதலில் குழந்தைகள் வாயில் சுலபமாகவரும் சொற்கள் என எடுத்துக் காட்டுவர் அவர்; பிறகு பிற உறவின்முறைச் சொற்களாகிய அத்தை, அக்கா, அண்ணன், மாமா போன்ற சொற்கள் வரும் என்பர். இதை அப்படியே சரி என்று நாம் கொள்ளாவிட்டாலும் குழந்தை தாய் முதலியவர்களை மற்றவர் சொல்லிக்காட்டாமலேயே 'அம்மா' போன்ற சொற்களைக் கொண்டு அழைப்பதைக் காண்கிறோமல்லவா? உன் குழந்தை பேசத் தொடங்கியதும்- வாய்திறந்து உன்னை 'அம்மா' என்று அழைக்கத் தொடங்கியதும் – அவ்வின்பம் உனக்கு நன்கு புரியும். அதை எழுதிக் காட்டமுடியாது. எனினும் பெரியோர் கூறிய இரண்டொன்றை உனக்கு இன்று எழுதி அனுப்புகிறேன்.

'மக்கள் பேறு' பற்றி வள்ளுவர் கூறியிருப்பதை முன்னமே காட்டியுள்ளேன். அவர் குழந்தையின் வாய்ச் சொல் பற்றிக் கூறியிருப்பதை இங்கு நினைத்துப் பார்

**மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்**
**சொற்கேட்டல் இன்பம் செவிக்கு** (குறள் 66)

*எனக் கூறிப் பின்னும் அவர் அச் சொல்லின்பத்தை நன்கு விளக்கிக் காட்டுகின்றார். உலகில்—தமிழ் இசை உலகில்-சிறந்த இசைக் கருவிகள் குழலும் யாழுமே. யாழ் எத்தகையது என்பதை இன்று திட்டமாக அறிய முடியாவிட்டாலும், பேரறிஞர் விபுலாநந்த அடிகளார் எழுதிய 'யாழ் நூல்'வழி அதன்சிறப்பை அறியமுடியும். யாழ்போன்ற வீணையை நீ நன்கு அறிவாய். குழல் ஒலியும் உனக்குப் பழக்கமானதே. வானொலிப் பெட்டியைத் திறந்துவைத்துக் கொண்டு இக்குழல் ஒலியை நீ எத்தனை எத்தனை தடவை அனுபவித்திருக்கிறாய் : ஆம்! இனி அக்குழல் இசையும் யாழ் இசையும் உனக்கு இன்பம் தாரா! அனைத்தினுக்கும் மேலாக உன் குழந்தையின் வாய்ச் சொல்லே உனக்கு இன்பம் தருவதாகும். இதைத் திருவள்ளுவனார்*

**குழல்இனிது யாழ்இனிது என்ப தம்மக்கள்**
**மழலைச்சொற் கேளா தவர்** (குறள் 65)

*என நன்கு காட்டுகின்றார். மற்றக் குழந்தைகளின் சொற்கள் ஒரு வேளை ஒருசிலருக்கு இன்பம் தராததாக இருக்கலாம், ஆனால் தம் குழந்தையின் மலைச்சொல் எப்படியிருப்பினும் பெற்றவருக்கு இன்பம் தராது போகுமா? எனவேதான் 'தம் மக்கள்' என்றே வலியுறுத்துகின்றார்.*

**அன்பின் அரசி,**

*குழந்தை மழலை மொழியில் அப்படி மகிழ என்ன இருக்கிறது எனச் சிலர் நினைப்பர். 'பெற்றவர் அறிவர் பிள்ளையின் அருமை' என்றதொரு பழமொழி நாட்டில் உண்டு. ஆம்! குழந்தைச் செல்வச் சிறப்பு அவர்களுக்குத்தான் நன்கு விளங்கும். தம் குழந்தைகள் பேசும் மொழியில் அவர்கள் — அப்பெற்றவர்கள் — என்னதான்*

காண்கின்றார்களோ? அச்சொற்கள் அவர்களுக்கு விளக்கும் பொருள்தான் என்னவோ? அதனால் அவர்கள் என்ன பெறுவார்களோ? தெரியாது, என்றாலும் அந்தச் சொல் அளிக்கும் இன்பத்தின் எல்லையை யாரே கணக்கிட்டு உரைக்கவல்லார்!

குழந்தையின் வாய்ச் சொல்லுக்குப் பொருள் கிடையாது, யாழ் போலும் குழல் போலும் இனிய நல் ஒலிகளை எழுப்பும் ஆற்றலும் அச்சொற்களுக்குக் கிடையாது. காலமறிந்தும் இடமறிந்தும் செய்வினையின் மூலமறிந்தும் குறிப்புணர்ந்தும் காட்டும் சொற்களாகவும் அவை இருக்கமாட்டா! அப்படியிருந்தும் அந்த மழலைச் சொல்லை, பெற்றவர்கள் கேட்டுத் தம்மை மறந்து மகிழ்கின்றார்கள் அன்றோ! அந்தக் குழந்தையின் வாய்ச் சொல்லுக்குப் பொருள் இல்லையாயினும், பெற்றதாய் பொருள் காட்டி 'இதைத்தான் குழந்தை சொல்லுகிறது' என்று மற்றவரிடம் கூறிப் பெருமை கொள்ளும் காட்சியை நீ கண்டிருக்கிறாய் அல்லவா! அதே நிலையில் நீ உன் குழந்தையின் வாய்ச்சொல்லுக்குப் புதுப்புதுப் பொருள்காணும் கால எல்லையில் கால்வைத்திருக்கிறாய். அதன் ஒவ்வொரு சொல்லும் உன்னை வாழ்விக்க வல்லது; அருள் நிரம்பியது; அமிர்தம் போன்றது. இந்த உண்மைகளையெல்லாம் உணர்ந்த ஒரு சங்கப் புலவர் அவற்றைத் தொகுத்துப் பாட்டாகத் தந்துள்ளார்.

ஔவையாரைப் பற்றி நீ நன்கு அறிவாய். முன் கடிதங்களில் குறித்த சங்கப்புலவர்கள் உனக்கு ஒரு வேளை புதியவராக இருக்கலாம், ஔவையார் என்றதும் 'ஆத்திசூடி அமர்ந்ததேவனை' எனத் தொடங்குவாய் என்பது எனக்குத் தெரியும். அவர் பிள்ளைகள் உள்ளங் கொள்ளுமாறு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை,

நல்வழி போன்ற நல்ல நீதி நூல்களைப் பாடியவர். அவர் பாடல்களை நீ ஆரம்பப்பள்ளியில் படித்திருக்கிறாய். இங்கே நான் கூறிய ஔவை அவரினும் வேறுபட்டவர். அவர் வாழ்ந்த காலத்துக்கு ஆயிரம் ஆண்டுகள் முற்பட்டு வாழ்ந்தவர்; சங்ககாலத்தவர். அவர் பாடல்கள் புறநானூற்றில் உள்ளன. அவர் அரசரோடு கலந்து அவர்களுக்கு இடையில் இருந்த பிணக்கையெல்லாம் நீக்கியவர். தனக்கென வைத்திருந்த நெல்லிக்கனியை அதிகமான் என்னும் மன்னன் இந்த ஔவைக்கு ஈந்து அவரை நெடுங்காலம் வாழவைத்தான். அப்புலவர் பாடிய புறப்பாடல்களுள் இரண்டொன்றை நீ மேல் வகுப்பில் படித்திருக்கலாம். அவரே இக்குழந்தை வாய்ச் சொல்லை அழகாகப் பாராட்டுகின்றார். அப்படிப் பாராட்ட அவருக்கு அவசியம் எப்படி ஏற்பட்டது எனக் கேட்கிறாயா? அவர் பாட்டே அதற்குப் பதில் சொல்லுகிறது.

அதிகமான் அஞ்சியை விளித்து ஔவையார் அப்பாடலைப் பாடுகிறார். அதிகமானுடைய அருளை வேட்டு விரும்பும் பாடல் அது. தன்பாடலைக் குழந்தையின் பொருள் அறியா வாய்ச்சொல்லுக்கு உவமைப்படுத்துகின்றார். படுத்தி, குழந்தை வாய்ச்சொல்லைக் கேட்ட அன்னையும் அத்தனும் அக்குழத்தையிடம் அன்பொடு அருளையும் பெய்து பெருமகிழ் வெய்துதல்போல, அதிகமானும் தனக்கு அருள் செய்ய வேண்டும் என வேண்டிக்கொள்ளுகின்றார். குழந்தை இன்பத்தையும் அதன் சொல்லின்பத்தையும் அதிகமான் முன்னமே உற்று அறிந்தவனாகத்தான் இருந்திருக்கவேண்டும். எனவேதான் இப்பாடலைக் கேட்டு ஔவைக்கு அருள் செய்து தான் உண்ணவைத்திருந்த நெல்லிக்கனியையும் ஈந்தான். இதோ அந்த ஔவையின் பாட்டைத் தந்து விடுகிறேன்.

'யாழொடும் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருள் அறிவாரா வாயினும், தந்தையர்க்கு
அருள வந்தனவால் புதல்வர்தம் மழலை;
என்வாய்ச் சொல்லும் அன்ன; ஒன்னார்
கடிமதில் அரண்பல கடந்த
நெடுமான் அஞ்சி நீ அருளன் மாறே' (புறம் 92)

இதில் அதிகமானை நோக்கிப் பாடுவதால், அவன் தந்தை நிலையில் உள்ளமையின் 'தந்தையர்க்கு' என்றார். உன்போன்ற தாயர்க்கும் இது பொருந்துவதாகும்.

## அன்புடைச் செல்வி!

வெண்பாப் பாடுவதில் வல்லவர் புகழேந்திப்புலவர் என்பதை நீ அறிவாய். நளனுடைய கதையை அழகுத் தமிழில் வடித்துத்தந்த அப்புலவரை 'வெண்பாவிற் புகழேந்தி' என்றே பாராட்டுவர் புலவர். குழந்தை நலத்தை அவர் சிறக்கப் பாராட்டுகிறார், அதிலும் அவர் தம் வாய்மொழிபற்றி அவர் காட்டும் சிறப்பு போற்றற் குரியது. உலகில் எத்தனையோபேர் செல்வச் செருக் காலும் கல்விமுதலியன பெற்ற தருக்காலும் தம்மை மறந்து இறுமாக்கின்றனர். அவர்தம் இறுமாப்பு யாவும், அவர் மக்களைப் பெறுதவராயின் இரக்கத் துக்கு உரியனவே என்பது புலவர் முடிவு. அக் குதலை வாய் மக்களைத்தான் அவர் எத்தனை அடைமொழி கொடுத்து விளக்குகின்றார்.

இளங்குழந்தைகள் கிண்கிணி அணிந்து தளர் நடை இடுவார்கள், இவர்தம் தளர்நடை பற்றி உனக் குப் பின்னொரு கடிதத்தில் விளக்கி எழுதுகிறேன். இங்கே புகழேந்தியின் பாடலை மட்டும் காட்டி முடிக் கின்றேன்.

'சொன்ன கலையின் துறையனைத்தும் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம் இன்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலைக் கேளாச் செவி'

என்பது அவர் பாட்டே!

இத்தகைய இனிய தீஞ்சொல் பற்றிப் பலப்பல புலவர்கள் பலவாறு பாராட்டியுள்ளார்கள். அவைகளை யெல்லாம் ஈண்டு காட்டிக்கொண்டே செல்லின் பெருகும். அகநானூற்றில் சாகலாசனுர் என்ற புலவர்,

'நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி அவிர்இதழ் புரையும்
மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
**நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்**
யாவரும் விழையும் பொலந்தொடிப் **புதல்வனை'**

(அகம் 16)

என இப்பிள்ளையின் மழலை மொழியைப் பாராட்டுகின்றூர். இப்படிப் பாராட்டியவர் எத்தனையோ புலவர்கள். இன்று இந்த அளவோடு இக்கடிதத்தை முடிக்கிறேன். நாளை வேறு தொடர்ந்து எழுதுகிறேன்.

அன்புள்ள,
**அப்பா.**

## 4. மறத்துக்கும் அஃதே துணை

**அன்புள்ள மங்கையர்க்கரசிக்கு,**

*எனது முன்னைய கடிதங்களையெல்லாம் முறையாகப் படித்திருப்பாய் என நினைக்கின்றேன். மக்கட் பிறவியில் பெருஞ் செல்வங்களுள் சிறந்தது குழந்தைச் செல்வமே என்பதறிந்தாய். ஆம்! அக்குழந்தை, பெற்றெடுத்தவர்களுக்கு கண்டு, கேட்டு, உற்று அறியும் வகையில் பலப் பல இன்பம் தரும் ஒன்று. மற்றும் அதே குழந்தை பெரியவர்கள்-பெற்றவர்கள்-தவறிவிடுவார்களாயின் திருத்தும் ஞானச் செல்வமாகவும் விளங்குகின்றது. திருவள்ளுவனார்*

*'அறத்திற்கே அன்பு சார்புஎன்ப அறியார்*
*மறத்துக்கும் அஃதே துணை'*

*என்று அன்பின் சிறப்பினைக் காட்டுகின்றார். பின் அடிக்கு விளக்கம் கூறவந்த பரிமேலழகர் "மறத்தை நீக்குதற்கும்*

துணையாம், என்பார், 'மறத்திற்கும் அஃதே துணை' என்ருர்" எனக் காட்டினர். எனவே அன்பு அறவழியில் செல்வோரை வாழவைப்பதோடு, மறவழியில் செல்வோரையும் திருத்தி வாழ வைக்கிறது என அறிகிருேம். அன்பின் செயல் அத்துணைப் பெருமை வாய்ந்தது. அரசி! குழந்தைச் செல்வமும் இக்குறளுக்கு ஒப்பவே சிறக்கின்றது. பெற்ற தாய்தந்தையர் தவறும் நிலையில் முன்னின்று அவர்களைத் திருத்தவும் செய்கிறது.

**நலமார் செல்வி!**

தமிழ்நாட்டுச் சிறந்த பண்பாடுகளுக்கிடையில் ஒரு கரிய புள்ளியும் எப்போதோ உண்டாகிவிட்டது. தொல்காப்பியனர் காலந் தொடங்கி நேற்று வரை அது வாழ்ந்தேதான் வந்தது. அதுதான் பரத்தையில் பிரிதல் என்னும் நிலை. மனைவியைக் கொண்ட தலைவன் இல்லறவாழ்வில் இயங்கும்போது தன் உரிமை மனைவியை விட்டுப் பரத்தையராம் பிறமகளிரை நாடி இன்பம் பெறுவானும். இது எத்தகைய இழிதகைமை என எண்ணத் தோன்றுகின்றதல்லவா! என்ருலும் பல புலவர்கள் இந்த இழிவாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகின்றனர். அதைப்பற்றி நான் இங்கு விளக்கிக் கொண்டிருக்கத் தேவை இல்லை. அது நாட்டிற்கும் இந்த ஏட்டிற்கும் தேவை இல்லாத ஒன்று. இங்கு நான் உனக்குக் கூற விரும்பிய ஒன்று, அக்கொடிய நிலையிலிருந்து தன் தந்தையைத் திரும்பிக் கொணரும் குழந்தைச் செல்வத்தைப் பற்றித்தான்.

பரத்தைமனை செல்லும் தலைவன் தன் குழந்தையின் காரணமாக அச்செயல் விடுத்துத் தன் வீடு திரும்பும் காட்சியைப் பல புலவர்கள் பாராட்டுகின்ருர்கள். ஓரிரு காட்சியை இங்கே உனக்குக் காட்டலாம் என நினைக்

இன்றேன். தலைவி தான் பெற்ற நற்குழவியை மடியில் வைத்துப் பாராட்டிப் போற்றுகின்ருள். அதே வேளையில் பரத்தை வீட்டுக்குப் பிரிந்துசென்ற தலைமகன் வெளியே வாயிற்புறத்து வந்திருக்கின்ருன். உள்ளே வர அஞ்சினுன் போலும். அவனது இழிசெயல் அவனை நாண வைக்கிறது. எனவே எண்ணுத எண்ணி எண்ணி ஏங்கி நிற்கின்ருன் தலைவன். ‘தலைவி தன்னை ஏற்பாள் கொல்லோ?’ என்ற வினு எழுகிறது. அதே வேளையில் குழந்தையோடு கொஞ்சும் தலைவியின் வாய் பேசுகிறது. குழந்தையைப் பாராட்டு முகத்தான்–அக்குழந்தையின் செவ்வியை விளக்கு முகத்தான்–அக்குழவியின் தளர் நடையையும், மழலை மொழியையும், பிற இயல்புகளையும் தான் கண்டும் கேட்டும் களிக்கின்ற முகத்தான்-அவற்றின் இன்ப நினைவுகளைக் கூறி, அதே வேளையில் தலைவன் அடாத செயலால் தன் உள்ளத்து அமையும் துன்பச் சாயலையும் காட்டுகின்ருள் தலைவி. தலைவனை நேரில் கண்டிக்க அவள் உள்ளம் தயங்கி இருக்கும். பெண்களுக்கு உள்ள நல் இயல்பு அதுதானே. எனவே, அவள் ‘சிறைப்புறத் தாகுைத்’ தான் தன் மதலையை முன்னிறுத்தி உள்ளத்தைத் திறந்து காட்டுகிருள்.

அவள் தன் குழந்தையை நோக்கி ‘அன்புச் செல்வமே! உன் மழலை மொழி எனக்கு இன்பம் தருகிறது. உன் தளர் நடை காணும்போது நான் மகிழ்கின்றேன். உனக்கு அம்புலி காட்டி உள மகிழ்கின்றேன். ஆனல் அதே வேளையில் உன் தந்தையின் அடாத செயலை நான் காணும்போதும் கேட்கும்போதும் நெஞ்சம் அஞ்சுகிறது. என் செல்வமே! இந்த உன் தந்தையின் கொடுஞ் செயலுக்கு விடிவு உண்டாகாதா?’ என்று பேசி அச்சொற்களைக் கணவனின் செவிப்படவைக்கிருள். இச்சொற்களைக் கேட்டபின்பும் தலைவன் திருந்தாதிருப்பானே? ஓடிவந்து மனைவியின் அடிபற்றி மன்னிப்புக் கேட்டுத்

திருத்தி நலம் பெற்றிருப்பர் னல்லனே! எனவே குழந்தை இவ்வாறு மறத்தை மாற்றும் நல்மருந்தாகவும், அமை கின்றது.

**அரசி !**

உனக்கு நான் மேலே காட்டிய கருத்துடைய பாட்டைக் கேட்கவேண்டும் என்ற விருப்பம் உள் ளதை நான் அறிவேன். ஆகவே அந்தக் கலித்தொகை அடிகளைக் கீழே தந்து விடுகிறேன். ஆம்! கலித்தொகை என்னும்போது சங்கச் செய்யுட்களின் சிறப்பெல்லாம் உனக்கு முன்னேதோன்றும். அத்தொகுதிகளுக்குள்ளே இக் கலித்தொகையே சிறந்தது எனக் கருதித்தானே அதைக் 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' எனப் போற்றினர் புலவர். கலித்தொகையில் ஐந்திணைகளுக்கும் தனித் தனிப் பாடல்கள் உள்ளன. மருதக் கலியைப் பாடிய புலவர் இளநாகனர் என்பவர். அவர்தம் பாடல் சிறப் பின் இயல்புபற்றி அவர் 'மருதன் இளநாகனர்' எனவே அழைக்கப்பெற்றார். அவர்தம் பல பாடல்களுக்குள் இப் பிள்ளைமை இன்பத்தைப் பாராட்டுகின்றார். அவற்றுள் ஒன்றே இக்கருத்தமைந்த பாடல். இதோ அவர் வாக்கு, நீயேபடித்து அறிந்துகொள்.

''கிளர்மணி ஆர்ப்ப ஆர்ப்பச் சாஅய்ச் சாஅய்ச் செல்லும்
தளர்நடை காண்டல் இனிது; மற்று, இன்னதே
'உளம்' என்னா நுந்தைமாட்டு எவ்வம் உழப்பார்
வனைநெகிழ்ப்பு யாம் காணும்கால்''

''ஐய! காமரு நோக்கினை 'அத்தத்தா' என்னும் நின்
தேமொழி கேட்டல் இனிது; மற்று, இன்னதே
உய்வு இன்றி நுந்தை நலன் உணச் சாஅய்ச் சாஅய்மார்
எவ்வநோய் யாம் காணும்கால்''

''ஐய! 'திங்கட் குழவி வருக' என, யான் நின்னை
அம்புலி காட்டல் இனிது; மற்று, இன்றுதே
நல்காது நுந்தை புறம் மாறப்பட்டவர்
அல்குல்வரி யாம் காணும்கால்'' (கலி 80)

என்பது அவர் பாடிய பாட்டு. இதில் தலைவன் செயலைப் பரத்தையர்மேல் ஏற்றிக்காட்டி அவனைத் திருத்திய சிறப்பு எண்ணத்தக்கது ஆகும். இதில் இளநாகனுர் மற்றொரு சிறப்பையும் காட்ட நினைக்கின்றுர். பெற்றவர்களுக்குப் பிள்ளைமை இன்பமே பெரிது அல்லவா! தன் இளம் குழந்தையின் மழலைச் சொல்லைக் கேட்டு மகிழ்வதிலும், பொன்மேனி கண்டு பூரிப்பு எய்துவதிலும், அக்குழந்தையை அணைந்து மகிழ்வு எய்துவதிலும் உள்ள இன்பம் பெரிது அல்லவா! ஆம்! அதை இப்போது நீ சிறிது சிறிதாகப் பெற்று வருகின்றுய் அல்லவா! இந்த இன்பத்தை பெறவேண்டிய தலைவன் உடன் இல்லையே. இங்குப் பாடலில் வருகின்ற தலைவன் உன் தலைவனைப் போன்று ஓதற்குப் பிரிந்தவன் அல்லன். ஓதற்பிரிவு அறிவறிந்த உலகத்தாரால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று. ஆனல் இவன் உலகத்தோரால் வெறுக்கத்தக்க பரத்தைமை வாழ்வில் பிரிந்திருக்கிறுன். அதனல் பிள்ளைச் செல்வத்தால் பெறும் பயன்களையெல்லாம் இழந்து விட்டான் என்ற உண்மையையும் இவ்வாசிரியர் சுட்டிக் காட்டுகின்றுர்.

இந்த ஒரு பாடலால் மட்டுமன்றி, மருதன் இளநாகனுர் இன்னும் பல பாடங்களாலே குழந்தை, பெற்றவர் மனமாருட்டத்தைப் போக்கி அவர்களை ஒன்று சேர்க்கும் அருமருந்தாக அமைகின்ற தன்மையை எடுத்துக் காட்டுகின்றுர். அவற்றுள் சிலவற்றை அவசியமிருப்பின் அடுத்து வரும் கடிதங்களில் விளக்கிக் காட்டுகின்றேன். ஆம்: குழந்தை அறச்செய லாக்குவதற்கும் மறச்செயல் மாற்றுவதற்கும் மருந்ததாக அமைவதை உணர்ந்துகொள்.

**செல்வி !**

*இனி இங்கு மற்ருென்றும எண்ணவேண்டும். இன்று நாட்டில் இத்தகைய பரத்தமை வழக்கம் கிடையாது. தனிப்பட்ட வகையில் ஒரு சிலர் அவ்வாழ்வை மேற்கொள்ள விரும்பினுலும் நாட்டுச் சட்டம் அதற்கு இடம் தராது. மேனுட்டு நாகரிகச் சேற்றில் தம்மை மறந்து மூழ்க நினைக்கும் ஒருசிலர், வாழ்வில் ஒரு வேளை வழுக்கி விழ நேரினும் நாட்டுச் சட்டமும் நல்லவர் அறிவுறுத்தலும் அவர்களைத் திருத்துவதைக் காண முடியும். எனவே இன்று இப்பரத்தமையும் அதை ஒட்டிய செயல்களும் அநாகரிகச் செயல்களாகத் தள்ளப்பட்டன. ஆகவே இத்தகைய காட்சிகளை இலக்கியத்தில் தான் காணமுடியும். ஆம்! அந்த இலக்கியங்களைத்தான் புலவர்கள் எத்தனை எத்தனை அழகாகப் பாடியுள்ளார்கள் என்பதை நீயே வாய்ப்பு நேரும்போது கலித்தொகை போன்ற இலக்கியங்களைப் படித்துப்பார்த்து அறிந்து கொள். நானும் அடுத்த கடிதத்தில் இன்னும் சில இலக்கியங்களைக் காட்டுகின்றேன். இன்று இது போதும்.*

*அன்புள்ள,*

**அப்பா.**

## 5. தாயில் தூவாக் குழவி

**அன்புள்ள அரசி !**

எனது முன்னைய கடிதங்களை நன்கு படித்திருப்பாய். இன்று தாய் குழந்தையைக் காப்பாற்ற வேண்டிய வகைகளில் இரண்டொன்றை உனக்குச் சொல்லலாம் என நினைக்கிறேன். குழந்தை, தன்னைப் பெற்றவர்களுக்கு என்னென்ன வகையில் இன்ப மூட்டி மகிழ்விக்கின்றது என்பதை இப்போது நீயே நன்கு அறிந்து கொண்டிருப்பாய். நான் ஏட்டில் எழுதியதைக் காட்டிலும் ஆயிரமாயிரம் இன்ப உணர்வுகளை உனக்கு உன் குழந்தை நல்கி இருக்குமல்லவா! ஆம்! அத்தகைய செல்வத்துட் செல்வமாகிய குழந்தையை ஓம்பி வளர்க்கும் பொறுப்பு உன்னுடையதே யாகும்.

இன்று குழந்தை வளர்ப்பினைப் பற்றிச் சிற்சில நூல்கள் தமிழிலும் பிறமொழிகளிலும் வெளிவருகின்றன. பெற்ற குழந்தையைப் போற்றிப் பாராட்டிக் கண்மணி போன்று காத்தல் பெரியவர் கடமை என்பதை அவை

விளக்கியிருக்கலாம். நான் அத்துணை விரிவாக உனக்கு எழுதத் தேவையில்லை. என்றாலும் ஒரு சிலவற்றை மட்டும் இக்கடிதத்தில் உனக்கு எடுத்துக் காட்ட விரும்புகின்றேன்.

இன்றைய இருபதாம் நூற்றாண்டின் நாகரிகத்திடையிலே சிலபெண்கள் குழந்தையைப் பெறுவதே தம் அழகுக்குக் கேடுபயக்கும் என எண்ணுகின்றனர். ஒருசில பெண்கள் தமதுசெல்வத்தின் பெருமையினாலோ, அன்றி வேறு காரணத்தாலோ தாம் பெற்ற குழந்தைகளைத் தாமே வளக்காமல் வேறு பணிப்பெண்களை வைத்து வளர்க்கின்றார்கள். ஒருசிலர் தம்முடைய குழந்தைகளுக்குப் பால் கொடுக்கவும்கூட அஞ்சித் தம் புற அழகைப் பாதுகாத்துக் கொள்ள விரும்புகின்றனர். அவர்களை எல்லாம் எண்ணின், உலகில் அக அழகை விரும்பாத – புற அழகைப் போற்றும் – அவர்களால் அவர்தம் வீட்டுக்கோ நாட்டுக்கோ பயன் விளையாது என்பது விளங்கும்.

**அரசி !**

குழந்தையைப் போற்றி வளர்த்தல் அவ்வளவு எளிதன்று. குழந்தை பிறக்குமுன்பே தாய் பலவகையில் தன் உணவு முதலியவற்றில் வரும் ஆசைகளை அடக்கிக் கொள்ளவேண்டும், வயிற்றிடை வளரும் சிறுகருவின் வளர்ச்சிக்கு இடையூறுதரும் எந்த உணவையும் உண்ணலாகாது; எந்தச் செயலையும் செய்யலாகாது. நல்முறையில் மகப்பேறு நடக்கத்தக்கவகையில் உடல் நலத்தைப் போற்ற வேண்டுவது தாயர் கடன், ஆம்; நீ அந்தவகையிலெல்லாம் உடல் நலம்பேணி நன்மகப் பேற்றினை அடைந்துள்ளாய். இனி அதைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாப்பதில் உறுதி கொண்டு சிறக்கச் செயலாற்ற வேண்டும்.

குழந்தைக்கு யாதொரு பிணியும் அணுகாவகையில் பாதுகாத்தல் அவசியம், அதற்குரிய சுற்றுச் சூழலை அமைத்துக்கொள்ளல் நல்லது. உயர்ந்த உப்பரிகையில் வாழ்ந்தாலும், சென்னை நகரில் பலர் வாழ்வதுபோன்று ஒண்டுக் குடியாக வாழ்ந்தாலும் அன்றிக் குடிசையில் வாழ்ந்தாலும் அந்த நல்ல சூழலை ஏற்படுத்திக் கொள்ளலாம். மிக்க வெப்பநிலையிலோ மிக்க குளிர் நிலையிலோ இல்லாதபடி குழந்தையை ஆடையால் பாதுகாக்க வேண்டும். பட்டாடையும் கம்பளியும் பகட்டுடையும் வேண்டுமென நான் கூறமாட்டேன். அது வட்டும் கந்தலுமாக இருந்தாலும் குழந்தைக்கு நலம் கெடாத நல்ல தூய்மை உடையதாக இருக்கவேண்டும். 'கந்தையானாலும் கசக்கிக்கட்டு' என்ற பழமொழி பெரியவர்களுக்கு மட்டுமன்று. இளங் குழந்தைகள் ஆடையையும் அதற்குப் பயன்படும் துணிமணிகளையும் அவ்வப்போது கசக்கித் துப்புரவு செய்தல் வேண்டும். அழுக்குப் பொருள்கள் ஒன்றும் அதன் அருகில் இருக்க விடலாகாது. குழந்தைவிடும் சிறுநீர் மலம் ஆகியவற்றை உடனுக்குடன் கண்டு விலக்கித் தூய்மைப்படுத்த வேண்டும். சற்று வளர்ந்த குழந்தைகளாயின் எதையும் எடுத்து வாயில் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மை உண்டாகிவிடும். அதுகாலை அதன் கையில் ஒன்றும் பற்றுதவகையில் பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டும்.

குழந்தையின் உடலுக்கு நோய்வராமல் பாதுகாக்கும் பொறுப்பு தாயின் கையிலேயே உள்ளது. அதற்கு நோய்வரின் தாய் மருந்து உண்ணவேண்டும். அதற்கு நோய் வராதவகையில் எவ்வெவ்வாறு உணவு முறையை மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டுமோ அந்த வகையிலேயெல்லாம் அமைத்துக் கொள்ளவேண்டும். ஒரு சில உணவுவகைகள் உனக்குப் பிடித்தமாக இருக்கலாம்.

அவற்ருல், குழந்தை—பால்உண்ணும் பச்சிளங் குழந்தை—பாதிக்கப்படுமாஞல், அவற்றை ஒதுக்கத்தான் வேண்டும். அதேபோன்று ஒருசில உணவு வகைகள் உனக்குப் பிடிக்காததாக இருப்பினும் அவற்ருல் குழந்தை நலம்பெறும் என்ருல் அவற்றை விரும்பி ஏற்றுக்கொள்ள வேண்டும். குழந்தைகள் நோய் உற்ருல் சில சமயம் நீ மருந்துண்ணக் கூடத் தேவையாக இருக்கும். அப்படி உண்பதால் உன் உடலுக்கு நன்மை இல்லை என்ருலும், அதனல் பாலுண்ணும் குழந்தைக்கு நன்மை உண்டாயின் அந்த மருந்தை விரும்பியே உண்ணல் வேண்டும். இப்படி உணவை நிலையறிந்து உண்டும் மருந்து உண்டும் குழந்தையைக்காக்க வேண்டிய பொறுப்பு பெரிது! மிகப் பெரிது!

குழந்தைக்கு உரிய காலத்திலே வேற்று நோய் அணுகா வண்ணம் அம்மை குத்தல் முதலியன பற்றியும் அவ்வப்போது கவனித்துக் கொள்ளல் கடமையாகும். மற்றும் கண்டவர்கள் குழந்தையை எடுக்க விடலாகாது. குழந்தை என்ருல் அனைவருக்கும் பாசம் உண்டாவது இயல்புதான்; அதை யாரும் தடுக்க இயலாது. எனினும் கண்டவர் கைப்படின் நம்மை அறியாமலேயே சில நோய்கள் இளம் குழந்தையைப் பற்றிக் கொள்ளும். படை முதலிய நோய்கள் அவ்வாறு பற்றுவனவே யாகும். குழந்தையை யாரும் தொடவேண்டாம் என்ருலும் வருபவர்கள் வருந்துவார்கள், அனைவரும் எடுத்தாலும் அல்லல் நேரும். எனவே இரண்டுக்குமிடையே மிக எச்சரிக்கையாக இருந்து குழந்தையைப் போற்றிப் புரக்க வேண்டும்.

சிலர் குழந்தைகளுக்குப் பேச வந்தபின் அதனிடம் தகாத வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்து உற்ருர் உறவினரை வேடிக்கையாக வையச் சொல்வதைக் காண்

கின்றோம். அவ்வாறு செய்வது மிகமிகத் தவறு ஆகும்! "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்ற பழமொழிப் படி அச்சிறுவயதில் மற்றவரை வேடிக்கையாகப் பேசப் பழக்கும் நடையை ஒட்டியேதான் குழ்ந்தைகளின் உள்ளமும் உருவாகும். எனவே பெரியவர்களாகிய நாம் குழந்தையை நல்ல நிலையில் உருவாக்கும் வகையில் நடக்க வேண்டும். இன்று நாட்டில் ஒரு சில இனத்தவர் குழந்தைகள் சிறக்கக்கற்று ஓங்குவதற்கும், ஒருசில இனத்தவர் குழந்தைகள் கல்லாது ஏங்குவதற்கும் இப் பெற்றோர் பழக்கவழக்க நிலைகளே காரணமாக அமை கின்றன என்பர் ஆய்வாளர். எனவே உணவு, உடை, உற்ற பல பழக்கவழக்கங்கள் ஆகிய அனைத்திலும் பெற்றவர் செம்மை நலம் உற்றவர்களாகவே இருக்க வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு வகையிலும் குழந்தையைப் பெற்றவர் போற்ற வேண்டிய நிலையினை விளக்கிக் கொண்டே போகலாம். எனினும் அதனால் இக்கடி தத்தை நீளவிட்டு உன் பொறுமைக்கு எல்லைகாண நான் விழையவில்லை. அதுபற்றிய நூல்களை நீ ஓய்வு உள்ள போது படித்து அறிந்து, நன்கு உன் குழந்தையை வளர்ப்பாய் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. மேலும் இது பற்றி முன் ஒரு கடிதத்திலும் காட்டியுள் ளேன். இங்கு நான் ஒன்றை மட்டும் கூறி இக்கடிதத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.

இவ்வாறு குழந்தையின் நலமே தன் நலமாக ஓம்ப வேண்டிய நிலையில் தாய் தன் சேயைக் காக்காவிடின் அக்குழந்தை எவ்வாறு நலிந்து நையும் என்ற உண் மையைச் சங்க காலப் பெரும்புலவர் பரணர் என்பவர் நன்கு விளக்குகின்றார். கபிலர், ஔவையாரைப் போன்றே பரணரும் அக்காலப் பெரும்புலவர் என்ப தையும் அவர் பாடிய பலபாடல்கள் சங்க இலக்கியத்தில்

உள்ளன என்பதையும் நீ அறிவாய். அவர் தாயின் காப்பு இன்றேல் குழவி எந்த நிலையில் வாடும் என்பதை உவமையாகக் காட்டி விளக்குகின்றார்.

சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி சிறந்த வீரன்; சோழர் குலத்தோன்றல். அவன் அறத்தாறு வாழ்ந்தவன்; போர் வீரன். அவன் மாற்றார்மேல் படை எடுக்க நினைத்தால் அவர்கள் அஞ்சி நடுங்குவர். அவர்தம் நாடுகள் அழிந்து கெட்டொழியும். பகைவர் இவன் படைஎடுப்புக்கு அஞ்சி அஞ்சி ஓடி ஒளிவர்—அன்றிப் போரிட்டு மாய்வர். இவன்,

'அலங்குளைப் பரீஇ இவுளிப்
பொலந்தேர் மிசைப் பொலிவுதோன்றி
மாக்கடல் நிவந் தெழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவின்' (புறம் 4)

கொண்டு விளங்குபவன். ஆனால் தோற்ற அல்லது ஓடி ஒளிந்த பகைவர்கள் நாடுகள் என்னாகும்? அவை எவ்வாறு நிலைகெடும்? அக்காட்சியைப் பரணர் எண்ணி எண்ணிப் பார்க்கிறார். எதை உவமை கூறலாம் என நினைக்கிறார். அவருக்குத் தோன்றுவது ஒன்றேதான். ஆம்! அதுதான் தாயால் பாதுகாக்கப் பெறாத குழந்தை. மாற்றாருடைய மாறுபட்டுக் கெட்ட நாட்டுக்கு அந்தக் குழந்தையேதான் உவமையாக்கப் பட்டது. தாயின் பாசத்தால் பிணிக்கப்பட்டு அன்பால் அணைக்கப்பட்டு வளராத குழந்தை எவ்வாறு வாடி வதங்கி வளமிழக்குமோ அதுபோன்றே இளஞ்சேட் சென்னியின் பகைவர் தம் நாடும் கெடும் என்கின்றார். அவர் கூறிய அடிகள் இவைதாம்,

'தாயில் தூவாக் குழவி போல
ஓவாது கூஉம் நின் உடற்றியோர் நாடே'
(புறம் 4)

**அன்பின் அரசி !**

பரணர் உலக வாழ்வில் பட்டுழன்றவர். இல்லற வாழ்வில் மனைவியின் ஏற்றத்தையும் மக்கட் செல்வத்தையும் பற்றி நன்கு அறிந்தவர். பிறிதொருகால் பேகன் என்பான் தன் கண்ணனைய மனைவி கண்ணகியைப் பிரிந்திருந்த காலத்து அவனைக்கண்டு அறங்கூறி, அவன் மனைமாட்சியோடு வாழ வழிவகுத்தவர். அவர்தாம் இக் குழந்தை வளர்ப்பதையும் நன்கறிந்து இந்த உவமையைக் காட்டுகிறார். அவர் கூற்றின்படி குழந்தை தாயால் எவ்வாறு சிறக்கப் போற்றி வளர்க்கப்பட வேண்டும் என்பது தெரிகிறதல்லவா? ஆம்! அவர் இரண்டே அடிகளில் எத்தனையோ பெரிய உண்மைகளை அடக்கிவிட்டார். பெற்ற தாயார் உற்றதம் குழவிச் செல்வத்தை ஓம்பிப் பாதுகாவாவிடின் மாற்று மன்னரால் அடியோடு அழிவுற்ற நாடென அது நலியும் என்பது தெரிகிறதல்லவா! இது தெரிந்துதான் உலகில் பலரும் தம் மக்கட் செல்வத்தைப் போற்றிப் புரக்கிறார்கள். ஓரறி உயிர் தொடங்கி ஆரறிவுடைய உயிர்வரை குழவிச் செல்வத்தைக் கொண்டாடுகின்றனர். 'கடந்த ஞானியும் கடப்பரோ மக்கள்மேல் காதல்' என்று, முற்றும் துறந்த முனிவரும்கூடத் தம் மக்கள்மேல் கொண்ட காதலை - பற்றை - பாசத்தை - அன்பை மறக்க மாட்டார்கள் என்பதை விளக்கிக் காட்டியுள்ளார்கள். 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற பழமொழியும் நாட்டில் உள்ளதை நீ அறிவாய். இன்னும் மரம் செடி கொடிகளும், பிற விலங்கு ஊர்வன முதலியவையும் பறவைகளும் தத்தம் இனப் பெருக்கத்தை வளர்க்கும் விதங்களையும் தம்முடைய இனக்குஞ்சுகளைப் போற்றும் விதத்தையும் இன்று உயிர்நூற் புலவர்கள் ஆய்ந்து ஆய்ந்து எழுதிக்கொண்டே இருக்கிறார்களல்லவா! அடுத்தமுறை அவற்றுள் சில நூல்களை (ஆங்கி

லத்தில் உள்ளவை) வாங்கி அனுப்புகிறேன். ஓய்வுள்ள போது படித்துப்பார். தாம் பெற்ற சிறு குஞ்சுகளுடன் அவை எவ்வளவு பாசத்தோடு நடந்து கொள்ளுகின்றன என்பதை நீ அறிவாய்!

ஏன்? நம் வீட்டில் வீட்டுச் சிறுகுருவிகள் தம் குஞ்சு களுக்கு வாயில் இரை கொண்டுவந்து கொடுத்து மகிழ் வதை நீ பார்த்திருக்கிறாயே! குரங்கும் பூனையும் தம் குட்டிகளைக்காப்பதைக்கொண்டே 'நியாயங்'களை வகுக்க வில்லையா அறிஞர்கள். எனவே உலகில் உயிர் பெற்ற ஒவ்வொன்றும் தம் கருவிலிருந்து வந்த சிற்றுயிரைப் போற்றி வளர்க்கின்றது. மனிதன் அவற்றினும் மேலாகத் தன்னை மதிக்கின்றவனாதலின் மிக நல்ல முறையில் வளர்க்கக் கடமைப் பட்டவனாகின்றான். இதைத்தான் பரணர் வேறுபாட்டு வேந்தர்தம் நாட்டு அழிவினைக் காட்டி, இந்த உவமைவாயிலாக விளக்குகிறார்.

இதே கருத்தை அரிசில்கிழார் என்ற மற்றொரு புலவரும் அழகாக எடுத்துக் காட்டுகின்றார். அதிக மான் தகடூர் பொருது வீழ்ந்த எழினியை அவர் பாடிய தாகவரும் பாட்டு புறநானூற்றில் (230) வருகின்றது. மாற்றாருடைய நிலைகெட்ட தன்மையை விளக்கவருகின்ற புலவருக்குத் தாயினை நீத்த குழவிதான் நினைவுக்கு வரு கின்றது. அருமை அன்னையரால் பாதுகாக்கப்பட வேண்டிய குழவி அந்த நல்லணைப்பை நீத்தால் எப்படிச் சிறக்க வாழ முடியும்? இதை எண்ணித்தான் அரிசில்கிழார்,

**'ஈன்றாள் நீத்த குழவி போன்று**
தன்அமர் சுற்றம் தலைத்தலை இனைய
கடும்பசி கலக்கிய இடும்பைகூர் நெஞ்சமொடு
நேர்உழந்து வைகிய உலகு'

(புறம் 230)

என்கின்றார். இவ்வாறு புலவர்கள் பெற்ற தாயாருக்குப் பிள்ளைகளைப் போற்றி வளர்க்கும் கடமையை நேராகக் காட்டுவதோடு, அவ்வாறு தாயாரால் பாதுகாக்கப் பெறா விடின் குழந்தைகள் எவ்வாறு ஏக்கமுறும் என்பதையும் காட்டுகின்றார்கள். இவற்றாலெல்லாம் அறிவது யாது? ஆம்! தாம் பெற்ற குழந்தையே பெருஞ் செல்வம் எனக் கருதி அதைக் கண்ணெனக் காக்க வேண்டியது மகப் பெற்றார் கடன் என்பதுதான்.. கடிதம் நீண்டு கொண்டே செல்கிறது. எனவே இத்துடன் இன்று அமைகின்றேன்.

நீ உன் குழந்தையைக் கருத்தாகக்காக்க வேண்டிய கடமையிலிருந்து சிறிதும் வழுவலாகாது என்ற அறிவுரை யோடு இன்று இக்கடிதத்தை முடித்துக் கொள்ளு கின்றேன்.

அன்புள்ள,
**அப்பா.**

## 6. சிறுவர்ப் பயந்த செம்மலோர்

**அன்புடைச் செல்வி மங்கையர்க்கரசிக்கு !**

நலன். உன் கடிதம் வந்தது. எனது முந்திய கடிதங் களையெல்லாம் முறையாகப் படித்து அறிந்துகொண்டாய் என உன் கடிதத்தின் வழி விளங்கிற்று; நல்லது. செல்வத் துள் செல்வமாகிய இம்மக்கட் செல்வம் அவ்வாறு போற் றிப் புரப்பவர்களுக்குத் தளரா மகிழ்ச்சியையும் தாழாச் செல்வத்தையும் தரும் என்பது உறுதி. இப்புதல்வரைப் பெறும் பொற்றொடியார் வாழ்வே சிறந்த வாழ்வு. அல்லா தார் வாழ்வைப் பற்றி என்ன சொல்வது?

திருவிளையாடற் புராணத்து வரும் ஒரு கதை உனக்கு நினைவு இருக்கலாம். கதையைப் பற்றி இங்கு உனக்குச் சொல்ல விரும்பவில்லை; தேவையற்றதும் கூட. என்றாலும் குழந்தைச் செல்வத்தைப் பற்றி அதில் வரும் இரண்டு அடிகளை மட்டும் உனக்கு நினைப்பூட்டுகிறேன். தனபதி செட்டியார் தனக்கு மகவில்லை என்று உடன்

பிறந்தாள் மகனை உரிமை பெற்றபின் ஒழுங்காக நடவாத காரணத்தால் அவ்வுடன் பிறந்தாள் உளம் வருந்திக் கூறிய அடிகள் தாம் அவை.

'பெருமிதம் உமக்கேன் **பிள்ளைப்**
**பேறற்ற பாவி** நீ என்
அருமை நன் மகனுலன்றே
இருமையும் அடைவாய்'

என்று பரஞ்சோதியார் மாமனுக வந்து வழக்குரைத்த படலத்தில் பிள்ளைப் பேறு பெருதவர் இம்மை மறுமை இருஉலகிலும் நலம் பெறமுடியாது என்ற உண்மையை எவ்வளவு அழகாக எடுத்துக் காட்டுகின்ருர். எனவே மக்கள் தம்மைப் பயந்தோர்க்கு இம்மையில் இன்பம் தருவதோடு மறுமையிலும் வாழ வைக்கும் சிறப்பினைப் பெற்றவர் என்பது தெளிவாகிறதன்ருே!

வடமொழியிலும் இக்கருத்தை வலியுறுத்துவதே புத்திரன், புத்திரி என்ற மக்கட் செல்வத்தைக் குறிக்கும் பெயர்கள் என்று சொல்லுவார்கள். மறுமையில் உண்டாகும் 'புத்'தென்னும் நகரத்தில் இருந்து பெற்ருேரை மீட்பவனே புத்திரன் என்றும், அவ்வாறு பெற்ருேரை மீட்பவளே புத்திரி என்றும் கூறுவர். இவற்ருலெல்லாம் நாம் அறிவது குழவிச் செல்வம் இம்மைக்கு மட்டுமன்றி மறுமைக்கும் பலன் தரும் செல்வம் என்பதேயாகும்.

இன்னும் இம்மக்கட் செல்வத்தைப் பற்றி எத்துணையோ புலவர்கள் பாராட்டிப் போற்றி உள்ளனர் என்பதை ஓரளவு நீ அறிவாய் என எண்ணுகின்றேன். பெரிய இலக்கியம் பாடும் புலவர்களெல்லாம் இப்பிள்ளைச் செல்வத்தைப் பாடாதிரார். திருவள்ளுவர் குறட்பாக்களைப் பல முறை நீ படித்திருக்கிருய். என் கடிதங்களிலும் அக் குறள்களை எடுத்துக் காட்டிஇருக்கிறேன். பாரதத்தில் இக்குழந்தை இன்பத்தை குறிக்கும் ஒரு பாடல் நல்ல கருத்தமைந்த பாடலாக உள்ளது.

'கல்லா மழலைக் களியூறல் கலந்து கொஞ்சும்
சொல்லால் உருக்கி அழுது ஓடித் தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்தில் விளையாடும் மகிழ்ச்சி **மைந்தர்**
**இல்லா தவர்க்கு மனைவாழ்வின் இனிமை என்னும்?**

என்று வினவும் வகையிலே குழந்தைச் செல்வம் இல்லா தவர் வாழ்வு எதனாலும் சிறப்படையாது என்பதை ஆசிரியர் எடுத்துக் காட்டுகின்றார். இக்கருத்தையே காசி காண்டம் பாடிய புலவர்

'எத்திரு வுடையரேனும் இன்கனி மழலைச் செவ்வாய்
புத்திரர் இலாதோர் என்றும் பொறியிலர்'

என்று காட்டி விளக்குகின்றார். வளையாபதி என்னும் இலக்கியமோ மக்கள் இல்லாச் செல்வத்தைப் பல்வேறு உவமைகளைக் காட்டி உலகுக்கு உணர்த்துகின்றது.

'பொறையிலா அறிவு; போகப் புணர்விலா இளமை; மேவத்
துறையிலா வனசவாவி; துகிலிலாக் கோலத் தூய்மை
நறையிலா மாலை; கல்வி நயமிலாப் புலமை; நன்னர்ச்
சிறையிலா நகரம்போலும் **சேயிலாச் செல்வம்**'

என்று உவமை வழிகளால் உணர்த்தும் நிலை எண்ணிப் பார்க்க வேண்டியதல்லவா?

முன் ஒரு பாண்டிய மன்னன் பிள்ளைப் பேற்றைப் பற்றிப் பாராட்டிய சிறப்பை உனக்கு எடுத்துக் காட்டினேன். அதே மரபில் அவனுக்கு நெடுங்காலத்துக்குப் பின் வந்த பாண்டியன் அதிவீரராமன் தனது நைடத்திலே இப்பிள்ளைப் பேற்றின் சிறப்பைப் பற்றி நன்கு காட்டுகின்றார். உலகில் எவ்வகைப் பொருளையும் பெற்றுக் கொள்ளலாம். எனினும் மக்கட்பேறு என்னும் செல்வத்தை பெறுவது எளிதன்று எனக் காட்டுகின்றார் அவர். ஆம்! அரசபோக வாழ்வில் சிறந்து நின்ற அவருக்கு அச் செல்வங்களெல்லாம் செல்வமாகவே தெரியவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாகப் பெறற்கரியது மக்கட் செல்

வமே என்பதை அவர் உணர்ந்து உலகுக்கும் உணர்த்து கின்றார்.

'பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற'

என்ற வள்ளுவர் வாய்மொழியை நன்கு கற்றவரன்றோ அவர். அவர் வாக்கை நீயே படி. இதோ அவர் பாட்டு.

'விரிகடல் அமிழ்தமும் வேலை ஞாலமும்
செருமுகத்து அழல் உமிழ் சிறுகண் யானையும்
எரிமணிக் குப்பையும் எளிதின் எய்தலாம்
அருமகப் பெறுதல் மற்ற அரிது என்பலே'.

இவ்வாறு எத்தனையோ புலவர்கள் குழந்தைச் செல்வத்தைப் பாராட்டி இருக்கிறார்கள். அண்மையில் வாழ்ந்த புலவர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் இப் பிள்ளைமை இன்பத்தைப் பற்றிப் பாடிய பாடல்களை நீ படித்திருக்கிறாய் அல்லவா! பள்ளியில் படிக்கும்போது பலமுறை அப்பாடலைச் சந்தத்தோடு படித்துப் படித்து எனக்குக் காட்டியது இன்னும் நினைவு இருக்கிறது. எனவே இங்கு அவரது பாடல்களையும் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கத் தேவை இல்லை என நினைக்கிறேன். கவிஞர் பாரதிதாசனுடைய குழந்தை இன்பத்தைப் பற்றிய பாடல்களையும் தாலாட்டுப் பாடல்களையும் நீ அறிவாய் அல்லவா?

இத்தகைய பிள்ளைச் செல்வத்தை பெற்ற நீ பல வகையில் பிற நலன்களையெல்லாம் செறியப் பெற்றிருக் கிறாய் என்பதை உணர்ந்து கொள். உணர்ந்து கலிதீர்க்க வந்த அந்தக் கண்ணனையே தெய்வக் குழந்தையைப் போற்றி வளர்த்து சிறக்கவைத்து நீயும் சிறக்க வேண் டும் என்பதே என் ஆசை.

**அன்பின் அரசி!**

இத்தகைய செல்வத்தைப் பற்றி உலகம் உண்டான நாள் தொட்டு எத்தனையோ அறிஞர்கள் சொல்லிக்

கொண்டேதான் வந்திருக்கிறார்கள். மறுமையைப் பற்றிக் கவலைப்படாதவருக்குங்கூட இந்தப் பண்டைய அறிஞர் சொல்லியது உண்மையே யாகும். தத்தமக்குக் கான் முளைகள் இல்லையானால் அவர்கள் இறந்த பிறகு அவர் தம் பெயரைச் சொல்ல இந்த உலகில்தான் யார் இருக்கிறார்கள்? அவர்கள் வழிவழியே வாழையடி வாழையென வருகின்ற காரணத்தாலேதான் அவர்தம் குடிவழியில் முன்னொரு காலத்தில் இன்னார் இன்னார் இன்னின்ன வகையில் சிறக்க வாழ்ந்தார் எனப் பின் நெடுங்காலம் பேச வழியும் வகையும் வாய்ப்பும் உள்ளன. எனவே அவர்கள் மறைந்த பின்பும்—மறுமை வாழ்வு உற்ற பின்பும்—அவர்கள் தம் புகழை உலகில் என்றென்றும் மங்காமல் வாழ வைப்பவர்கள் அவர்தம் மக்களும் அவர் வழிவழி வரும் பிறரும் ஆவர். எனவே மறுமை வாழ்வை நம்பாதவர்களும் கூட பிறந்த உலகில் என்றென்றும் பெயரோடு வாழவேண்டுமானால் மக்கட் செல்வம் பெற்றே ஆக வேண்டும். இக்கருத்தையே வள்ளுவனார்

'தம்பொருள் என்ப தம்மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்'

என அழகாக விளக்கிச் சென்றிருக்கின்றார். எனவே எவருக்கும் மக்கட் செல்வம் சிறந்தது. அதிலும் மறுமையில் நம்பிக்கை உடையவர்களுக்கு அச்செல்வம் அளிக்கும் பயன் பெரிது. எனவே குழந்தைச் செல்வத்தினைக் காட்டிலும் மக்களுக்கு நலன் தருவது நாட்டில் வேறொன்றும் இல்லை. அத்தகைய செல்வத்தைப் பெற்ற நீ நலமுறுக என வாழ்த்துகின்றேன்.

இருமையும் உதவும் இக்குழவிச் செல்வத்தைப் பற்றிப் பல புலவர்கள் பாராட்டிப் பேசியுள்ளதை உனக்கு அவ்வப்போது சொல்லி இருக்கிறேன். சங்க காலச் சான்றோர் பலர் இச்செல்வத்தைப் பாராட்டி இருப்பதை முன்னரே சில கடிதங்களில் எழுதியுள்ளேன்.

இக்கடிதத்தில் அப்புலவருள் ஒருவர் வாய்மொழியைக் காட்ட நினைக்கிறேன். அப்புலவர் அச்சொற்களை, மக்கள் பெற்ற அந்தத் தாயின் வாக்காகவே கூறுதல் சிறப்புடையதாகும். ஒரு குழந்தையைப் பெற்ற தாய் எவ்வளவு பெருமிதம் உடையவளாக வாழ வேண்டும் என்பதையே அந்தஅடிகள் உனக்கு உணர்த்தும் என்பது தெளிவு. வேறு எத்தகைய செல்வத்தை பெருவிடினும் இக்குழவிச் செல்வம் பெற்றவரே பெற்றவர் எனப்படுவர் என்பதை உலக வழக்கு நன்கு உணர்த்துகிறதன்றோ.

கோசிகன் கண்ணனார் என்பவர் சிறந்த புலவர். அவர் ஊர் செல்லூர் போலும். எனவே அவர் செல்லூர்க் கோசிகன் கண்ணனார் என்றே அழைக்கப்பட்டார். அவர் இப்பிள்ளைமை இன்பத்தைப் பெரிதாகப் பாராட்டியுள்ளார். அவர்தம் பாடல் அகநானூற்றில் (66) இடம் பெற்றுள்ளது. அதில் செல்வன் ஊடல் தீர்க்கும் வாயிலாக அமைவதைக் காட்டி இருக்கிறார். அவ்வூடல் தீர்க்கும் செயல் பற்றி முன்னமே உனக்கு விளக்கி எழுதி இருக்கிறேன் அல்லவா! எனவே அது பற்றி இங்கே நான் அதிகமாக எழுதவேண்டா. எனினும் அக்காட்சியைக் காட்டி மேலே செல்லுகிறேன்.

பரத்தையிற் பிரிந்த தலைவன் புது நலம் நுகர விரைந்து செல்லவேண்டி வந்தது. அதற்கு அவன் தன் வீடு உள்ள சொந்தத் தெருவைத்தான் கடக்க வேண்டியிருந்தது. அவன் தனது தேர்மேல் ஏறிப் பாகன் செலுத்த வேகமாகச் சென்றுகொண்டிருந்தான். அவன் வீட்டு வாயிலில் தேர் சென்று கொண்டிருந்தது. அதே வேளையில் அவன்தன் பூங்கட் புதல்வன் வாயிலில் வந்து நின்றான். அக்குழந்தையைக் கண்டும் அவனால் மேலே செல்ல முடியுமா? தேரை நிறுத்தினான்; இறங்கினான்; புதல்வனை வாரி அணைத்து மகிழ்ந்தான். வீட்டு 'வீட்டிற்

குள் செல்க' என்று அனுப்பினான். ஆனால் அக்குழந்தை அவ்வாறு செல்ல மறுத்தது. எனவே வேறு செய்ய ஆற்றாதவனாகி அவன் அக்குழந்தையை அணைத்துக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான். அந்தக் காட்சியை மனைத் தலைவி கண்டாள். இந்த அளவு நமக்குப் போதும். அந்த வகையில் தலைவனை வீட்டுக்குள் அழைத்து வந்து தனக்கு இன்பம் அளித்ததோடு, தலைவனையும் தீ வழியில் புகாமல் காத்த அந்தக் கான்முளையை எண்ணி எண்ணி வியக்கின்றான் அத்தலைவி. அச்செல்வத்தின் சிறப்பைத் தன் தோழியிடம் சொல்லிச் சொல்லி மகிழ்கின்றாள் அத் தலைவி. ஆம்! இம்மையில் அவர்களைச் சேர்த்து வைத்து ஈடற்ற இன்பத்தை அவர்களுக்கு ஈந்த அக்குழந்தை, அதன் தந்தை பரத்தையிற் பிரிவால் தவறிழைத்து மறுமையில் அதனால் பெறஇருந்த அல்லலையும் நீக்கினான் அல்லனோ! இவற்றையெல்லாம் எண்ணிய செல்லூர்க் கோசிகன் கண்ணனார் அத்தலைவியின் வாக்கிலேயே பேசுகின்றார்.

'இம்மை உலகத்து இசையோடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின்றி எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர் பயந்த செம்மலோர் எனப்
பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனம் தோழி' (அகம் 66)

என்ற ஆறு அடிகளும் ஆயுள் வரையில் படித்துப் படித்துப் பயின்று பயன்பெறத்தக்க அடிகளல்லவோ!

இந்த ஆறு அடிகளில் புலவர் கோசிகன் கண்ணனார் எவ்வளவு சிறப்பாகக் குழந்தைச் செல்வத்தின் ஏற்றத்தைப் பாராட்டிவிட்டார் என்பது நன்கு தெரிகிறதல்லவா! இந்த உலகில் பிறந்தார் புகழ் பெறவேண்டும். 'ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு' என்று வள்ளுவர் இசைபட வாழ்தலையே

வாழ்க்கையின் ஊதியமாகச் சொல்லிவிட்டாரே! ஆம்! உலகில் பிறந்த ஒருவர் என்றென்றும் அவர் புகழ் நிலைக்குமாறு ஒரு செயலையாயினும் செய்து விட்டுத்தான் செல்ல வேண்டும். அதுதான் பிறவியின் பயன். அவர்தம் வழிவழி வரும் கான்முளைகளைக் கண்டு இவன் முன்னோர்—இன்னார் இன்னின்ன சிறப்பினைச் செய்து புகழ் பெற்றார் என்று உலகம் என்றென்றும் பாராட்டிக்கொண்டே இருக்கும். எனவே புகழ் நிலைத்து வாழ்வது அவர் தம் கான்முளைகளாலேயாம்.

சங்க காலத்திலும் பிற்காலத்திலும் வாழ்ந்த புலவர்கள் தம் முன்னின்ற புரவலர்களைப் பாராட்டும்போது அவர்தம் முன்னோருடைய புகழ்ச் செயல்களை எல்லாம் பாராட்டிநின்ற பெருமைகளை நீ கேட்டிருப்பாய் அல்லவா! கோவலனை — எல்லாச் செல்வமும் இழந்து மதுரை நோக்கிச் செல்லும் கோவலனை — வழியிடைக் கண்ட மறையோன் அவன்தன் முன்னோருடைய புகழையெல்லாம் சொல்லிச் சொல்லிப் பாராட்டியதாக இளங்கோவடிகள் அழகுபடக் காட்டவில்லையா!

'உயர்ந்து ஓங்கிய விழுச் சிறப்பின்
நிலந்தந்த பேர் உதவி
பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்'
(மதுரைக் காஞ்சி 59-61)

என்று நெடுஞ்செழியனைப் பாடவந்த மாங்குடி மருதனார் அவனது முன்னோனாகிய வடிம்பலம்ப நின்ற பாண்டியன் புகழைப் பாடிப் பாராட்டவில்லையா! ஆம்! அக்குடி வாழையடி வாழையாக நெடுஞ்செழியன் வரை வளரவில்லையானால் வடிபலம்ப நின்றவன் இசையை வாயால் பாடுவார் யார்! எனவே இம்மை உலகத்து என்றும் இசையொடு விளங்க உதவுபவர் கான்முளைகளே அன்றோ! இவ்வாறு பெற்றவர்களுக்கு மறுமை தருபவரும்—அவர்களைத் தீமையினின்று விளக்கி நன்னெறிப்படுத்துபவரும் மக்களே

யன்றே! இன்றும் குழந்தைகளைப் பெற்றவர் தவறு செய்தால் ‘பிள்ளைகளைப் பெற்ற இவரும் தவறு செய்கிறாரே’ என உலகம் இடித்துரைப்பதையும், அப்பழிக்கு அஞ்சியாயினும் மக்களைப் பெற்றோர் தவறாது நடக்க முயன்று இம்மையில் நற்பெயரையும் மறுமையில் இன்பத்தையும் பெறுவதைக் காண்கிறோமல்லமோ?

இத்தகைய மக்கட் செல்வத்தை இடைக்காலத்தில் சிலர் இழித்துரைக்க நினைத்தனர் ‘இதமுறல் என்னுள் சேயால் என்றைக்கும் துன்பம் ஆமால்?’ என்றும் பாடிவிட்டனர். இந்தக் கொடுமை எல்லாம் தமிழ் நாட்டில் இடைக்காலத்தில் புகுந்த துறவுக் கொள்கையால் வந்த விளைவு. எனினும் தமிழ் நாட்டுப் பழங் கொள்கை “அறன் எனப்பட்டது இல்வாழ்க்கை’ என்பதே. இன்றும் துறவுக் கொள்கையைத் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளவில்லை என்பது துறவியர்நிலை அருகி உள்ள ஒன்றே எடுத்துக் காட்டும். என்றும் தமிழர் இருமையும் நலம் தரும் மக்கட் செல்வத்தைப் போற்றியே வந்தார்கள் என்பது தெளிவு.

இந்த இம்மை மறுமை இன்பம் தரும் குழந்தைகளை உற்றார் மற்றார் மட்டுமன்றிச் செறுநரும் விழைவர். ஆம்! குழந்தைகளுக்கு வேறுபாடு இல்லை. அது அனைவரிடமும் தாவிச் செல்லும். அவ்வாறாய ‘குழந்தைகளைப் பெற்றவர்கள் சிறந்தவர்’ என்பது பழமொழி என்கின்றாள் தலைவி. உலகில் உயிர்த்தோற்றம் என்று உண்டோ அன்றிருந்தே இச்சொல் மெய்ம்மையாக விளங்குகின்றதன்றோ! எனவே பண்டுதொட்டுப் பலர் உண்மையாகக் கண்டு கூறிய மொழி பழமொழியல்லவா? அப்பழமொழிப்படி நன்மகப் பேறு எய்திய நீயும் நலமெல்லாம் பெற்றுச் சிறக்க என வாழ்த்தி இக்கடிதத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.

அன்புள்ள,

**அப்பா.**

## 7. தம்பொருள் என்ப தம்மக்கள்

**அன்புடை அரசி!**

வள்ளுவப் பெருந்தகை நன்மக்கட்பேறு பெறுவதை குறித்து எழுதிய குறட்பாக்களை முந்திய கடிதங்களில் அங் கொன்று ஈங்கொன்றாகக் குறித்துள்ளேன். என்றாலும் அவர் மக்கட்பேறுபற்றிக் கூறிய பத்துப்பாடல்களையும் ஒரே சேரப் படித்தால் பல நல்ல கருத்துக்கள் தோன்று மெனக் கருதியே இக்கடிதத்தில் அக்குறட்பாக்களைப் பற்றி எழுத நினைத்தேன். வள்ளுவர் இல்லற வாழ்வே பிறவற்றைக் காட்டிலும் ஏற்றம் பெற்றது என நன்கு தெளியக் காட்டினார்; பிறகு அவ்வில்லறத்துக்கு இன்றி யமையாத வாழ்க்கைத்துணை நலத்தின் சிறப்பினை எடுத்து விளக்கி இறுதியில், அவ்வதிகாரத்திலேயே அவ் வாழ்க்கைத் துணையாகிய மனைவி இல்லறத்துக்கு மங்கல மானால், அதன் நன்கலன் 'நன்மக்கட்பேறு' என்றே கூறி அடுத்த மக்கட்பேறு என்ற அதிகாரத்தைத் தொடங்கு கின்றார்.

**அன்பின் செல்வி!**

மக்கட்பேறு என்ற அதிகாரத்துக்கு உரை எழுத வந்த பரிமேலழகர் பெருந்தவறு ஒன்றினைச் செய்துவிட்டார். அது அவர் பிழையன்று; காலத்தின் கோளாறு. அவர் வாழ்ந்த காலமும் அவரது சூழலும் அத்தகையன. சங்க காலத்தில் பெண்களை ஆண்கள் சமமாகக் கருதிப் பேணிப் போற்றிவந்தனர் என்பதை நீ அறிவாய். எனினும் இடைக்காலத்தில் பல்வேறு மாறுபட்ட பண்பாடுகளும் நாகரிகங்களும் நம் நாட்டில் புகுந்த காரணத்தால் தமிழர் பெண்களைத் தாழ்வாக மதிக்கத் தொடங்கி விட்டனர். பெண்களுக்கு இயல்பாக அறியும் அறிவு இல்லை என்றும், ஒருவன் பெண்ணைப் பெற்றெடுப்பதிலும் பிள்ளையைப் பெறுவதே மேல் என்றும் தப்புக் கணக்குப் போடத் தொடங்கிவிட்டனர். அச்சூழலில் பட்ட பரிமேலழகரும் 'மக்கட்பேறு' என்ற அதிகாரத்தின் தலைப்பையே 'புதல்வரைப் பெறுதல்' என மாற்று விட்டார். வள்ளுவரோ முந்திய அதிகாரத்திலேயே கடைசிக் குறளில் அதற்கு 'மக்கட்பேறு' என்ற தோற்றுவாய் தந்ததோடு இந்த அதிகாரத்திலேயும் ஏழு பாக்களில் 'மக்கள்' என்ற சொல்லையே பெய்திருக்கின்றார். இதை அறிந்தும் பரிமேலழகர் காலச் சூழலுள் சிக்கித் தம் மனவழி அதற்குப் 'புதல்வரைப் பெறுதல்' என்ற தலைப்பினை இட்டார். தம் கருத்துக்கு ஏற்ப, பெண்களுக்கு இயல்பாக அறிவும் அறிவு இல்லை எனவும் துணிந்து கூறி விட்டார்.

'ஈன்றபொழுதில் பெரிது உவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்'

என்ற குறளுக்கு உரை எழுதவந்த அவர், 'கேட்டதாய்' என்பதற்கு உரிய விளக்கம் தர நினைந்தார், நினைந்து 'பெண்ணியல்பால் தானாக அறியாமையின் கேட்டதாய் எனவுங் கூறினார்' என விளக்கம் தந்துள்ளார். இது எத்

துணைப் பொருத்தமில்லாதது என்பதை எண்ணிப்பார். தன் மகன் பெற்ற புகழைத் தானேநேரில் கண்டு மகிழ்வதினும் அறிவறிந்த மேலோர் வாய்வழிக்கேட்டு மகிழ்வதில் தானே உண்மையில் இன்பம் இருக்கிறது. இதற்குள் இந்த இன்பத்தை நீயே உணர்ந்திருப்பாய் அல்லவா! சிறு குழந்தை கால் உதைத்து வாய்திறந்து சிரிப்பதை நீயே கண்டு மகிழ்வாய். அதன் பொலிவை மற்றவர் கண்டு அதைப் போற்றும் போது உன் மகிழ்ச்சி மிக அதிமாகின்றதல்லவா! இப்பிள்ளைமை விளையாட்டிலேயே இப்பெரு மகிழ்வு இருக்கும்போது, தம் மக்கள் அறிவும் திருவும் செம்மையும் சிறப்பும் பெற்றுள்ளதை மற்ற அறிவறிந்த மக்கள் புகழ்வதைக் கேட்கத் தாயர் உண்மையின் பெரிதும் மகிழ்வார்களன்றோ! ஆம்! இந்த உண்மையை நன்கு அறிந்துவைத்தும்கூடப் பரிமேலழகர் காலச்சுழலில் பட்டமையால் பெண்களைத் தாழ்ந்தவராகவே கூறிவிட்டார். அது பற்றி நான் இங்கே விளக்கத் தேவை இல்லை என நினைக்கிறேன். காலம் அவருக்கு விடை கண்டுவிட்டது. இன்று சிற்சில துறைகளில் அறிவு நிலையங்களில்-ஆண்களினும் பெண்கள் விஞ்சி இருப்பதைக் காண்கிறோமல்லமோ! ஒருவேளை பரிமேலழகர் இன்று உலகிற்கு - சிறப்பாகத் தமிழ் நாட்டுக்கு — வர முடிந்து, வந்து பார்ப்பாரானால் தாம் செய்த இமயம் போன்ற தவறு எண்ணி எண்ணி உளம் நைவார்...நிற்க.

**அரசி,**

வள்ளுவர் இம்மக்கட் செல்வம் பற்றிக் கூறியதையே உனக்குக் காட்ட விழைகின்றேன். அவர்தம் பத்துக் குறள்களிலும் தனித்தனி மக்கட் செல்வச் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றார். முதற் குறளிலேயே அவர் உலகில் பெறக்கடவதாகிய பேறுகளுள் மக்கட் பேற்றினும் சிறந்தது வேறு எதுவும் இல்லை என்பதைத் திட்டமாகக் காட்டுகின்றார்.

'பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற'

என்பது அவர் வாக்கு, ஆம்! உலகில் மனிதன் எத்தனையோ செல்வங்களைப் பெற நினைக்கிறான். நினைத்து அவற்றைத் தேடுகிறான். எதிலும் அவன் மனம் நிறைவு பெற்றான் என்று சொல்ல முடியுமா? அப்படியே பெற்றாலும் அவை எத்தனை நாள் இருக்கும்? மக்கட் செல்வம் தான் உள்ள வரை போற்றப்படுவதோடு என்றென்றும் பெற்றவரையும் பின்வரும் கான்முளைகளையும் வாழவைப்பதன்றோ! இது பற்றி முன் ஒரு கடிதத்திலேயே உனக்கு விளக்கமாகக் காட்டியிருக்கிறேன்.

இத்தகைய மக்களைப் பெறுவதால் பயன் என்ன என்று கேட்கலாம் அல்லவா? அதற்குத்தான் அடுத்த குறளிலேயே வள்ளுவர் பதில் தருகின்றார். மக்கட் பிறவியின் பயன் இந்தப் பிறப்பிலே மட்டும் முடிந்து விடுவதன்று. தொடர்ந்து வரும் பிறவிகளெல்லாம் தீமையற்ற நல்ல வாழ்வு வாழச்செய்வது, தம் பொருளாகிய இம் மக்கட் பிறவி எடுத்ததன் பயனே எனத் தெளிவுபடக் கூறுகின்றார்.

'எழுபிறப்பும் தீயவை தீண்டா, பழிபிறங்காப்
பண்புடை மக்கள் பெறின்'

என்பது நீ அறிந்த ஒன்றுதான்.

அடுத்துவரும் குறளில்தான் அவன் மக்களைத் **தம் பொருள்** என்றே காட்டுகின்றார். **'தம் பொருள் என்ப தம் மக்கள்'** என்ற அடியைப் படிக்கும்போது மக்களைப் பெற்றவர்தாம் எத்துணை மகிழ்ச்சி அடைவார்கள். இதைக் கூறிய திருவள்ளுவர் அடுத்த 'அவர் பொருள் தம்தம் வினையான் வரும்' என்றும் கூறுகின்றார். இதற்குப் பல வகையில் பொருள் கூறுவார்கள். 'அப்புதல்வர் செய்த பொருள் தம்மை நோக்கி அவர் செய்யும் நல்வினையானே

வரும், என்பார் பரிமேலழகர். எனவே அம்மக்கள் ஆற்றும் செயல்வழி நல்வினை பெற்றவரை அடையும் என்பது கருத்து. பரிதியாரோ 'அந்தப் புதல்வர் என்னும் பேறு தாந்தாம் செய்த விதி வசத்தால் வரும்' என்பார். எப்படியாயினும் மக்களைப் பெறுவது பெரும்பேறு என்பதும், அதையே உலகோர் தம்பொருள் எனக் கொள்வர் என்பதும் நன்கு தெரிகின்றதே. இக்குழந்தைச் செல்வம் இம்மையில் மட்டுமன்றி மறுமையிலும் நல்கதி உய்க்கும் என்ற உண்மையைக் கம்பர், 'சேய்ஒக்கும் முன்னின்று ஒரு செல்கதி உய்க்கு நீரால்' என்று மன்னன்மேல் சார்த்திப் புகழ்வது அறிந்து மகிழத்தக்க ஒன்றாகும். இதுபற்றி இம்மட்டோடு நிறுத்திக் கொள்ளலாம் என எண்ணுகின்றேன்

## அறிவுடை செல்வி!

திருவள்ளுவர் அடுத்த மூன்று குறட்பாக்களிலும் மக்கள் கைப்பட்ட கூழின் இனிமையையும், அவர்மெய் தீண்ட வரும் இன்பத்தையும், அவர் சொற்கேட்டு அடையும் இன்பத்தையும் தனித்தனியாகக் காட்டுகிறார். உன் பிள்ளைக் கனியமுதை வாரி அணைக்கும்போது நீ பெறும் இன்பத்தை இங்கே என்னால் ஏட்டில் எழுத முடியுமா? அதுபோன்றே அக்குழந்தை எழுப்பும் இன்னொலி-பொருளற்ற ஓசை—எத்தனை இன்பமாகச் செவிக்குள் நுழைகின்றது. அதையும் நீ துய்த்திருக்கிறாய். இன்னும் குழந்தை கைபிட்ட அந்தசோறும் இனிமை தருமன்றோ! அதையும் நீ சின்னாளில் பெறுவாய். இவ்வாறு எந்த நிலையிலும் இன்பம் தரும் மக்கள் செல்வம் சிறந்த ஒன்றல்லவா! அவர் குறளையே நீ படிக்கவேண்டாமா? நீ அவற்றை முன்னமேயே அறிவாயே! ஆம். என்றாலும் இதோ அவற்றையும் தந்து விடுகிறேன்.

'அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்' என்றும்

'மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு' என்றும்

'குழலினிது யாழ்இனிது என்ப தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்' என்றும்

வள்ளுவர் வாய்மொழி அமைகின்றது. அடுத்த நான்கு குறள்களிலும் வள்ளுவர் பிள்ளை பெரியவனை பின் பெறவேண்டிய சிறப்புக்களையும், அத்துறை வழிப் பெற்றோர் ஆற்றவேண்டிய கடமைகளையும், அவ்வாறு சிறக்க மேலோக்கிவரும் மக்கள்நலம் கண்ட வெற்றி பற்றிய பெருமைகளையும், தம்மை முன்னுக்குக்கொண்டு வந்த பெற்றோருக்கு மக்கள் ஆற்றவேண்டிய கடமையையும் எடுத்துக்காட்டுகின்றார். அவையெல்லாம் இங்கு உனக்கு எடுத்துச்சொல்லத் தேவைஇல்லை என என்று நினைக்கிறேன். உன் குழந்தை வளர வளர அறிவு பெறப்பெற நீ அதற்கு ஆற்றவேண்டிய கடமை பற்றியும் வளர்ந்த குழந்தை உனக்கு அளிக்கும் பெருமைபற்றியும் நீயே அறிந்து கொள்வாய். இந்தக் கடிதத்தில் இளம் குழந்தை-உனது செல்வத்துட் செல்வமாகிய இக் குழந்தை—எந்தெந்த வகையில் உனக்கு மகிழ்ச்சி அளிக் கிறது என்பது பற்றியும், அந்த இன்பத்தையெல்லாம் வள்ளுவர் பெருந்தகை எவ்வெவ்வாறு பாடிப் பாராட்டி உள்ளார் என்பது பற்றியுமே காட்ட விரும்பினேன் இவ்வளவு போதும் என நினைக்கின்றேன்.

கடைசியாகக் காட்டிய மூன்று குறட்பாக்களையும் நீ நன்கு துய்ப்பாய் என்பதில் ஐயமில்லை, இந்தக் கருத்தை யெல்லாம் பாராட்டிப் பலப்பல புலவர்கள் பாடியுள்ள னர். முதலிலே சங்ககாலப் புலவர் ஒருவர் பாடிய பாட் டினை எனது கடிதத்தில் விளக்கியிருந்தேன். அது

போன்று எத்தனை எத்தனையோ புலவர்கள் இப்பிள்ளைமை இன்பத்தைப் பாராட்டி இருக்கிறார்கள். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பாரதியார் இந்தக் குறட்பாக்களின் கருத்தையெல்லாம் உள்ளத்தமைத்து அழகாகப் பிள்ளைத்தன்மை பற்றிய பாடல்கள் பாடியுள்ளார். அவைபற்றியெல்லாம் உனக்குப் பிறகு எழுதுகிறேன். எனினும் இக்குறட்பாக்கள் கருத்தடங்கிய ஒன்றைமட்டும் இங்குக் கூற வேண்டும் என்று நினைக்கிறேன். குழந்தையின் மெய்தொட்டுப் பெறும் இன்பத்தை

'கன்னத்தில் முத்தமிட்டால்—உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ—கண்ணம்மா
உன்மத்த மாகுதடி'

என்று குழந்தையைத் தழுவிய நிலையில் தன்னை மறந்த பெருமையைப் பாராட்டி மகிழ்கின்றார். நீயும் அந்த இன்பத்தை பெற்றுச் சிறக்கின்ற நேரத்தில் நீண்ட கடிதம் எழுதி உன் சிந்தையைத் திருப்ப விரும்பவில்லை. இந்த அளவோடு இக்கடிதத்தை நிறுத்திக்கொள்ளுகிறேன்.

அன்புள்ள,

**அப்பா.**

## 8. குழந்தையும் தெய்வமும்

**அன்புள்ள அரசி!**

எனது முன்னைய கடிதங்களையெல்லாம் முறையாகப் படித்துப் பயன் பெற்றிருப்பாய் என எண்ணுகிறேன். எழுத்தில் எவ்வளவுதான் படித்தாலும் குழந்தையிடம் நேரில் கொஞ்சிக் குலவிப் பெறுகின்ற இன்பத்துக்கு இணையாகாது என்பதை உணர்வேன். நீயும் இதற்குள் இந்த உண்மையை உணர்ந்திருப்பாய். என்றாலும் அக் குழந்தையின் பெருஞ்செல்வம் பற்றிப் பலப்பல அறிஞர்கள் எவ்வெவ்வாறு பாராட்டியுள்ளனர் என்பதைக் காட்ட வேண்டும் என்ற விருப்பத்தாலேயே இவ்வளவையும் எழுதிக் கொண்டு வருகிறேன்.

குழந்தையைத் தெய்வத்தோடு சார்த்திக் கூறுகின்றனர் என்பதை நீ அறிவாய். 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்ற பழமொழி உனக்குப் பழைய மொழிதானே. எனவே இரண்டையும் பிணைத்

துக் காண்பதிலும் காட்டுவதிலும் ஓர் உண்மை இல்லை என்று சொல்ல முடியுமா? குழந்தையையும் தெய்வத்தையும் எத்தனையோ வகையில் ஒற்றுமைப்படுத்திக் காட்டலாம். ஒன்றை இங்கு முக்கியமானதாகக் காட்டுகின்றேன்.

கடவுளைப் பற்றிப் பாடவந்த அடியவர்கள் அவன் உலகில் எல்லா வேறுபாடுகளையும் கடந்து அனைவரிடத்தும் அழகுற அமைந்துநிற்பான் எனக் கூறுவார்கள். அவன் சாதி சமய வேறுபாடுகளைக் கடந்தவன்; மனதில் மாசு அற்றவன்; உள்ளொன்றும் புறமொன்றும் கண்டறியாதவன். எந்த வகையில் அவனை அழைத்தாலும் அவ்வழைப்பு அன்புவழி வந்ததாயின் மகிழ்ந்து அவரை அணுகுவன். அவனுக்கு எந்த வேறுபாட்டுணர்வும் கிடையாது. குழந்தைகளும் அத்தகையனவல்லவோ? அவைகளுக்கு இன்னார் இனியர் என்ற வேறுபாடு கிடையாதே. அவர்கள் உள்ளம் மாசுமருவற்று விளங்கும் ஒன்றல்லவா? வளர்ந்த மனிதனைக் கூறிக்கொண்டு பண்பாட்டில் வளராத நம்போன்றவர் உள்ளத்தில் இருக்கும் பொய்யும் பொறாமையும் கொடுமைகளும் குழந்தைகளிடம் காண முடியுமா? வஞ்சகம் இன்ன என்பதை அறியாத செல்வங்களல்லவா குழந்தைகள்? அவைகளுக்கு உள்ளும் புறமும் ஒன்றாக இருக்குமல்லவா! உள்ளத்தில் குறையையும் உதட்டில் புன்சிரிப்பையும் கொள்ளும் நாகரிகம் அக்குழந்தைகளுக்குத் தெரியுமா? மனதில் வஞ்சகத்தோடு வந்து வாரி அணைப்பராயின் அவரிடமும் கொஞ்சிக் குலவும் பண்பு குழந்தைகளுடையது அல்லவா? அன்பால் யார் அழைத்தாலும் யாதொரு வேறுபாடும் இல்லாமல் பற்றிக் கொள்ளும் பண்பு குழந்தையிடம் இருப்பதை அறியாதவர் யாரே?

சில குழந்தைகள் வளர வளரப் புது முகங்களைக் கண்டால் அழுவதைக் காண்கிறோம். அது வளர்ப்ப

தால்வரும் குற்றம் என்று கூறுவேன். பெற்றோர்கள் வருபவர்கள் யாவராயினும் உளத்தால் அவர்களிடம் வேறுபாடு காணாது பழகுவார்களேயானால், அவர்தம் குழந்தைகளும் வருபவர்களோடு வேறுபாடு காணாமலே பழகுவதைக் காணலாம், தாம் பாலூட்டி வளர்த்தால் தம் அழகு பாழ்படும் என எண்ணிக் கொள்ளும் தாயரைக் காட்டிலும் வளர்ப்புத் தாயரிடமே அதிகமாகப் பற்றுக் கொள்ளும் குழந்தைகளைக் காண்கிறோமல்லமோ? இதுவும் ஆண்டவன் பற்று முறை போன்றதேயாகும். ஏதோ வழிபடும் பரம்பரையில் பிறந்தோம் என்பதற்காக ஆரவாரமாகப் பூசை செய்து உள்ளத்தில் வஞ்சம் எண்ணும் மாக்களை விட்டு, ஆண்டவன், அயலவனுயினும் உளத்தால் அன்பு செய்வானுயின் அவனைத்தான் அஞ்சல் என அணைப்பன்எனப் பல அடியவர் காட்டியுள்ளனர். எனவே குழந்தையையும் தெய்வத்தையும் பின்னிப் பிணைத்துப் பாராட்டுவது எவ்வளவு சிறந்தது எனத் தெரிகிறது அல்லவா?

**நலம்பெறு நற் செல்வி!**

இயேசு பெருமானைப் பற்றி நீ உன் கல்லூரிநாளில் படித்திருக்கிறுயல்லவா? அவர் குழந்தைகளைப் பற்றிக் கூறியது உனக்கு நினைவில் இருக்கும் என நினைக்கிறேன். ‘குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்: இறைவனுடைய அருளாட்சி அவர்களுடையதே’ என அவர் கூறியதன் கருத்தென்ன? இறைவன் குழந்தைகள் உள்ளத்தே அன்பால்–அருளால்–ஆட்சி செய்கின்றுன் என்பதன்றே பொருள். வளர்ந்த நம்மைக் காட்டிலும் அவர்கள் ஆண்டவன் அருகில் இருக்கிறுர்கள் என்ற உண்மையைத் தானே இயேசு பெருமான் அவ்வளவு அழகாகக் காட்டுகின்றுர்.

மற்றும் நம் நாட்டில் தெய்வநெறி காட்டியவர்களெல்லாம் குழந்தைகளாக இருப்பதைக் காண்கிறோமல்

லமோ! சைவநெறி தழைத்தோங்க ஏழாம் நூற்றண்டில் தமிழ்நாட்டில் ஊர்தோறும் தந்தையின் தோள்மேலமர்ந்தும், முத்துப் பல்லக்கு ஏறியும் சென்று சென்று, செம்மை நலம் புரிந்த செல்வர் ஞானசம்பந்தர் இளம் குழந்தையல்லவா? பிற்காலத்தில் சைவ சித்தாந்த சாத்திரவழி முப்பொருள் உண்மையை உலகுக்கு உணர்த்திய, வெண்காட்டு இறையருளாலே தோன்றி வளர்ந்த வெண்ணெய்நல்லூரின் வள்ளல் மெய்கண்டாரும் குழந்தைதானே!

காழிக் குழக்தைக்கு உமையே வந்து பாலூட்டினள் என்று பாடுகிறது பெரிய புராணம். குழந்தையின் அழுகை ஒலி கேட்டு 'அஞ்ச'லென ஓடிவந்து அருள் புரியும் தெய்வ வலத்தையே இயேசு அவ்வாறு கூறினர். இந்த ஞானசம்பந்தக் குழந்தைக்கு உமையே வந்து பாலூட்டிய பெருமையை அருள் ஞானம் கைவரப் பெற்ற சிவஞான முனிவர்தாம் எத்தனை அழகாகக் காட்டுகின்றார். பாட்டு இங்கு உனக்கு அத்துணை பெரும் பயன் தராது என்றாலும் அதன் இனிமை கருதியும் கடவுள் குழந்தைகளிடத்தே எவ்வளவு கருணைபூத்து அருள் செய்கின்றார் என்பதைக் காட்ட விரும்பியும் அச் சிவஞான முனிவர் வாக்கை அப்படியே தருகிறேன்.

> தெய்வச் சுருதி தமிழ்க்கன்றித்
>     தீட்டா நிலைமைத் தெனஉலகில்
> தெரிக்கும் காழித் திருஞான
>     செம்மற் குழவிக்கு அருள்ஞானம்
> பெய்து குழைக்கவோ முலையாம்
>     பெரிய மலைவாய் உறுத்துமென்றே
> பெருமான் தனையும் குழைத்தவலிப்
>     பெற்றி அறிந்து தடுத்தோபூங்
> கையில் இலகும் நககுறிபற்
>     கதுவ நோமென்றே தீம்பால்

கறந்து கொடுத்தாய் எனச்சசிமார்
கனிந்து பாட நகைமுகிழ்க்கும்
வைவைத் தமைத்த மதர்வேற்கண்
வாழ்வே வருக! வருக!
வனங்கூர் களந்தைப் பதிஅமுத
வல்லி வருக வருகவே!

(அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ்
—வருகைப் பருவம்)

**அன்புடை அரசி!**

இவ்வாறு குழந்தையைத் தெய்வமாகக் கொண்டாடுவதன்றித் தெய்வத்தையே குழந்தையாகக் கொண்டாடும் மரபும் தமிழ் நாட்டுக்குப் புதியதன்று. கடவுளரைப் பிள்ளையாகப் போற்றிப் பிள்ளைத் தமிழ் பாடி வழிபடும் வழக்கம் தமிழ் நாட்டில் இடைக்காலத்தில் சிறந்திருந்தது. அதுபற்றி உனக்குத் தனியாக ஒரு கடிதத்தில் எழுதுகிறேன். இங்கே அடியவர்கள் தம் அருட்பாடல்களிலே தெய்வத்தைப் பிள்ளையாகப் பாராட்டிய வகையில் இரண்டொன்று காட்டினால் போதும் என்று நினைக்கிறேன்.

அருணகிரிநாதர் முருகனாகிய குழந்தையை நினைந்து நினைந்து, நைந்து நைந்து உருகிப் பாடுபவர். ஆம்! முருகனும் கண்ணனும் குழந்தைகளாகப் போற்றப்படுகின்றவர்தாமே! குழந்தை முருகனைப் பலவகையில் பாராட்டும் அருணகிரியார் அடிக்கடி அக்குழந்தைக்கு அதன் மாமன் இராமனை அறிமுகப் படுத்துவார். 'பல்வேறு சிறப்புக்கள் பெற்ற கண்ணனை-இராமனை மாமனாகப் பெற்ற மன்னா!' என முன்னிறுத்தி முருகனைப் போற்றி வழிபடுவார் அவர். அவ்வாறு திருமாலைப் போற்றும்போது அத்திருமாலையும் குழந்தையாகவே காண விரும்பிற்று அவர் உள்ளம். உடனே தான்

கோசலை ஆகிவிட்ட உணர்விலே திருப்புகழ் பாடல் உருப்பெறுகின்றது.

'எந்தை வருக! ரகுநாயக வருக !
மைந்த வருக ! மகனே இனிவருக !
என்கண் வருக ! எனதாருயிர் வருக — அபிராமா
இங்கு வருக ! அரசே வருக! முலை
உண்க வருக! மலர் சூடிட வருக!
என்று பரிவினொடு கோசலை புகல — வாருமாயன்
சிந்தை மகிழும் மருகா'

என அவர் முருகனைத் எண்ணி இராமனை முன் நிறுத்திப் பாடும்போது அப்படி இராமன் நம் கண்முன் வருவது போன்ற காட்சியை நாம் பெறுகின்றோ மல்லமோ!

திருமாலைப் பாடவந்த அடியார்களுள் குலசேகரர் என் உள்ளத்தைத் தொட்டவர் என்பது உனக்குத் தெரியுமல்லவா? அவருக்கு என் உள்ளத்தில் இடம் கொடுத்ததற்கு முக்கிய காரணம் அவர் ஆண்டவனைக் குழந்தையாக்கிக் கொண்டாடிய சிறப்பேயாகும். இராமனையும், கண்ணனையும் குழந்தையாக்கித் தன்னைக் கோசலையாகவும், தேவகியாகவும் கொண்டு பாடுகின்ற பாடல்கள் உள்ளத்தைத் தொடுவன வல்லவோ!

அசுரர் உரம் தொலைத்த இராகவனைக் குழந்தையாக்கி, அவன் கோசலைக்கு மகனாகப் பிறந்ததைப் பாராட்டிப் பெருமான் பாடும்போது நாம் நம்மை மறக்கிறோம். பெற்றவளேகூட அந்த வகையில் தாலாட்டி இருப்பாளா என நாம் ஐயம் கொள்ளத் தக்க வகையில் அவர்தம் உள்ளம் கலந்த பாடல்கள் நம்மை மறக்கச் செய்கின்றன. பதினொரு பாடல்கள் அப்பகுதியில் உள்ளன. ஒன்றை மட்டும் உனக்குக் காட்டினால் போதும் என நினைக்கிறேன்.

மன்னுபுகழ் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே!
தென்இலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்
செம்பொன்சேர்
கன்னிநன்மா மதில்புடைசூழ் கணபுரத்தென்
கருமணியே!
என்னுடைய இன்னமுதே! இராகவனே! தாலேலோ'
(719)

இவ்வாறே பிற பாடல்களும் அழகின்-அன்பின்-ஆர்வத்தின்-உறைவிடமாய் உள்ளதை நீ பிரபந்தத்தின் வழியே படித்து அறிந்து கொள். அனைத்தையும் எழுதின் கடிதம் நீளும்.

இக் குலசேகரர் இவ்வாறே கண்ணனையும் குழந்தையாக்கித் தாலாட்டும் பாடல் இனிமை தருவதாகும். இதைப் பாடும்போது ஆழ்வார் தேவகியாகிவிடுகிறார். தேவகி கண்ணனைப் பெற்றுத் தன் உடன்பிறந்தவன் கொடுமைக்கு அஞ்சி நந்தன் மனையில் யசோதையிடம் அக்குழந்தையைச் சேர்ப்பித்த கதை உனக்குத் தெரிந்த ஒன்றே! ஏன்? உலகமே அறிந்த கதை அல்லவா அது. எனவே அக் கண்ணனை வளர்க்கும் பேற்றினை இழந்தவள் தேவகி. அவன் வளர்ச்சியைக் கண்டு மகிழும் பேற்றினைத் துறந்தவர் வாசுதேவர். இவற்றையெல்லாம் எண்ணி எண்ணிக் குலசேகரர் தானே தேவகியாகி இத்தேவகிப் புலம்பலைப் பாடுகிறார். இதிலும் எல்லாப் பாடல்களையும் காட்டாது மேலே கண்ட கருத்துக்கள் அமைந்த இரு பாடல்களை மட்டும் காட்டி அமைகின்றேன்.

ஆலைநீர் கரும்பன்னவன் தாலோ
அம்புயத்தடம் கண்ணினன் தாலோ
வேலைநீர் நிறத்தவன் தாலோ
வேழப்போதக மன்னவன் தாலோ
ஏலவார் குழல்என் மகன் தாலோ
என்றென் றுன்னைஎன் வாயிடை நிறையத்
தாலொலித்திடும் திருவினை யில்லாத்
தாய ரிற்கடை யாயின தாயே (708) என்றும்

*முந்தை நன்முறை அன்புடை மகளிர்*
*முறைமுறை தத்தம் குறங்கிடை யிருத்தி*
*எந்தையே என்றன் குலப்பெருஞ் சுடரே*
*எழுமுகில் கணத் தெழில்கவர் ஏறே*
**உந்தை யாவன்***என் றுரைப்ப நின்செங்கேழ்*
*விரலினும் கடைக் கண்ணினும் காட்ட*
**நந்தன் பெற்றனன்** *நல்வினை யில்லா*
*நங்கள் கோன்* **வசுதேவன் பெற்றிலனே**' (710)

*என்றும் அவர் பாடிய பாடல்கள் நெஞ்சை அள்ளுவன அல்லவா! இவைபோன்றே பல்வேறு பிள்ளைமை விளையாடல்களைப்பிற பாடல்களிலும் காட்டிக் கொண்டே செல்கின்றார் ஆழ்வார். அவற்றையெல்லாம், வாய்ப்பிருக்குமேல் வரும் கடிதங்களில் காட்டுகிறேன்.*

*இவ்வாறு கடவுளரைக் குழந்தையாகவும், குழந்தையைத் தெய்வமாகவும் கண்டு போற்றும் வழக்கம் தமிழ்நாட்டுப் பழம் பெரு வழக்கம். நான் முன் காட்டியபடி குழந்தையும் தெய்வமும் பல வகையில் ஒன்றுபட்ட பண்பிலே சிறப்பன. அந்தகைய குழந்தை நலம் பெற்ற நீ அதைச் சிறக்கப் புரந்து செழிக்க என வாழ்த்தி இக் கடிதத்தை முடித்துக் கொள்ளுகின்றேன்.*

*அன்புள்ள,*
**அப்பா.**

## 9. பாலுண்ணும் பசுங்குழவி

**அன்புள்ள மங்கைக்கு!**

எனது முந்திய கடிதத்தில் குழந்தையாகிய கண்ணனை நினைத்துத் தேவகி புலம்பிய ஒரு பாடலைக் குறித்திருந்தேன் அல்லவா! அந்தப் பத்துப்பாடலையும் அப்படியே இரண்டொருமுறை திரும்பத் திரும்பப் படிக்க வேண்டும் என உணர்வு பிறந்தது. உயர்ந்த அரசசெல்வத்தில் பிறந்த குலசேகர் இத்தனை உருக்கமாக—அதிலும் கண்ணனைக் குழந்தையாக—எண்ணிப் பாடும் இயல்புபெற்றதை எண்ணி எண்ணி வியந்தேன். இன்று செல்வர் என்று தம்மைக் கூறிக் கொள்ளுகின்றவர் பலர் குழந்தை இன்பத்தை அறியாமல் உள்ளவர்களே. பிள்ளை பிறந்தால் அதைப் பாராட்டிச் சீராட்டி வளர்க்கத் தாய்மார்களுக்குத் தெரியாது; அன்றித் தெரிந்தாலும் அது நாகரிகமன்று எனக்கூட எண்ணுவார்கள். இன்றைய நாகரிகம் அத்தகையது.

பெற்ற குழந்தைக்குப் பால் ஊட்டலும்கூடத் தவறு எனக் கருதும் உலகில்தான் நாம் வாழ்கின்றோம். இது பற்றி முன்னொரு கடிதத்தில்கூட நான் குறித்திருக்கிறேன். ஆயினும் இந்தக் குலசேகரர் பாடலைப் படித்த பின் அதுபற்றி உனக்கு எழுதவேண்டும் என்று தோன்றிற்று.

பிள்ளை பிறக்கவில்லையே என்று எத்தனையோ பேர் தவம் இருக்கும் நிலையும், காசி, இராமேச்வரம் சென்று வரும் நிலையும் நாட்டில் இன்னும் காண்பனவே. ஆனால் அதே வேளையில் கருத்தடை செய்யவேண்டும் என்ற பிரசாரமும் அதற்காக அரசாங்கத்தாரே முன்னின்று நடத்தும்பல மருந்தகங்களும் நாம் கண்முன் தோன்றுகின்றன. மக்களினம் பெருத்துவிட்டால் அவர்களுக்கு வாழ்வளிக்க முடியாதே என்ற காரணத்தால் இக்கொடுமை நடைபெறுகின்றது. நாளிதழ்களில் அன்றாடம் வரும் செய்திகளைப் பார்த்தால் இதுவும் சரிதானோ என எண்ண வேண்டியிருக்கிறது. நேற்றுக்கூட (17-2-60) குழந்தையைக் கொன்று தன்னையும் மாய்த்துக்கொண்ட செய்தியும், தனிஒருத்தி வறுமையால் தற்கொலை செய்து கொண்ட செய்தியும் பத்திரிகைகளில் நீ படித்திருப்பாய். இத்தகைய செய்திகளைக் கண்டால் அரசாங்கம் இவ்வாறு செய்வது சரிஎனத்தான் தோன்றும். எனினும் ஆழ்ந்து எண்ணிப்பார்த்தால் நாட்டில் உணவுப்பொருள் இல்லாத காரணத்தால் இந்த நிலை ஏற்படவில்லை. இருந்தும் சரியாக மக்கள் பங்கிட்டுக்கொள்ள விரும்பாததாலேயே இந்த நிலை ஏற்படுகிறது. எனவே அரசாங்கம் நோய்முதல் நாடி உணவுப்பொருளை அனைவருக்கும் சரியாகப் பங்கிட்டுக் கொடுக்கவும், எல்லோருக்கும் உழைத்துச் சம்பாதிக்கும் வாய்ப்பை உண்டாக்கிக் கொடுக்கவும் முயன்றால் இக்கொடுமைகள் நிகழா. எங்கோ சென்றுவிட்டேன்!

**அன்பின் செல்வி !**

*பிள்ளை பிறக்கவில்லையே என்று வருந்துவார் ஒரு புறம் இருக்கப் பிள்ளையைப் பெற்றவர்கள் அவதிப்படுவதும் உண்டே! சினிமாவிலும் கூட 'ஏன் பிறந்தாய்?' என்று தன் வயிற்றில் பிறந்த குழந்தையைக் கண்டு கேள்விகேட்கும் படங்கள் நாட்டில் நடமாடுகின்றனவே. காக்கமுடியாது கவலையுறும் பெற்றோர் நிலை அது. நான் இங்கே விளக்கவந்தது அது வன்று. காக்க வசதியும் வாய்ப்பும் உள்ளவர்களே தங்கள் குழந்தைகளை நன்ருகக் காப்பதில்லை என்பதுதான் நான் சொல்லவந்தது. சில செல்வர் வீட்டுப் பெண்கள் தங்கள் அழகு கெட்டு விடும் என்ற காரணத்தால் குழந்தைகளுக்குப் பால் தருவதையே விட்டுவிடுகிருர்கள். சில குழந்தைகள் பிறக்கும்போது புட்டிப்பாலும் கையுமாகவே பிறக்கின்றன—பாவம்! அவை இரக்கத்துக்கு உரியனவே! அதற்கேற்ருற் போன்று பல வியாபாரிகள் எத்தனையோ வகையான பால் புட்டிகளையும் பாற்பொடிகளையும் உண்டாக்கி விற்பனைக்கு அழகிய குழந்தை உருவோடு விற்க அனுப்பிவிடுகிருர்கள். பெற்ற தாயார் அவற்றை எவ்வளவு அதிக விலையாளுலும் போட்டியிட்டு வாங்கித் தத்தம் குழந்தைகளை உண்பிக்கின்றனர். தாய்மை, உள்ளத்து அரும்ப வேண்டும் என்று உலகுக்கு உபதேசம் செய்யும் சில பெண்கள்கூடத் தங்கள் உள்ளத்து அத்தாய்மை அன்பைத் துடைத்துவிடுகிருர். ஆம், இந்த நூற்ருண்டின் நாகரிகமே அதுதான், நாள்தோறும் மேடை ஏறிப் பேசியும், பக்கம் பக்கமாகப்பல பத்திரிகைகளிலும் நூல்களிலும் எழுதியும் மற்றவர்களுக்கு வழி காட்டிகளாக உள்ளவர்கள் தங்கள் வழியைத் தனிப்போக்கிலே அமைத்துக் கொள்வதுதானே இருபதத்தாம் நூற்ருண்டின் இடைப்பட்ட நாகரிகம். ஊருக்கெல்லாம் ஒளிவீசும் அந்தவிளக்கு தன் தண்டின்*

அடியில் உள்ள இருளை நீக்காது போவது நாம் காண்பது தானே. மறுபடியும் இன்று எங்கெங்கோ செல்கிறேன்.

பெற்ற குழந்தைக்குப் பால் ஊட்டுவது அநாகரிகம் என்று நன்கு படித்த பெண்களும் செல்வர் வீட்டுப் பெண்களும் இருக்க, ஏழைகளும் கிராமத்தில் வாழ்வோம் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கும் அந்த இன்பத்தை இழவாமல் பாதுகாத்துத்தான் வருகிறார்கள். தேவகி அத்தகைய பெண்களுள் ஒருத்தி. குழந்தையைப் பெற்றவர்கள் குழந்தைக்காக இல்லாவிட்டாலும் இக்குழந்தைக்குப் பாலூட்டுவதில் தாம் பெறும் இன்பத்திற்காகவது ஊட்டலை மறுக்க இயலாது. சில நலிவுள்ளவர்கள் பால் இல்லை என்ற காரணத்தால் வேறு பால்களை நாடுவது இயல்பு. ஆனால் உண்ண உண்ணச் சுரக்கும் உடல் வளம் பெற்றவர்களும் புறநாகரிக வாழ்வுக்காகப் பிள்ளைமையின் கொள்ளை இன்பத்தைத் துறப்பார்களானால் அவர்களை என்னென்பது? எப்படியோ அப்படிப்பட்ட பெண்களால்தான் இன்றைய நாகரிக உலகில் விரைந்து முன்னேற முடிகின்றது. இது காலத்தின் கோலம் போலும்.

கண்ணன் தேவகியின் மைந்தனாகப் பிறந்தவன். ஆனால் அவளிடம் வளரவில்லை. நந்தகோபன் மனைவியாகிய யசோதையின் செல்வமகனாக வளர்ந்தான். அவன் தன்மடியில் இருந்து எப்படி எப்படிப் பால் உண்பான் என்பதை எண்ணிப் பார்க்கிறது தேவகியின் உள்ளம். கண்ணன் பால் உண்பதாகப் பல வண்ணப் படங்கள்கூட நாட்டில் உலவுவதை நீ கண்டிருப்பாய். ஆம்! அந்தத்தோற்றம் தேவகியின் உள்ளத்தில் உருப்பெற்றது. என்றாலும் அந்த இன்பத்தைத் தான் பெறவில்லையே என்றபோது உள்ளம் தடுமாறிற்று. உதடு அசைந்தது; வாய் பாடிற்று. இதோ அந்தப் பாடல்.

குழகனே என்றன் கோமளப் பிள்ளாய்
கோவிந்தா என் குடங்கையில் மன்னி
ஒழுகு பேரெழில் இளஞ்சிறு தளிர்போல்
ஒருகையால் ஒருமுலை முகம் நெருடா
மழலை மென்னகை இடையிடை அருளா
வாயிலே முலை இருக்க என் முகத்தே
எழிகொள் நின் திருக்கண் இணைநோக்கம்
தன்னையும் இழந்தேன் இழந்தேனே
(தேவகி புலம்பல் 7)

இதில் அவளுடைய உள்ளத்தைத்தான் குலசேகரர் எத்தனை அழகாகப்படம் பிடித்துக்காட்டுகின்றார். அந்தப் பாலூட்டும் இன்பத்தை இழந்த அவள் நிலையில் தன்னை வைத்துப்பாடும் அவர் பரிசு பாராட்டுதற்குரியதன்றோ!

பெற்ற குழந்தையைத் தன் கையிடைவைத்துப் பாலுட்டுதல் தாயர்மரபு. அப்படிக் கையிடை அடங்கும் குழந்தையின் பாலுண்ணும் தோற்றம் எத்தகையது. ஒரு தனத்தில் தன் வாயை வைத்துப் பால் உண்ணும் குழந்தை அப்படியே அரசவற்று இருக்காது. பொதுவாகவே குழந்தையின் உடல் உறுப்புகள் அனைத்தும் ஓயாமல் தொழிற்பட்டுக் கொண்டேதான் இருக்கும். பால் உண்ணும் குழந்தை இன்னும் மகிழ்ச்சியில் திளைத்து ஆடுமல்லவா! ஆம்! அந்த ஆட்டத்தால் பெறும் இன்பத்தை நீ இதற்குள் பெற்றிருப்பாய் என நினைக்கிறேன். அவ்வின்பம் பெரிது. அதையே குலசேகரர் பாட்டாக வடித்துத் தந்துள்ளார்.

ஒரு தனத்தடத்தில் வாய்வைத்துப் பாலைச் சுவைக்கும் அப் பசுக் குழவி, மற்றொரு கையால் மற்றொரு தன முகட்டைத் தொட்டு நெருடுகின்றது. அதற்கு இடையில் சிரிக்கிறது. தாயின் முகத்தை நோக்குகிறது. அந்த நிலையில் அதன் நோக்கு, தனது முகத்தோடு பொருந்தும் இன்பத்தையே குலசேகரர் இறுதியில் வைத்துப்

பாராட்டுகின்றார். ஆம்! இந்த இன்பத்தை ஏட்டிலே விளக்கி எழுத முடியாது. குலசேகரர் எப்படியோ பாட்டில் அழகாக வடித்துவிட்டாரே ஒழிய, யாராலும் விளக்கமாக அழகுபடக் காட்ட முடியாது. அவரவர் அந்த இன்பத்தைப் பெற்றபொழுதுதான் அறிந்து மகிழ்வர். பெற வாய்ப்பிருந்தும் இழப்பவர்களையும், வாய்ப்பே இல்லாதவர்களையும் என்ன சொல்லிக் காட்ட முடியும்? நீ உன் அருகில் உள்ள குழந்தையின் செயல் அனைத்தையும் ஊன்றிக் கவனித்துக் களித்து மகிழ்வாய் என நினைக்கின்றேன். இதோ அந்த இன்பத்திலே உன்னை இருக்கவிட்டு என் கடிதத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.

அன்புள்ள,

**அப்பா.**

## 10. பிள்ளைத் தமிழ்

**அன்புள்ள அரசி,**

முன் ஒரு கடிதத்தில் 'குழந்தையும் தெய்வமும்' என்பது பற்றி எழுதினேன் அல்லவா? ஆம். அவை இரண்டும் ஒரே தன்மை உடையன; அன்பால் விரும்பி அழைப்பவரை விரைந்து பற்றிக் கொள்வன என்று கண்டாய் அல்லவா ? அந்த அடிப்படையிலேயே ஆண்டவன் அடியவரில் சிலர் அந்த ஆண்டவனையே குழந்தையாக எண்ணிப் போற்றி வழிபட்டிருக்கின்றனர். கண்ணனையும், இராமனையும் குழந்தையாகக் கண்ட குலசேகரருடைய பாடலை நீ முன் படித்தாயல்லவா? அது பிள்ளைத் தமிழுக்கு முன் வழிகாட்டிய பாடல். ஆனால் குலசேகரருக்குப் பின்னால் பல அடியவர்கள் கடவுளரைப் பிள்ளைகளாகவே எண்ணி எண்ணிப் போற்றி வழிபட்டுள்ளனர். தமிழில் உள்ள தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களில் பிள்ளைத் தமிழ் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது.

பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் உளங்குளிர்ந்து பாடும் அடியவர்கள் தாம்தாம் வழிபடு கடவுளரை எத்தனை எத்தனை வகையாகப் போற்றுகிறார்கள் தெரியுமா? உண்மையிலேயே குழந்தைகளைப் பெற்ற தாயார்கூட அத்துணை அளவில் சிறப்பாகப் போற்றமாட்டார்கள். அடியவர் தாம் வழிபடும் தெய்வத்தைக் குழந்தையாக்கி, அந்தக் குழந்தை எப்படி எப்படி மெள்ள மெள்ள வளருகிறதோ அதற்கு ஏற்ற பருவங்களை அமைத்து, அந்தந்தப் பருவத்தில் காணும் பிள்ளைமை விளையாட்டையெல்லாம் எழுத்தோவியத்தில் படம் பிடித்துக்காட்டும் சிறப்பைக் கற்றவர்கள் தாம் அறிவர். நீயும் சில பிள்ளைத் தமிழ்ப் பாடல்களைக் கல்லூரி வகுப்புக்களிலும் பள்ளி வகுப்புக்களிலும் பயின்று இருப்பாய் அல்லவா?

கடவுளரில் பலரைப் பிள்ளைகளாகப் பாராட்டுவர். எனினும் சிவனுக்குப் பிள்ளைத் தமிழ் காணோம். சிறப்பாக முருகனுக்குத்தான் அதிகமான பிள்ளைத் தமிழ் நூல்கள் உள்ளன. அம்மைக்கும் சில உள. இப்பிள்ளைத் தமிழ்ப் பாடல்களை வைத்துப் பின் வந்தவர்கள் இலக்கணங்களைப் பாட்டியலில் உண்டாக்கி விட்டார்கள். பிள்ளைத் தமிழ்ப் பருவங்கள் இவை என்றும், அவ்வக் காலத்தில் பிள்ளை எவ்வெவ்வாறு வளர்ச்சி அடையும் என்றும், அவ்வப்போது அப்பிள்ளையின் நிலை எவ்வெவ்வாறு இருக்கும் என்றும் அதை எப்படிப் பாடிக் கொண்டாட வேண்டும் என்றும் பலவாறு இலக்கணங்களை எழுதி இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் இங்கே உனக்கு நான் எழுதப்போவதில்லை. அவை தேவையற்றவையும்கூட. என்றாலும் அந்தப் பிள்ளைமை விளையாட்டை எல்லாம் அடியவர்கள் பாடிப்பாடி உளமுருகி நிற்பதை நீ நினைத்துப் பார்க்கத்தான் வேண்டும்.

**அன்பின் அரசி!**

குழந்தையைப் பாடவந்த புலவர்கள் முதலில் 'காப்பு பருவம்' என அமைத்துள்ளனர். தாம் பெற்ற குழந்தையைக் காக்க விரும்பும் தாயார் காப்பிடுவதை நீ காண்பாய். இளங்குழந்தைகளுக்கு நோய்வரின், அந்த நோய் நீங்க வேண்டுமென்று பெற்றவர்கள் இறைவனை நினைத்து மஞ்சள் துணியில் 'காசும் நெல்லும்' கலந்து முடிந்து அந்தக் குழந்தைகளின் கைகளில் 'கடவுள் காக்க' என்று சொல்லிக் காப்பாகக் கட்டுவதை நீ அறிவாய் அல்லவா! ஆம்! அந்தக் காப்புத்தான் பின்னால் பொன், வெள்ளிக் காப்புக்களாக உருவெடுத்தது. அதுபற்றிய ஆராய்ச்சி உனக்கு வேண்டாம். அடியவர் அந்தக் காப்புப் பருவத்தில் தாம் தாம் வழிபடும் கடவுளைக் குழந்தையாக்கி அக்குழந்தையைக் காக்க வேண்டுமென வேறு தெய்வங்களை வேண்டுவது முறை என்பதை நீ அறிந்தால் போதும்.

அடுத்து அவர்கள் தாலப்பருவம், செங்கீரைப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம் என்று பருவங்களைக் குழந்தை வளர வளர வளர்த்துக்கொண்டே செல்வர். அவற்றுள் இரண்டொன்று உனக்கு இதற்குள் அனுபவமாகியிருக்கும். குழந்தையைத் தொட்டில் இட்டுத் தாலாட்டுவது நீ அறிந்த ஒன்றல்லவா! ஆம்! அதை அடியவர்கள் எத்தனை எத்தனை அருமையாகப் பாடுகிறார்கள் தெரியுமா? வீட்டில் குழந்தையைத் தாலாட்டும் பெண்கள்கூட அவற்றில் பத்தில் ஒரு பங்கு பொருந்தப் பாடுவார்களா என்பது ஐயமே! ஏன்? நீயே உன் குழந்தையை அப்படி எல்லாம் தாலாட்டி இருக்கிறாயா என்பதை எண்ணிப்பார். நிச்சயம் பாடி இருக்கமாட்டாய். இதோ ஒரு பாடலை எடுத்துக் காட்டுகிறேன்.

குமரகுருபரர் முருகனிடத்து இடையறாத ஈடுபாடு உடையவர்; அவனை எண்ணி எண்ணிப் பாடுபவர்; புள்ளிருக்கும்வேளூர்க் குமரனைக் குழந்தையாகக் கண்டு போற்றியவர், அக்குழந்தைத் தாலாட்டில் அவனுடைய பலப்பல பெருமைகளைக் கூறித் தாலாட்டும் திறம் வியக்கற்பாலது, இதோ அவர் பாட்டு; நீயே படித்துச் சுவைத்துப்பார்.

ஊனாய் உயிர்க்குயிரானாய் தாலோ தாலேலோ
ஓதாது உணர்த்திடு போதா தாலோ தாலேலோ
ஆனா அருட்கு அனுபானா தாலோ தாலேலோ
ஆயாத சொற்சொல் உபாயா தாலோ தாலேலோ
நானாய் எனக்கரிதானாய் தாலோ தாலேலோ
நாதநிகட்டு அனுபூதா தாலோ தாலேலோ
தேனார் பொழிற் குருகூரா தாலோ தாலேலோ
சேனாபதிப் பெருமாளே தாலோ தாலேலோ
(முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ்)

என்ன எண்ணுகிறாய்.? இப்படி நீ உன் குழந்தையைக் கூட இதுவரை தாலாட்ட வில்லையே என்றுதானே. ஆம்! நான் முன்சொன்னபடி, நீ மட்டுமன்று; உலகில் எல்லாத் தாயாருமே இத்தனை அருமையாகத் தாலாட்டி இருக்க மாட்டார்கள். அடியவர் அன்புவழிப் பெருக்கெடுத்து ஓடிவரும் இன்பப் பாடல்களே தனிநலம் வாய்ந்தவை.

இதுபோன்றே செங்கிரை, முத்தம், வருகை முதலிய பருவங்கள் அமைகின்றன. அவற்றின் சிறப்பை யெல்லாம் உன் குழந்தை இனிதான் உனக்குக் காட்டும். என்றாலும் இங்கு அடியவருக்கு ஆண்டவன் காட்டிய அந்த அழகுக் காட்சிகளையெல்லாம் தொடர்ந்து காட்டியே இக்கடிதத்தை முடிக்கலாம் என்று கருதுகின்றேன். கடிதம் சற்று நீளும்தான். எனினும் அன்புடைய மெய் அடியவர் பாடல்கள் இடையிடை வருவதால் நீ சுவைத்துப் பயிலலாம் என எண்ணுகின்றேன்.

உன் குழந்தை ஏதேதோ மழலை மொழி பேசுகின்றது எனக் கடிதத்தில் எழுதி இருந்தாய் அல்லவா! அதன் பொருள் உனக்கு மட்டுமன்று, யாருக்குமே தெரிவதில்லை. மேலை நாட்டு அறிஞர் பலர் குழந்தையின் வளர்ச்சியில் காணும் மாறுபாடுகளையும், உள்ள வளர்ச்சிகளையும், பிறவற்றையும் ஆராய்ந்து பார்க்கிறார்கள். என்றாலும் அதில் உள்ள நயமும் இனிமையையும் வேறு எதிலும் இல்லையல்லவா! இதனால்தானே திருவள்ளுவர்.

'குழல்இனிது யாழ் இனிது என்ப தம்மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்'

எனக் காட்டியுள்ளார். ஆம்! குழந்தைகள் எப்படி எப்படிப் பேசுகின்றன என்பதை வேண்டுமானாலும் படம் எடுத்தும் ஒலிப்பதிவு செய்தும் காட்டிவிடலாம், ஆனால் அவை ஏன் அப்படிப் பேசுகின்றன? செய்கின்றன? என்பதை யாராலும் எடுத்துக் காட்ட முடியுமா? குழந்தையின் ஒவ்வொரு சொல்லுக்கும் செயலுக்கும் யாரால் விளக்கம் தரமுடியும்?

இங்கே எனக்கு ஒன்று நினைவு வருகின்றது. விஞ்ஞான உலகிலேயே சிறந்தவர் என்று இன்று போற்றப்படுகின்றவர் ஐன்ஸ்டீன் என்பவர். இதை நீ அறிவாய் அல்லவா. அவர் அண்டகோள நிகழ்ச்சிகளை-வானவெளி நிகழ்ச்சிகளை—ஆராய்ந்து முடிவில் இப்படித்தான் கூறியுள்ளார். 'இந்த இயற்கை நிகழ்ச்சிகளெல்லாம் எப்படி எப்படி – எவ்வெவ்வாறு - நிகழ்கின்றன என்றெல்லாம் என்னால் கூறிவிட முடிகின்றது. ஆனால் ஏன் நிகழ்கின்றன என்று கேட்டு விடாதீர்கள். அவை யாராலும் கூற முடியாதன' என்கிறார். ஆம்! இதே கூற்றுத்தான் குழந்தைகள் நிகழ்ச்சியிலும் நாம் காணமுடியும். ஆம்! அதன் மழலை மொழிக்குப் பொருள்கூற முடியாதது மாத்திரமன்று; ஏன் அவ்வாறு பேசுகிறது என்பது பற்றியும் நம்மால் ஒன்றும் சொல்ல இயலாது.

'உண்ணிலா உவகை பெருங்களி துளும்பநின்று
உன்திருத் தாதை நின்னை
ஒருமுறை கரம்பொத்தி வருகென அழைத்திடுமுன்
ஓடித் தவழ்ந்து சென்று
தண்ணுலாம் மழலைப் பசுங்குதலை அமுதினிய
தாய்வயிறு குளிர ஊட்டி
தடமார்பு நிறைகுங் குமச்சே றளைந்துபொன்
தாள்தோய் தடக்கை பற்றிப்
பண்ணுலாம் வடிதமிழ்ப் பைந்தாமம் விரியும்
பணைத்தோள் எருத்தம் ஏறிப்
பாசொளிய மரகதத் திருமேனி பச்சைப்
பசுங்கதிர்த் ததும்ப மணிவாய்
தெண்ணிலா விரியநின் முடும் பசுந்தோகை
செங்கீரை ஆடி அருளே
தென்னற்கும் அம்பொன்மலை மன்னற்கும் ஒருசெல்வி
செங்கீரை ஆடி அருளே'

என்று குமரகுமாரர் மீனாட்சி அம்மையின் வாயுறு மழலை மொழிக்கு ஏங்கி நிற்கும் நிலை எண்ணி எண்ணிப் போற்றத்தக்கது அல்லவா!

இது போன்றே பின் பெயர்ந்து தளர் நடையிடும் குழந்தையை வருக என அழைக்கும் பாடல்களும், முத்தம் தருமாறு வேண்டும் பாடல்களும், பின் சந்திரனைக் குழந்தையோடு விளையாட அழைக்கும் பாடல்களும் பல்வேறு வகையில் சிறந்தனவாக அமைகின்றன. அழகிய சொக்கநாதர் நெல்லையில் வாழ் காந்திமதி அம்மையை அழைக்கிறார். அடியவர் அழைக்க அம்மையோ அப்பனோ உடன்வருவதில்லை. காலம் தாழ்ந்திருக்கும். குழந்தையும் அழைக்க அழைக்கத் தூரத்தே குறும்புகள் செய்திருப்பதைக் கண்டிருப்பாய். இருவகையிலும் அன்பரிடத்தும் அன்னையரிடத்தும் வருகை காலம் தாழ்க்கிறது. அதை உணர்ந்த சொக்கநாதர் அம்மை வராவிட்டால் இன்னின்ன செய்ய

மாட்டேன் என்று வேடிக்கையாகக் கூறுகின்றார். அதில் குழந்தைக்குத் தாயார் செய்ய வேண்டிய கடமைகள் அத்தனை வகையையும் இணைத்துக் காட்டுகின்றார் புலவர். அந்தப் பாடலைக் கேட்டால் யார்தான் அருகில் வாராது இருப்பர்? அம்மை காந்திமதி அருகில் வந்து அருள் புரியா திருப்பளோ! கட்டாயம் புரிந்திருப்பாள். இதோ அவர் பாடல்,

''வாரா திருந்தால் இனிநான்உன்
வடிவேல் விழிக்குமைஎழுதேன்
மதிவாள் நுதற்குத் திலகமிடேன்
மணியால் இழைத்த பணிபுனையேன்
பேராதரத் தினொடு பழக்கம்
பேசேன் சிறிதும் முகம்பாரேன்
பிறங்கு சுவைப்பால் இனிதூட்டேன்
பிரியமுடன் ஒக்கலையில் வைத்துத்
தேரார் விதி வளங் காட்டேன்
செய்ய கனிவாய் முத்தமிடேன்
திகழும்மணித் தொட்டிலில் ஏற்றித்
திருக்கண் வளரச் சீராட்டேன்
தாரார் இமவான் தடமார்பில்
தவழும் குழந்தாய் வருகவே
சாலிப்பதி வாழ் காந்திமதித்
தாயே! வருக வருகவே!

இந்தப் பாடலைப் படிக்கும்போது நம் உள்ளம் எவ்வளவு மகிழ்கிறது என்பதை நீயே எண்ணிப்பார். இப்படியே ஒவ்வொரு பருவத்திலும் குழந்தை விளையாட்டைப்பற்றியெல்லாம் அன்புடைய அறிஞர்கள் பாராட்டிப் பாடியுள்ளார்கள்.

இன்னும் முத்தம் பருவம், அம்புலிப் பருவம் போன்றவற்றுள்ளே குழந்தை முத்தத்துக்கு ஏங்கும் பெற்றோர்கள் நிலை எல்லாம் நன்கு விளக்கப் பெறுகின்றன. அத்துடன் குழந்தையோடு அம்புலியை விளையாட அழைக்கும் பருவமே பிள்ளைத் தமிழில் சிறந்த இடத்தைப்

பெறுகின்றது என்பதை நீ அறிவாய். சந்திரனைத் தம் மகவுடன் விளையாட அழைக்கும் தாய்தான் எத்தனைச் சதுருடன் 'சாமபேத தான தண்ட' முறைகளைக் கையாளுகின்றாள். அவற்றையெல்லாம் நீ அடியவர்தம் நூலில் படித்தறிந்துகொள். விரைவில் சிறந்த பிள்ளைத் தமிழ் நூல்கள் சில வாங்கி அனுப்புகிறேன்.

அம்புலிக்குப்பின் ஆண்பிள்ளைக்குச் சிற்றிலும் சிறுதேரும் சிறுபறையும் விளையாட்டுப் பருவங்களாகக் காட்டுவர், பெண்பாலுக்குக் கழங்கு, அம்மானை, ஊசல் இவைகளைப் பருவங்களாகக் காட்டுவர். இவற்றின் வழி குழந்தை இயங்கும் விளையாடல்களையெல்லாம் நீ இன்னும் குழந்தை வளர வளரக் காண்பாய். எனவே அவை பற்றி எல்லாம் இன்றே நான் அதிகமாக ஒன்றும் காட்டவில்லை. என்றாலும் முத்தப் பருவத்தில் ஒரு பாடலை மட்டும் காட்டி இக்கடிதத்தை முடித்துக்கொள்கிறேன்.

'கத்தும் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரியின்
கரையில் தவழ்ந்த வாலுகத்தில்
கான்ற மணிக்கு விலையுண்டு
தந்தும் கரடவிகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில் விளை
தரளந் தனக்கு விலையுண்டு
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்தும் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு
கொண்டல்தரு நித்திலம் தனக்கு
கூறும் தரமுண்டு உன்கனிவாய்
முத்தம் தனக்கு விலைஇல்லை
முருகா முத்தம் தருகவே
முத்துக் குமரா திருமலையின்
முதல்வா முத்தம் தருகவே

அன்புள்ள,
**அப்பா.**

## 11. பாரதியும் பாப்பாவும்

**அன்பின் அரசி!**

சங்க காலப் புலவர் தொடங்கி இன்றைய புலவர் வரையில் பலரும் குழந்தையைப் பற்றிப் பாடிய பல பாடல்களையும் அவற்றின் கருத்துக்களையும் நீ இது வரை கண்டுவந்தாயல்லவா! நம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரதியார் பாடல்களிலேயும் இரண்டொன்றை உனக்கு முன்பே எடுத்துக் காட்டி இருக்கிறேன். பாரதியார் பாடல்கள் உனக்குப் பழக்கமானவைதாம். தமிழ் மொழியை பற்றியும் தமிழ்நாட்டைப் பற்றியும் பாரத நாட்டைப் பற்றியும் அதன் சிறப்புக்களைப் பற்றியும் அவர் பாடியுள்ள பலப்பல பாடல்கள் நீ அறிந்தவை தாம். அவர் கண்ணன், கண்ணம்மா இருவரையும் முன் னிறுத்தி அவர்களைப் பலப்பல வகையில் பாராட்டிப் போற்றுகின்றார். அவற்றுள் கண்ணம்மாவைக் குழந்தை யாக்கி அவர் பாராட்டும் பாடல் சிறந்த ஒன்று.

தெய்வங்களைக் குழந்தையாக்கிப் பிள்ளைத்தமிழ் பாடும் மரபு பற்றி உனக்கு முன் கடிதத்தில் எழுதியுள்ளேன். இங்கேயும் பாரதி அதே வகையிலேதான் கற்பனையில் தெய்வத்தைக் குழந்தையாக்கிப் போற்றி, அக்குழந்தையின் பிள்ளைமை விளையாட்டையெல்லாம் அழகுபடப் பேசுகின்றார். பாரதியாரின் பாடல் இனிமையாக அமைவதோடு அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாகவும் உள்ளது என்பதை நீ நன்கு அறிவாய் அன்றோ! ஆம்! அதே இனிமையும் எளிமையும் கலந்த பாடல்களால் 'கண்ணம்மா' என்ற கற்பனைப் பெயரில் குழந்தையை முன்னிறுத்திப் பிள்ளைமை இன்பத்தையெல்லாம் வாரிவாரிப் பெய்கின்றார் அவர். அவர்தம் இந்தப்பாடல்களெல்லாம் நீ அறிந்தவைதாம். சில பாடல்களைத் திரைப் படங்களிலும் தனிமுறையிலும் பாடிக்காட்டி நாட்டில் ஒலிபெருக்கிவழி அப் பாடல்களை வீசிக்கொண்டுதான் இருக்கின்றனர். எனினும் இங்கே ஒருசிலவற்றை நான் உனக்கு எடுத்துக் காட்ட நினைக்கின்றேன்.

**அரசி !**

உலகில் வாழும் மக்களுக்குப் பிள்ளைகளே பெருஞ்செல்வம் என்பதை வள்ளுவர் முதலிய பல அறிஞர்கள் கூறியிருப்பதை நீ நன்கு அறிவாய். பிள்ளைகளுக்கு வடமொழியில் 'புத்திரன்' 'புத்திரி' என்ற பெயர்கள் உண்டென்றும் அவர்கள் பெற்றோரைப் 'புத்து' என்னும் நரகத்தில் இருந்து மீட்பவர்களென்றும் அறிந்தவர்கள் கூறுவார்கள். எனவே பிள்ளைப் பேறு இம்மையில் மட்டுமன்றி, மறுமைக்கும் இன்பம் தரவல்லது என்பது அனைவரும் ஒருசேர ஒப்புக்கொண்ட உண்மையாகும். ஆம்! அக்குழந்தைகளே பெற்றவர்தம் கலி தீர்க்க வரும் பெருந்தெய்வங்கள். பெற்றவர் உள்ளத்தே எத்தனையோ வேதனைகள் பின்னிக் கிடந்தாலும், இளங்

குழந்தைகள் முகத்தையும் அவற்றின் சிரிப்பையும் கண்டால் மகிழ்ச்சி பிறப்பது இயல்புதானே. அந்தப் பிள்ளைகளால் வாழ்வே ஏற்றம் பெறுமல்லவா! இவற்றையெல்லாம் எண்ணிய பாரதியார்

'சின்னஞ் சிறு கிளியே—கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலி தீர்த்தே—உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்'

என்று அழகாகக் கொஞ்சும் இனிய எளிய தமிழில் எடுத்துக்காட்டிவிட்டார். அவர் அத்துடன் அக்குழந்தையையே கனியாகவும், அமுதாகவும், பொற்பாவையாகவும்—ஆம்—பேசும் பொற்பாவையாகவும், தேனாகவும் பலவகையில் சிறப்பிக்கின்றார். ஆம். கனி, அமுது, தேன், இவைகள் வாய்க்கு இனிமையாக இருப்பன மட்டுமல்லாது வாழ்வையே நோயற்றதாக்கி வளமுறச் செய்கின்றன அல்லவோ! அதுபோன்றே குழந்தை இன்பமும் அப்போதைக்கு இனிமை தருவது மட்டுமல்லாது நம்வாழ்வையே வளமாக்கி என்றென்றும் சிறக்க வைக்கும் என்பதை நீ கண்டு உணரவேண்டும். ஆம்! உன்குழந்தை ஏதோ இந்த வேளையில் உன்னைச் சிரித்து மகிழவைக்கும் ஒன்று மட்டுமன்று, வழிவழியாக உன் வாழ்வையும், வளத்தையும், பிறவற்றையும் சிறக்க வைக்கும் செல்வக்களஞ்சியம் அதுவாகும்.

'பிள்ளைக் கனி அமுதே—கண்ணம்மா
பேசும் பொற் சித்திரமே
அள்ளி அணைத்திடவே—என்முன்னே
ஆடி வரும் தேனே'

என்று பாரதியார் பாடும்போதே குழந்தை நம்முன் ஆடி ஓடி வருவது போன்றே ஒரு மயக்க நிலை உண்டாகிறதல்லவா?

இனி, பாரதியார் அந்தக்குழந்தை ஒவ்வொருவகை யில் தரும் இன்பங்களை எளிமையாக விளக்கிக் கொண்டே செல்லுகின்றார். ஆடி ஓடி வரும் குழந்தை யைக் காணுவதில் பெறும் இன்பமும், அக்குழந்தை யைக் கட்டித் தழுவுவதால் பெறும் இன்பமும், அக் குழந்தையை ஊரார் 'மிக நல்ல குழந்தை, அழகிய குழந்தை' என்று பலவாருகப் புகழ்ந்தால் பெறும் இன் பமும், முத்தமிட்டால் பெறும் இன்பமும் இவை போன்ற இடையரு இன்பங்களை எண்ணி எண்ணி மகிழ்கின்ருர். அவைகளெல்லாம் நாடறிந்த பாடல்கள்தாம்.

கன்னத்தில் முத்தமிட்டால்—உள்ளம்தான்
கள் வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ—கண்ணம்மா
உன்மத்தம் மாகுதடி.

என்பது அப்பாடல்களுள் ஒன்று.

## அன்பின் செல்வி

இந்தகைய அன்புச் செல்வத்தைச் சீராட்டிப் பாராட்டிப் போற்றி வளர்ப்பதோடு—அதன் பெருமை யையும் இனிமையையும் புகழ்வதோடு—பெற்றவர்கள் அச்செல்வத்தை எவ்வாறு போற்ற வேண்டும் என்ப தையும் பாரதியார் நன்கு எடுத்துகாட்டுகின்ருர். குழந்தைக்கு வருதுயரத்தைத் தன்துயராக எண்ணி, அதற்காகத் தான் வருந்தி மருந்து உண்ணும் தாய்மை போற்றத்தக்க ஒன்றல்லவா? பெற்றதாய் அந்தக் குழந்தைக்காக என்னென்ன தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது! அவ்வாறு தியாகங்களைச் செய்து போற்றும் பொருளை எத்துணைக் கண்ணும் கருத்து மாகக் காப்பாற்றவேண்டும். 'பொருள்தனைப் போற்றி வாழ்' என்பது தமிழர்களுக்கு அவர்தம் மூதாட்டியார் ஔவை காட்டிய ஒரு நெறியல்லவா! சாதாரணப் பொருள்களையே போற்றி வாழவேண்டுமென்ருல் செல்

வத்துட் செல்வமாகிய மக்கட் செல்வத்தை எத்தனைச் சிறந்த வகையில் போற்றி வளர்க்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள் மக்கள். ஆம்! குழந்தைக்குச் சிறு ஊறு நேர்ந்தாலும்கூடப் பெற்ற உள்ளம் தாங்காது. அக் குழந்தையின் கண்ணில் நீர்வடித்தால் பெற்றவர் நெஞ்சம் பிளந்தது போலாகும் மல்லவா? அவர்தம் நெஞ்சு குழந்தைகள் குலாவும் இடமாகி விட்டபிறகு, குழந்தைக்கு நேரும் ஒவ்வொரு சிறுதுன்பமும் அவர்கள் உள்ளத்தைச் சுட்டெரிக்கும் என்பது உண்மையன்றோ! இவைகளையெல்லாம் எண்ணி எண்ணிப் பார்க்கிறார் பாரதியார். எண்ணம் பாட்டாக உருப்பெற்று ஓடி வருகிறது. இதோ அவர்தம் அடிகள்,

'சற்றுன் முகஞ் சிவந்தால்—மனது
சஞ்சல மாகுதடி
நெற்றி சுருங்கக் கண்டால்—எனக்கு
நெஞ்சம் பதைக்குதடி'

'உன்கண்ணில் நீர்வடிந்தால்—என்நெஞ்சில்
உதிரம் கொட்டுதடி
என் கண்ணிற் பாவை யன்றோ—கண்ணம்மா
என்னுயிர் நின்னதன்றோ'

இந்த அடிகளிலே அவர் எத்துணை உணர்ச்சி வகையிலே குழந்தை வாழ்வே தன் வாழ்வாக எண்ணும் தாயார் நிலையை விளக்குகின்றார். இந்த மெய்த்தாயார்தம் பண்பினையும் முன் ஒருகடிதத்தில் நான் எழுதிய 'பால் கொடுத்தால் பழுதடைவோம்' என எண்ணும் தாயர் தம் பண்பினையும் ஒப்பிட்டுப்பார். குழந்தைகளே செல்வம் என்று எண்ணி, அவர்தம் வாழ்வே தம் வாழ்வு என்று உணர்ந்து, அவர் மகிழ்ந்தால் தாம் மகிழ்ந்தும், அவர் வாடின் தாம் அதிகமாக வாடியும் நிற்கும்தாய் உள்ளமே தரணியை வாழ வைப்பதாகும். அந்த மெய்த்

தாயர் நிலையைத்தான் பாரதி இவ்வாறெல்லாம் விளக்குகிறார்.

இனி, பாரதியார் இக் குழந்தைச் செல்வத்தை விடுத்து வேறு ஒன்றுமே மக்களுக்குச் சிறந்தவை இல்லை என்பதை நன்கு விளக்குகிறார். வள்ளுவர் குழலும் யாழும் மக்கள் மழலைச் சொல்லுக்கு முன் நிற்கமாட்டாதவை என்பதைக் கூறினார் அல்லவா? பாரதி அதற்குமேலும் ஒருபடி தாண்டி, ஏடுகள் எத்தனை படித்தாலும் அவை கற்றுத்தரும் பாடங்கள் குழந்தையின் அன்புப் பாடத்துக்கு முன்னிற்க மாட்டாதன என்பதைக் காட்டுகின்றார். மற்றும் அன்பு காட்டுவதிலே குழந்தை, தெய்வங்களுக்கெல்லாம் மேம்பட்டது என்பதையும் காட்டி விட்டார். ஆம்! நான் முன் உனக்குக் 'குழந்தையும் தெய்வமும்' என்ற தலைப்பில் எழுதிய கடிதத்தில் எப்படிக் குழந்தை தெய்வத்தோடு ஒத்திருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டினேன் அல்லவா! இங்கே பாரதி அதற்குமேலேயும் ஒருபடி சென்று குழந்தை அன்பின்முன் தெய்வ அன்பு இணை நிற்காது என்கின்றார்.

இன்பக் கதைகளெல்லாம்—உன்னைப்போல்
ஏடுகள் சொல்வ துண்டோ?
அன்பு தருவதிலே—உன்னை நேர்
ஆகுமோர் தெய்வம் உண்டோ'

என்பது அவர் வாக்கு.

இறுதியாகப் பாரதியார் உலகில் பொன்னையும் மணியையும் பிற செல்வங்களையும் தேடித்தேடி உழலும் மக்களுக்கு அறிவுறுத்துவது போன்று இக் குழந்தையைக் காட்டிலும் அணிந்து அணைக்கும் பூணும், நிலைத்து மகிழ வைக்கும் செல்வமும் வேறு கிடையாது என்கின்றார். அப் பாடலை மட்டும் காட்டி இக் கடிதத்தை முடித்துக் கொள்ளுகின்றேன். ஆம்! இக்கடிதங்களை

யெல்லாம் முறையாகப் படிக்கும் நீ உன் பிறசெல்வங்கள் அனைத்திலும் மேலான செல்வம் உன் குழந்தையே என்பதை எண்ணிப் போற்றவேண்டும். என்ன? புரிகிறதல்லவா? ஆம்! ஆம்! பிள்ளையே பெருஞ் செல்வம்.

'மார்பில் அணிவதற்கோ—உன்னைப்போல்
 வைரமணிகள் உண்டோ?
சீர்பெற வாழ்வதற்கே—உன்னைப்போல்
 செல்வம் பிறிதுமுண்டோ'

என்ற பாரதியாரின் பாட்டு என்றென்றும் நீ எண்ணிப் போற்ற வேண்டிய ஒன்று என்பதை மறவாதே.

என்ன எண்ணுகிறாய்? 'ஓடிவிளையாடு பாப்பா' என்ற பாரதியின் பாப்பாப் பாட்டைப் பற்றி ஒன்றும் கூறவில்லை என்றுதானே? அப்பாடல் நாடறிந்த ஒன்று. நீ நாள்தோறும் பாடியது. மற்றும் அது சற்று வளர்ந்த ஓடி ஆடும் குழந்தையை முன்னிறுத்திப் பாடியது. உன் குழந்தைக்கு இப்போது அப்பாடல் வேண்டாம். தேவையான காலத்தில் நீயே பாடிப் பாடிப் பெருமை கொள். கடிதம் நீளுகிறது. எனவே இன்று இத்துடன் நிற்கின்றேன்.

அன்புள்ள,

**அப்பா.**

## 12. கருவில் குழந்தை I

**அன்புள்ள மங்கைக்கு,**

நலன். விழைவு, நீ உன் குழந்தையைக் கொஞ்சிக் குலவும் வேளையில் அக்குழந்தை உன் கருவில் தோன்றி வளர்ந்த வரலாற்றை அறிந்து கொள்வது நல்லது என நினைக்கிறேன். நீ கல்லூரியில் அறிவியல் பாடம் படிக்கும்போது ஓரளவு கருவில் குழந்தை தோன்றி வளர்வதைப்பற்றிப் படித்திருப்பாய். என்றாலும் அதில் அவ்வளவு விளக்கமாக எழுதுவது என்பது இயலாது. மருத்துவக் கலையில் துறைபோகக் கற்ற அறிஞர்கள் தாம் இந்தக் கருவளர் கலைபற்றி ஓரளவு நன்கு அறிந்திருக்கக்கூடும், அவர்களில் சிலர் சிறந்த படங்களோடு பல ஆங்கில நூல்கள் எழுதியுள்ளார்கள், எனினும் தமிழில் அக்கருவளர் சிறப்பைப்பற்றி நல்ல நூல்கள் கிடையா, இரண்டொருவர் அந்த ஆங்கில நூல்களைப்

படித்து மொழிபெயர்க்க நினைத்தாலும் அதில் வெற்றி அடைந்தனர் என்று சொல்லமுடியாது. மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு இக்கருவளர்ச்சியைப் பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பு இருக்கின்றது, என்றாலும் அவருள்ளும் நன்கு பயின்று அதை புரிந்து கொள்ளுபவர்கள் மிகமிகச் சிலரே! எனவே நான் அந்தச் சிறப்பைப் பற்றி அதிகமாக உனக்கு எழுத முடியாது. என்றாலும் சிலவற்றைப்பற்றி இங்கு உனக்கு எழுத நினைக்கின்றேன்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் அறிவியல் வளர்ச்சி பெரிதாக வளர்ந்து வந்துள்ளது. அதனால் உடலின் புற அமைப்புக்களை மட்டுமன்றி உள்ளமைப்புக்களையும் நன்கு அறிந்துகொள்ள வாய்ப்பு உண்டாகியிருக்கிறது. அதனால் கருவில் நாள்தோறும் உண்டாகும் மாற்றங்களை யெல்லாம்கூட நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது. ஆனால் இன்றைக்கு ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன் இக்கருவில் வளரும் ஒரு குழந்தையின் முறையான வளர்ச்சியைப் பற்றி ஒருதுறவி குறிக்கின்றார் என்றால் அது உனக்கு வியப்பாக இல்லையா? ஆம்! அதுபற்றி அவர் எப்படி அறிந்தார் என்று சொல்லமுடியாது. என்றாலும் அவர் அக்கருவின் தோற்ற வளர்ச்சியை முறைப்படுத்திக் காட்டுகின்றார். இன்று காட்டுவது போன்று நாள்தோறும் காணும் வளர்ச்சியைக் காட்டா விட்டாலும், முதலில் கருத்தோன்றி, நீர்த்தன்மையாக இருந்து, பிறகு கட்டியாக மாறுவதையும், அடுத்து மூளை கருஅமை நரம்புகளும், அடுத்து எலும்புகளும் தோன்று வதையும் அவர் முறைப்படிக் காட்டுகின்றார். கருவில் முதலில் உண்டானது நரம்பா எலும்பா என்ற ஆராய்ச்சி சில ஆண்டுகளுக்கு முன்வரை முடியாத ஆராய்ச்சியாக இருந்தது. இப்போது முன் கருநரம்பு (Originative nerves) தோன்றிப் பின் எலும்பும் அதன்பின் வேறு

உள்ள பல நரம்புகளும் தோன்றுகின்றன என்று கண்டனர். இதைத்தான் அந்தப் புலவர் அழகாகப் பாடலில் காட்டுகின்றார். யார் அந்தப் புலவர்? உனக்கு முன்னமே அறிமுகமானவர்தான். நீ அவர் பாடல்களை நாள்தோறும் படித்துத்தான் இருக்கிறாய். நான்சொல்லப் போகும் பாடலும் உனக்குத் தெரிந்ததுதான். ஆம்! அவர் திருநாவுக்கரசர்தான். இதோ கருவைப் பற்றி அவர் பாடிய பாடல்,

'கருவாகிக் குழம்பிருந்து கலித்துமூளை
கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்து ஒன்றாகி
உருவாகிப் புறப்பட்டு இங்கு ஒருத்திதன்னால்
வளர்க்கப் பட்டு'

என அவர்தம் தேவாரத்தில் கருவில் வளரும் குழந்தையைக் காட்டிவிட்டார். அன்று அவர்காட்டிய உண்மையைத்தான் இன்று பல விஞ்ஞானிகள் ஆய்வுக்களத்தில் பலகருவிகள் கொண்டு துருவித் துருவி ஆராய்ந்து வெளிப்படுத்துகின்றார்கள்.

இவ்வாறு கருவில் குழம்பாகிப் பின் கலித்து மூளை, கருநரம்பு, எலும்பு முதலியவற்றைப் பெற்றுத் தோலால் மூடப்பெற்று உருவாகும் குழந்தையின் கருவின் வளர்ச்சியைப்பற்றி மேலை நாட்டு அறிஞர்கள் நன்கு கண்டு எழுதியுள்ளார்கள். அவற்றுள் சிலபற்றி இங்கே உனக்குக் குறிக்கலாம் என நினைக்கிறேன்.

**அன்பின் அரசி !**

தாயின் வயிற்றில் தோன்றி வளரும் கருவின் வளர்ச்சியே வேடிக்கையானது. அது முதல் முதல் பெண் கருத்தறிக்கும் நாள் தொடங்கிச் சந்திர மாதங்கள் பத்து கழித்தே மண்ணில் நிறைவுற்ற குழந்தையாகப் பிறக்கும். இந்தச் சந்திரமாதத் திங்கள் 27 நாட்கள் கொண்டதாகும். இன்றைய நாட்காட்டியின் வழி இதைக் கணக்

கிட்டால் ஒன்பது மாதங்கள் ஆகும். இச் சந்திரமாதக் கணக்கை எண்ணித்தான்போலும் 'பத்து மாதம் சுமந்து பெற்றதாய்' என்று கூறுகின்ருர்கள். பட்டினத்தாரும் 'ஐயிரண்டு திங்களாக அங்கமெல்லாம் நொந்து பெற்ற' தாயாரை எண்ணுகின்ருர். அவ்வாறு தோன்றிய கரு, தான் வளரும் பத்துத் திங்களிலேயும் எத்தனையோ மாற்றங்களைப் பெறுகின்றது.

கருவின் வளர்ச்சியைப் பற்றிக்கூறுமுன் வேறு இரண்டொரு கருத்துக்களை இங்கே நான்கூற நினைக்கின்றேன். இக்கரு உண்டாவதிலே பரம்பரைத் தொடர்பு அமைந்துள்ளது என்பதை நம் வீட்டில் பாட்டிமார்கள் கூறுவதை நீ கேள்விப் பட்டிருப்பாய். இதை நாம் வேடிக்கையாக நினைக்கிருேம். ஒருசிலர் அவரவர் குடும்பத்தில் மறைந்த சில பெரியவர்களைச் சொல்லிக் குழந்தைகள் அவர்களை ஒத்தே உள்ளன என்றும் கூறுவார்கள். ஏன்? உன் குழந்தை பிறந்ததும் அது உன் அம்மாவைப்போலவே இருக்கிறது என்று பலரும் சொன்னுர்களல்லவா! ஆம்! கருத்தோற்றத்தில் பரம்பரைப் பண்பு இருக்கிறது என்ற உண்மையை நம்நாட்டுப் பாட்டியர் மட்டும் சொல்லவில்லை. மேல் நாட்டு ஆராய்சியாளர்கள் அந்த உண்மையை ஒத்துக்கொண்டு தமது ஆராய்ச்சி நூல்களில் வெளியிட்டுள்ளார்கள். இவ்வாறு பரம்பரைத் தொடர்பு பற்றுவதால் ஒரு குடும்பத்திலேயே பெண்கொள்ளவோ, கொடுக்கவோ கூடாது என்கின்ருர்கள் மேல்நாட்டு ஆசிரியர்கள்.* நம் நாட்டில் 'ஒருகுலத்தில் பெண்கள் கொடோம், ஒரு குலத்தில் கொள்ளோம்' என்று குறவரும் பள்ளரும் பாடும் பாடல்களை எள்ளி நகையாடுவதை நிறுத்தி, இந்த மேனுட்டு

*Gray's Anatomy P. 87, Mustaf's Systematic Anatomy, and also by Father Gregor Mendal and F. B. Ford

ஆராய்ச்சியாளர்தம் உண்மையை நினைத்தால் அந்தப் பழங்குடி மக்களைப் பாராட்டத்தானே தோன்றும், 'பாத்திர மறிந்து பிச்சை இடு, கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு' என்பதும் சாதாரணப் பழமொழி என்பது உனக்குத் தெரியுமே. ஆகவே கரு தோன்றுவதில் அவர்வர் பழமையில் தோன்றும் பண்பும் பிறவும் பொருந்தியே அமைகின்றன என அறியவேண்டும். அதனால்தான் இந்தக்காலத்தில் சிலர் கலப்பு மணம் வேண்டும், மணம் செய்துகொள்வதில் சாதி வித்தியாசம் பார்க்கக்கூடாது என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அதற்கு ஏற்பப் கலப்பால் சிறக்க வளரும் மாடு முதலியவைகளையும் மாமரம் முதலியவற்றையும் எடுத்துக் காட்டுகின்றார்கள். அது பற்றியெல்லாம் நான் இங்கே உனக்கு அதிகம் எழுதப் போவதில்லை. தேவையும் இல்லை.

நிற்க, கருவில் எப்படிக் குழந்தை தோன்றி வளர்கிறது என்பதைத்தான் நான் இங்கே கூற நினைத்தேன். நம் ஊர்களில் உள்ள ஓடைகளிலும் ஆற்றிலும் தவளைகளின் முட்டைகள் நீண்டு நீண்டு கோர்வையாகச் செல்வதை நீ அறிவாய். பின் அவைகளில் ஆயிரத்தில் ஒன்றோ அதற்கும் குறைவாகவோ முட்டையிலிருந்து வெளிப்பட்டுத் தலையும் வாலும் உடையதாகத் தண்ணீரில் நீந்துவதையும் நீ கண்டிருப்பாய். மனித இனத்தின் முதல் கருநிலையும் அத்தகையதே பெண் வயிற்றில் கருவின் தொடக்க அளவை மேலை நாட்டு அறிஞர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். அது தனது வடிவில் ·117 முதல் ·142 அங்குலம்தான் இருக்குமாம். சில சமயம் அந்த அளவிலேயே ஒன்றுக்கு மேற்பட்ட கருக்களும் தங்கி இருக்குமாம். அப்போதுதான் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் பிறக்கும் போலும்.

தோன்றிய கரு முதலில் முட்டைவடிவாக வட்டநிலையில்தான் இருக்குமாம். பின்னரே அது வேற்று

வடிவு கொள்ளும் என்பர் ஆராய்ச்சியாளர். மேலே கண்ட தவளைக் கரு வாலுடன் நீண்டு முட்டையிலிருந்து வெளி வருவதுபோன்றுதான் இந்த மனிதக் கருவும் நீண்ட வாலுடன் இருக்கும் என்பர் தலை கழுத்து உடம்பு கால் என்று ஒன்றும் கருத் தோன்றிய காலத்தில் காண முடியாது. ஆனாலும் ஏதோ வடித்தது போன்ற இலை வடிவமும் அதை ஒட்டிச் சற்றுத் தடிப்பும் பிறகு நீண்ட வாலும்தான் கருவின் முதல் தோற்ற நிலையாகும் அந்த வால் போன்ற உறுப்பில் 10, 12 மெல்லிய நார்கள் இருக்கும். இவை அந்த விரிந்த தலைப்பாகத்திலிருந்து தொங்கிக் கொண்டு இருக்கும், இந்த நீண்டவால் போன்ற அமைப்பே பிறகு உடல் கால் முதலியன உண்டாவதற்கு இடம் கொடுக்கும் எனக் காணமுடியும். அந்தத் தலைப்பாகத்தில் முதலிலேயே இரண்டுக்கு மேற்பட்ட அறைகள் இருக்கின்றன எனக் கண்டு பிடித்துள்ளனர்.

இவ்வாறு கரு அமையும் நிலை அது தோன்றிய ஆறு நாட்களிலேயே அமைந்து விடுகின்றது. கருவின் வளர்ச்சியிலே அடிக்கடி மாறுதல் நிகழ்ந்து கொண்டே இருக்கும்போலும். ஆறும் நாளிலும், எட்டாம் நாளிலும் பத்தாம் நாளிலும், பதினான்காம் நாளிலும் கருவளர்ச்சியில் சிற்சில மாறுதல்கள் நடந்துகொண்டே இருக்கும், இருபதாவது நாளில் அதன் வளர்ச்சியே 2·1 மில்லி மீட்டர் அளவுதான் இருக்கும். மில்லி மீட்டர் அளவு எவ்வளவு சிறியது என்பதை நீ அறிவாயல்லவா! ஆம். அப்படிப்பட்ட சிறிய அளவால்தான் கருவின் உருவைக் கணக்கிட முடிகிறது. எங்கோ வயிற்றுக்குள் ஒரு மூலையுள் முடங்கிக்கிடக்கும் 2·1 மில்லிமீட்டர் அளவுள்ள கருவை அளவெடுத்துக் கண்டு விட்டார்களே என்று வியக்கிறாயா? ஆம்! வியக்கத்தான் வேண்டும், இதுதான் விஞ்ஞானம் நமக்குத் தேடித் தந்த செல்வம். ஆண்ட

வன் அணுவுக்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய் உள்ளவன் என்பர் அடியவர். அணு சிற்றெல்லை. அண்ட முகட்டைக் கடந்தது பேரெல்லை. இரண்டு எல்லையையும் இன்னும் மனிதன் எட்டிப் பிடிக்க முடியவில்லை, என்றும் பிடிக்கவும் முடியாது. ஒருவேளை காண்பானாயின் அவன் கடவுள் நிலை பெறுவான். மனிதனுடைய ஆராய்ச்சிக ளெல்லாம் இந்த இரண்டின் எல்லைக் கோடுகளுக்கு மிக வும் உள்ளேதான் அடங்கிக் கிடக்கின்றன. என்றாலும் இருபுறத்தும் அவன் ஆராய்ச்சியும் கண்ணும் பிறவும் விரிந்து செல்லுகின்றன. அந்த நிலையில்தான் கருப்பை யில் இருக்கும் சிறு உருவைக்கூட அவனால் கண்டுபிடிக்க முடிகிறது, அவன் செயலும் திறனும் வாழ்க என வாழ்த்துகின்றேன்.

**அன்பின் செல்வி !**

இன்றைய விஞ்ஞானியின் ஆராய்ச்சி எத்தனையோ வகையில் மேம்பட்டு நிற்கின்றது. அவனுடைய ஆராய்ச்சி யால் உலகம் அடையும் நன்மைகள் மிகப்பல. ஆம்! ஒரு வழியில் அவன் ஆராய்ச்சி அழிவுத்துறைக்கு மிருகமாக மனிதனை அழைத்துச் செல்கிறது என்றாலும், இத்தகைய அரும்பெரும் உண்மைகளைக் காட்டவும் அது பயன்படு வதை எண்ணத்தான் வேண்டும். எல்லாவற்றிலும் நன்மையும் தீமையும் கலந்தேதான் இருக்கும்போலும். நாம் நன்மையை மட்டும் மேற்கொள்ளலாம். இன்று இத்துடன் முடித்துக் கொண்டு கருவில் வளரும் குழந் தையின் ஒவ்வொரு நிலைபற்றியும் அடுத்த கடிதத்தில் விளக்கமாக எழுதுகிறேன்.

அன்புள்ள,

**அப்பா.**

## 13 கருவில் குழந்தை II

**அன்பின் செல்வி !**

எனது முந்திய கடிதத்தில் கருவில் குழந்தை இருபதாவது நாளில் 2·1· மில்லிமீட்டர் அளவு இருக்கும் என்று கூறினேன் அல்லவா? இன்று தொடர்ந்து அக்கருவின் வளர்ச்சி பற்றி எழுதுகிறேன். பத்துத் திங்களிலும் கருவில் குழந்தை எத்தனை எத்தனையோ வகையான மாறுதல்கள் பெறுகின்றன என்று மேலைநாட்டு ஆராய்ச்சியாளர்கள் காட்டியுள்ளார்கள். நம் தமிழ் நாட்டிலும் பண்டைக் காலத்தில் வாழ்ந்த பல சமயத் தலைவர்கள் இவற்றை வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் திங்கள் தோறும் உண்டாகின்ற மாற்றத்தைக் கூறித்தான் சென்றிருக்கிறார்கள். சில நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த பட்டினத்தடிகள் இக் கருவளர்ச்சியைத் தொகுத்துக் காட்டுகிறார்.

'ஒருமட மாது ஒருவனு மாகி
இன்ப சுகந்தரு அன்பு பொருந்தி
உணர்வு கலந்து ஒழுகிய விந்து
ஊறு சுரோணித மீது கலந்து
பனியிலோர் பாதி சிறு துளிமாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும அரும்பு கமட மிதென்று
பார்வை மெய்வாய் செவிகால் கைகளென்ற
உருவமு மாகி உயிர்வளர் மாதம்
ஒன்பது ஒன்றும் அகன்று மடந்தை
உதர மகன்று புவியில் விழுந்து'

பிறகு குழந்தை உலகில் வளர்கின்றது எனக் காட்டும் அவர் திறம் எண்ணத் தக்கதுஅன்றோ! ·117 அங்குல அளவைத்தான் போலும் 'பனியிலோர் பாதி' என இவர் குறிக்கின்றார்.

இனி, பல விஞ்ஞானக் கருத்துக்களைக் காட்டிய மாணிக்கவாசகர் இக் கரு வளர்ச்சியைப் பற்றியும் சொல்லியிருக்கிறார். மானுடப் பிறப்பில் மாதா உதரத்து இக்கரு தோன்றிப் பத்துத் திங்களிலும் உண்டாகின்ற எல்லாத் துன்பங்களையும் தாண்டி உலகில் பிறக்க முடிகின்றது என்பதை அவர் காட்டும்போது நாம் அக்காலத்திலேயே தமிழ் நாட்டில் இருந்த அறிவைப் போற்றாதிருக்க முடியுமா? மாணிக்கவாசகர் திங்கள்தோறும் என்னென்ன மாற்றங்கள் நடைபெறுகின்றன என்பதைத் திட்டமாக அறிந்து கூறுகிறார் எனக் காணமுடியாவிட்டாலும், ஒவ்வொரு திங்களிலும் ஏதேதோ மாறுபாடுகள் நடைபெறுவதை விளக்க முயல்கிறார் என்பதை மட்டும் காணமுடிகின்றது. இதோ அவர் அடிகளையே தருகிறேன். நீயே படித்துப் பார்.

"மானிடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினில் பிழைத்தும்
ஒருமதி தான்றியின் இருமையில் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈர்இரு திங்களில் பேர்இருள் பிழைத்தும்
அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களில் ஊறுஅலர் பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டு திங்களில் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பம் பிழைத்தும்
தக்க தசமதி தாயோடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்"

உலகில் குழந்தை பிறந்து பின் ஆண்டாண்டு தோறும் வளர்ந்து வருகின்றது என்கின்றார் மணிமொழியார். இவ்வடிகளின் காட்டும் இருமை, ஒருமை, மதம், இருள், முஞ்சுதல், ஊறுஅலர், புவிபோன்ற பல்வேறு மாறுபாட்டு நிலைகளை நம்மால் அறியக்கூடவில்லை. பழங்காலச் சமயத் தலைவர்களும் பிற புலவர்களும் இவ்வாறுதான் பல உண்மைகளை 'இலைமறை காயா'கச் சுட்டிவிட்டனர். எனவே எத்தனையோ உண்மைகள் மறைந்துவிட்டன. என்றாலும் இத்தகைக் குறிப்புக்களைக் கொண்டு நம் விஞ்ஞானிகள் காணும் உண்மைகளையெல்லாம் அவர்கள் எப்படியோ அறிந்து தமிழ் நாட்டில் அவற்றை வாழ வைத்து இருந்தார்கள் என்பதை எண்ண மகிழ்ச்சி பிறக்கிறதல்லவா? திருமூலர் இக் கருவளர்ச்சியைப் பற்றி 41 பாடல்கள் பாடியுள்ளார்.

**அன்பின் அரசி!**

மறுபடியும் உன்னைப் பழந்தமிழ் இலக்கியச் சோலைக்குத்தான் அழைத்துப் போகிறேன் இல்லையா! வேண்டாம்; இனிச் செல்லவில்லை. இனி இன்றைய மேனாட்டு அறிஞர்கள் கருவில் வளரும் குழந்தையைப்

பற்றி என்னென்ன கூறுகிறார்கள் என்று காட்டியே இக் கடிதத்தை முடித்துக் கொள்கிறேன்.

கருவில் குழந்தை தங்கினாலும் அதைத் தாங்கி வளர்க்கும் நிலை எல்லா பருவ மகளிருக்கும் அமைவதில்லை. நம் நாட்டிலே இந்த உண்மையைப் பண்டுதொட்டு அனைவரும் நன்றாக அறிந்துதான் இருந்தார்கள். சாதாரணமாகப் பெண்கள் பதினைந்து வயதுக்குமேல் நாற்பத்தைந்துவரை மகப்பெறும் காலம் எனக் கொள்வார்கள். இந்தப் பருவத்தில் உள்ள பெண்கள்தாம் மக்களைப் பெற்றெடுப்பார்கள். அவருள்ளும் சிலர் மகப்பேறு இல்லாதிருப்பதற்கும் எத்தனையோ காரணங்கள் உள. அவற்றையெல்லாம் இங்கே நான் சொல்ல வேண்டாம் என நினைக்கிறேன். எனவே நல்ல வயிறு வாய்த்த பெண்கள் தம் திருஉதரத்தில் வளரும் கருவைப் பற்றி இங்கே நான் உனக்குச் சொல்லுகின்றேன்.

இருபது நாட்களில் 2·1 மில்லி மீட்டர் அளவில் வளர்ந்த கரு மேலும் மேலும் பலப்பல மாறுதல்களைப் பெறுகின்றது. மூன்றாவது வாரத்தில்தான் அதன் உருத் தோற்றத்தில் மாற்றம் அமைகின்றது. கருவைச் சுற்றிப் பல அறைகள் (Amnion) உருவாகத் தொடங்குகின்றன. இருபத்து ஏழாவது நாளில் குழந்தையின் உறுப்புக்கள் ஒருசில தோற்றமளிக்கத் தொடங்குகின்றன என்பர். அவை என்னென்ன உறுப்புக்கள் என்பதைத் திட்டமாக நம்மால் எடுத்துக் கூற முடியவில்லை. என்றாலும் மேலை நாட்டு அறிஞர்கள் ஆய்வுகள ஆராய்ச்சியினால் அவற்றின் வளர்ச்சி நுணுக்கங்களையெல்லாம் உற்று அறிந்து உலகுக்கு உணர்த்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

நான்காவது வாரத்தின் இறுதியில் முட்டிகள் (limbs) சிறு சிறு முளைகள் போலத் தோற்றமளிக்கும். ஐந்தாவது

வாரத்தில் தலையின் சில உறுப்புக்கள் தோன்றும் என்பதை நன்றாகக் கண்டுபிடித்திருக்கின்றனர். நான்காவது வாரத்தில் உருவாகத் தோன்றிய கீழ் மேல் முட்டிகள் ஆறுவது வாரம் வரையில் ஒரே அளவில்தான் அமைகின்றன. எனினும் ஆறுவது வாரத்திற்குப் பிறகு அவற்றின் வளர்ச்சியிலும் அமைப்பினும் மாறுபாடு உண்டாகின்றது. அந்த வாரத்துக்குப் பிறகு இணைப்புக்கள் (joints) உருவாகும். இவ்வாறு வளரும் கரு ஐந்தாவது வாரத்தில் 9 மில்லி மீட்டர் நீளம்தான் இருக்கும் எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். எனவே அரை அங்குல நீளம் வளர்ச்சி அடைவதற்குள்ளாகவே அந்தச் சிறு கருவில் இத்தனை மாற்றங்களும் அந்த ஐந்து வாரங்களில் நடைபெறுகின்றன என்பதை அறிய ஆச்சரியமாக இல்லையா? ஆம்! இவை நாம் அறியாமலேயே நம் வயிற்றில் நடைபெறும் மாற்றங்கள் அல்லவோ ?

**செல்வி !**

இவ்வாறு ஆறு வாரங்கள்வரை உண்டான மாறுதல்களுக்குப் பிறகுதான் குழந்தைக்குப் பிற உறுப்புக்களும் பிறவும் தோன்றும் என்கின்றனர் ஆய்வாளர். சதை (Muscles) அடுத்துத் தோன்றுவது போலும். அடுத்துப் புறத்தோலும் மயிரும் பிறவும் தோன்றும். முன் திருநாவுக்கரசர் கருத் தோற்ற வளர்ச்சியில் முதலில் மூளைதான் தோன்றுமென்றார் என்று முன் கடிதத்தில் குறித்திருந்தேனல்லவா! இன்றைய ஆராய்ச்சியாளர்கள் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளுகின்றார்கள். மூளைதான் முதலில் தோன்றுவது. அதை அடுத்து மூன்று அறைகள் (Primary Cerebral Vesicles) உண்டாகின்றன என்கின்றனர். இந்த அறைச் சுவர்களின் செறிவே பின் திண்மை பெற்று நரம்பின் அமைப்பை உண்டாக்குகின்றன. பின் அந்த நரம்பின் அமைப்பே அதன்வழி மூளையின் செயல்படு

முறையை அமைக்கின்றதாம். எனவே முதலில் நரம்பு களே உண்டாகின்றன என அவர்கள் காட்டுகின்றனர். இதைத்தான் அப்பர் அன்றே காட்டியிருக்கிறார்.

இவ்வாறு நரம்புகள் வழிச் செயல்படும் மூளையின் தொடர்ச்சியே பின்புற ஓடு, முதுகெலும்பு (Spinal cord) ஆகியவற்றை உருவாக்கும் நிலையை உண்டாக்கு கின்றது. மனித உறுப்புக்களின் முதல் முதல் வளர்ச்சி மூளையே என்பதை அறிஞர்கள் நன்கு காட்டுகின்றார் கள்.* இந்த மூளை வளர்ச்சி ஐந்தாவது வாரம் தொடங்கி நான்கு அல்லது மூன்றாவது வாரத்தில் முற்றுப் பெறலாம் எனக் கணக்கிட்டிருக்கின்றனர். அதன் இடையமைப்பு 10·2 மில்லி மீட்டர் இருக்கும் எனக் கணக்கிட்டிருக் கின்றனர். இந்த மூளையினை மையமாகக் கொண்டே பிறகு கண், மூக்கு, காது முதலியவற்றுடன் கூடிய நரம்பு கள் தொழில்பட அமைகின்றன. இவையெல்லாம் அந்த நரம்புகளின் தொடர்பும் ஊட்டமும் கொண்டே வளர் கின்றனவாம். இவற்றை ஒட்டியே அடுத்தடுத்து இரத்த நாளங்களும் இரத்தக் குழாய்களும் உருப் பெற்றுத் தோன்றி வளர்ந்து வருகின்றன என்பர். இவைகளுக் கெல்லாம் மேலாக மக்களது இதய அமைப்பும் ஏறக் குறைய இந்தத் தொடக்கக் காலத்திலே அமைந்து விடு கின்றது என்பர். ஆம்! இதயத்தைப் பிற உறுப்புக்களைப் போன்று எடுத்துக் காட்ட முடியாது. இதயம் தொழில் படும் மார்புக்குள் இலங்கும் ஈரல் இரத்த நாளங்கள் போன்றவற்றை எடுத்துக் காட்டலாம் என்றாலும் இதயத்தைக் காட்ட முடியாதே! ஆம்! அதைக் காட்ட முடியாவிட்டாலும் அது ஆட்சிபுரியும் அந்த இடத்தில் தான் ஆராய்ச்சியாளர்கள் கண்டு அதன் தோற்றத்தை யும் இந்த நான்காவது வாரத்தை ஒட்டியதாகவே

*Mustaf's Systematic Anatomy (Page 119 & 120) and A Text Book of Midwifery by R. W. JOHN STONE.

கூறுவர். இதயம் என்பதற்கு 'Heart' என்ற ஆங்கிலச் சொல்லை உபயோகிப்பர். இதயம் என்பதற்கு இது பெயராக அமையினும், தமிழில் அதனினும் மேலாக உற்றறி உணர்வுடன் கலக்கும் ஒன்றையே நம்மவர் போற்றி வந்தனர். அதனால்தான் இரக்கமற்ற மனிதனை நோக்கி 'உனக்கு இதயம் இல்லையா?' எனக் கேட்கிறார்கள். ஆங்கில முறைப்படி இதயமில்லாவிட்டால் அவன் எப்படி உயிர் வாழ முடியும்? எனினும் இங்கு இதயம் என்பது அந்த மேலை நாட்டார் இட்ட பெயரும் பொருளும் கொண்டதாகவே கருதி நாமும் நம் மார்பில் உள்ள இதயம் (heart) தோன்றிய காலம் கருவின் நான்காவது வாரமே எனக்கொண்டு மேலே செல்வோம்.

தொடர்ந்து இரத்தக் குழாய்கள் முதலியன உருவாகின்றன. பின் பல இரத்தக் குழாய்கள் (Arteries and veins) உருவாகின்றன. பெரும்பாலும் நான்காவது வார இறுதிக்குள் சீரணிக்கும் (Digestive) உறுப்புக்களும் உருவாகும் என்பர், நுரையீரல், சுவாசப்பை முதலியன ஏறக்குறைய இதே காலத்தில் ஒன்றை ஒன்று பற்றியே உருவாகின்றன, பிறகே ஆண்-பெண் உறுப்புக்களெல்லாம் உருவாகும் என்பது அவர்கள் கண்ட முடிவு. இவ்வாறு மக்கள் உடலில் உள்ள எல்லா உறுப்புக்களும் கரு தோன்றிய இரண்டு திங்களிலேயே தோன்றி விடுகின்றன என்றும், பின்னர் அனைத்தும் ஒன்று சேர்ந்து உருவாகி ஒருசேர வளர்ந்து கொண்டே வருகின்றன என்றும் கொள்ளவேண்டும். அக்கருவின் வளர்ச்சி அளவை ஓர் அறிஞர் வாரக் கணக்கில் கண்டு காட்டியுள்ளார்.

| | | |
|---|---|---|
| 27–வது நாளில் | 4 மில்லி மீட்டர் | |
| 6–வது வாரத்தில் | 8 அல்லது 9 | ,, |
| 7 ,, ,, | 15 | ,, |
| 8 ,, ,, | 30 | ,, |

மற்ருெரு அறிஞர் காட்டுவது.

| | | |
|---|---|---|
| 5-வது வாரத்தில் | 5 | மில்லி மீட்டர் |
| 6 ,, ,, | 11 | ,, |
| 7 ,, ,, | 18 | ,, |
| 2-வது மாத இறுதியில் | 25 | ,, |
| 3 ,, ,, | 65 | ,, |

மற்ருெரு அறிஞர் 5-வது வாரத்திற்குப்பின் வாரத்துக்கு 10 மில்லி மீட்டர் அளவில் கரு வளரும் என்பர். இவ்வாறு வயிற்றிடை வளரும் கரு பின் ஒன்ருக உறு பெற்றுத் தாய் உணவே, தன் உணவாகக் கொண்டு, அன்னையின் அடிவயிற்றில் மெள்ள மெள்ள வளர்ந்து முதலில் குறித்தபடி பத்துத் திங்களில் உதரமகன்று புவியில் குழந்தையாய் பிறக்கிறது.

**அன்பின் அரசி !**

இக் குழந்தை கருவில் வளரும் வளர்ச்சி பற்றி இன்னும் எத்தனை எத்தனையோ வகையில் இன்று மேலை நாட்டு அறிஞர்கள் அணு அணுவாக ஆராய்ந்து எழுதி வருகின்றனர். அவற்றையெல்லாம் கூறி உன்னைக் குழப்ப விரும்பவில்லை, இப்பொருள் பற்றி இங்கே இவ்வளவு போதும் என நினைக்கிறேன். இரண்டொரு நூல்களை அடிக்குறிப்பில் தந்துள்ளேன். தேவையானல் நீயே அவற்றை வாங்கிப் படி. இப்போது இது போதும், அதோ உன் குழந்தை 'அம்மா' என அழைக்கிறது. அள்ளி எடுத்து அணைத்துப் பாலூட்டிச் சீராட்டி மகிழ்ச்சிகொள்.

அன்புள்ள,

**அப்பா.**

## 14. குழந்தையின் ஐம்புல நுகர்வு

**அன்பின் செல்வி மங்கையர்கரசிக்கு,**

*இதுவரை குழந்தைப் பேற்றின் சிறப்புப் பற்றி இலக்கியங்கள் பாராட்டுவதை எழுதி வந்தேன். சென்ற வாரத்தில் எழுதிய இரு கடிதங்களிலும் கருவில் வளரும் குழந்தை பற்றியும் குறித்தேன். இன்று பிறந்த குழந்தை எப்படிப் படிப்படியாக உணர்வு பெற்று, கண்டு, கேட்டு, உற்று, உண்டு, உயிர்த்து வளர்கின்றது என்பது பற்றிச் சுருக்கமாக உனக்கு எழுதலாம் என நினைக்கின்றேன். இக் குழந்தையின் ஐம்புல வளர்ச்சி பற்றியும் அவற்றின் வழிபற்றி எழும் மனவளர்ச்சி பற்றியும் மேலைநாட்டில் எத்தனையோ பெரியவர்கள் எழுதியிருக்கிறார்கள். தமிழில் அத்தகைய நூல்கள் இல்லை என்றாலும் தற்போது ஒரு சிலர் அதுபற்றிய சிறு கட்டுரைகளும் சிறு நூல்களும் எழுதத் தொடங்க நினைக்கின்றனர்.*

பொதுவாக மனிதனின் உணர்ச்சியை மற்றவர் புரிந்து கொள்வதே கடினம். அவன் உள்ளத்தில் அரும்பும் எண்ணங்களையும் அவற்றின் வழி உருவாகும் பிற உணர்வு நிலைகளையும் மற்றவர் எளிதில் அறிந்து கொள்ள முடியாது. எனவே பேசத் தொடங்குமுன் பெறுகின்ற அளவற்ற மாற்றங்களையும் உணர்வுகளையும் பிறவற்றையும் அந்த இளங் குழந்தைகளிடமிருந்து நாம் அறிவது கடினம்தான். எனினும் பல மேலைநாட்டு அறிஞர்கள் நுணுகி நுணுகி ஆராய்ந்து சில நூல்களை எழுதியுள்ளார்கள். அவற்றுள் ஒன்றிரண்டின் வழிபற்றி உனக்கு இன்று சில குறிப்புக்களை எழுதுகிறேன்.

உனது குழந்தை பிறந்த நாள் தொட்டு, இன்று வரை எந்தெந்த வகையில் மாற்றம் பெற்று வருகின்றது என்பதை நீ அறிந்துஇருக்கிறாய் அல்லவா! பிறந்த பொழுது ஒன்றையும் அறியாததாய் ஏதோ பால் கொடுத்தால் குடித்து உறக்கும் நிலையில் இருந்து, மெள்ள மெள்ள உன்னைப் பார்த்து அறிந்துகொள்ளவும் சிரிக்கவும், மற்றவர்களையும் பார்த்து அறிந்துகொள்ளவும் கற்றுக்கொண்டதல்லவா! அத்துடன் வாய்க்குச் சுவையுள்ள பழச்சாறு முதலியவற்றையும் உண்ண விரும்பி நாக்கைச் சுவைக்கும் நிலையையும் நீ அறிவாய். இப்படியே குழந்தையின் ஒவ்வொரு உறுப்பும் மெள்ள மெள்ள தொழிற்படத் தொடங்குகின்றது அல்லவா? அத்துடன் தண்மை வெம்மை நிலைகளை உணர்ந்து கொள்ளவும், இருட்டு ஒளி இவற்றை உணரவும் பிறவேறுபாடுகளையும் உணரவும் தொடங்குகிறதல்லவா? இவ்வாறு புறத்துறுப்புக்களே யன்றி அகத்துணர்வும் பிறவும்கூட மெல்ல மெல்ல அரும்பி வளரத் தொடங்கும் குழந்தையின் வளர் நிலையை நன்கு அறிந்துகொள்ளல் நன்று. இவற்றைப் பற்றியெல்லாம் நம்நாட்டு அறிஞர்கள் யாரும் அதிகமாக எழுதவில்லை. என்றாலும் மேல்நாட்டிலே

பல புலவர்கள் எழுதியுள்ளனர். ஆங்கிலத்தில் இப் பிள்ளைமை உணர்வு பற்றியும், குழந்தையின் உளவளர்ச்சி பற்றியும் உள்ள நூல்கள் பல. அவற்றுள் ஒரு சிலவற்றை யாவது நீ வாய்ப்பு நேரும்போது படிக்கவேண்டும்.

இங்கு உனக்கு இக்கடிதத்தில் அப்பிள்ளையின் உள்ள வளர்ச்சியைப் பற்றிய சில கருத்துக்களை எடுத்து விளக்கலாம் என எண்ணுகிறேன். மேல்நாட்டு அறிஞர் களில் ஒரு சிலர் தமது குழந்தைகள் பிறந்தவேளைமுதல் உடன் இருந்து உடலின் புற அமைப்பிலும் உள்ள வளர்ச்சியிலும் உண்டாகின்ற பலப்பல மாறுதல்களைக் கண்டிருக்கின்றனர். பல ஆண்டுகளுக்கு முன்னே இந்தத் துறையில் பணியாற்ற ஒரு பேராசிரியரை இங்கு உனக்கு அறிமுகப் படுத்துகின்றேன். ஜர்மன் வல்லுநராகிய பிரேயர்* என்பர் சென்ற நூற்றுண்டின் பிற் பகுதியி லேயே இந்தக் குழந்தையின் அகப்புற வளர்ச்சியைப் பற்றித் தம் மொழியில் அழகாக எழுதியுள்ளார். அதை ஆங்கிலத்திலேயும் மொழி பெயர்த்துள்ளார்கள். அந்த நாளிலேயே அவர் குழந்தையில் ஆய்வு பற்றிக் கண்ட உண்மைகள் பெரும்பாலும் இந்தக் காலத்திலும் ஏற்றுக்கொள்ளத்தக்கனவாகவே உள்ளன. அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே நான் உனக்குக் காட்ட லாம் என நினைக்கின்றேன்.

குழந்தையின் புற வளர்ச்சி பற்றியும், உறுப்புக் களின் தோற்ற நிலைகளையும் நீயே நேரில் கண்டு கண்டு மகிழ்ந்திருக்கிறுய். அவற்றின் சிறப்புக்களையெல்லாம் நான் எனது முன்னைய கடிதங்களில் குறித்த புலவர் களும் காட்டியுள்ளார்கள். பிள்ளைத்தமிழின் செங்கீரை

*The Mind of the child. by W. PREYER, (original in Germany) Translated into English by H. W. BROWN.

சப்பாணி போன்ற பருவங்களெல்லாம் புற உறுப்புக்களின் வளர்ச்சியையும் அவற்றின் செயல்களையும் விளக்கிக் காட்டுவன அல்லவோ? எனவே இங்கே உனக்குப் புற உறுப்புக்களின் வளர்ச்சி மாற்றங்கள் பற்றி அதிகமாகக் காட்டாது, அகத்துறுப்புக்களின் அமைதியையும் மனவளர்ச்சியையும் மட்டும் ஓரளவு காட்ட நினைக்கின்றேன்.

**அன்புள்ள அரசி !**

உலகில் வாழும் உயிர்கள் அனைத்துக்கும் புறத்தோற்றத்தில் காட்டும் உருவமே உடம்பு எனப் பேசப்பெறுகின்றது. உயிர் உடலில் இல்லையானால் நிலை வேறுபடுகிறது. எனவே உயிர், உணர்வு போன்றவை உள்ள நிலைகள் காட்ட முடியாதனவாக அமைந்து நின்ற போதிலும் புறத் தோற்றத்தில் காணும் உடலே அவற்றை வளர்கின்றது என்னலாம். இதனால்தான் 'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்' என்று திருமூலர் அறுதியிட்டார். ஆங்கிலத்திலும் உடலே நல் உள அமைப்புக்கு வழிகோலும் என்று அறிஞர்கள் காட்டுவர். எனவே குழந்தையின் புறத் தோற்ற நிலையினைக் கண்டே அக வளர்ச்சியை ஓரளவு அறிந்துகொள்ள முடியும். மனிதன் வளர்ந்த பிறகுதான் 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று காட்டும்' கலையில் வல்லவனாகி விடுகிறான். ஆனால் இளங்குழந்தைகள் நிலை அப்படியன்று. எனவே குழந்தையின் புற வளர்ச்சியின் தன்மை கொண்டே ஓரளவு உள்ளத்தை அறியலாம். அந்த உள்ள வளர்ச்சி பற்றியே இங்கு உனக்கு ஒருசில எழுதலாம் என நினைக்கின்றேன்.

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புல நிகழ்ச்சிகளும் குழந்தைகளுக்கு மெள்ள மெள்ள உருவாகுவனவேயாம். குழந்தை பிறக்கும் போது இந்தப் புலன்கள் அனைத்தையும் பெற்றேதான்

பிறக்கின்றது. கண்ணும் காதும், வாயும் மூக்கும், காலும் கையும் பிறக்கும்போதே உடன் பிறக்கின்றவைதாம். எனினும் அவை தொழில்படுமுறை மெள்ள மெள்ள வளர்ந்து கொண்டே வருவதாகும். இந்த ஐம்புல நுகர்வின் வளர்ச்சியோடே மனவளர்ச்சியும் பெருகிக்கொண்டேதான் வரும். குழந்தைகளுடைய எத்தனையோ சொற்களுக்கு நம்மால் பொருள் காணமுடியாது; அதுபோன்றே குழந்தைகளின் எத்தனையோ செயல்களுக்கும் நம்மால் உரை வகுக்கமுடியாது. என்றாலும் அவை எல்லாம் குழந்தை உணர்வு நிலையில் மெள்ள மெள்ள வளர்வதைக் காட்டுவனவேயாகும்.

இளங்குழந்தைகள் பிறந்த சில நாட்களுக்குள்ளாக ஒளியினை மெள்ள மெள்ள உணரத் தொடங்குகின்றன. பிறந்த உலகவெளியின் வெளிச்சத்தைக் காணக்கூசும் கண்கள் சில நாட்களில் ஒளியை விரும்பியே அகல விரிகின்றன. இருட்டில் உறங்கும் இளங்குழந்தை விளக்கொளி கண்டதும் அவ்வொளி தாங்காது விழித்துக் கொள்ளும். ஆனால், சில நாட்களில் அவ்வொளி தனக்கு மிகவும் இன்றியமையாதது என்பதை, சன்னல் வழியே ஒளிவருவது உணர்ந்து அந்தப் பக்கமே முகத்தைத் திரும்பிக்கொள்ளும் நிலையில், நாம் காண்கின்றோம். எனினும் அப்பிஞ்சுக் குழந்தைகளுக்கு பல்வேறு வண்ணங்களை அக்காலத்தில் பிரிக்கும் திறன் இல்லை என்பது அறிஞர் கண்ட உண்மை.

வெண்மையையும் இருட்டையும் உணரும் குழந்தை நிறங்களைப் பகுத்து உணரச் சிலநாட்கள் ஆகும். பிறந்த நாற்பத்து இரண்டாவது நாளிலே குழந்தை நிறங்களின் வேற்றுமைகளை உணரமுடியும். என்றாலும் ஒன்றரை ஆண்டு கழித்துப் பேசும் நிலையிலும் அவ்வண்ணங்களைப் பிரித்து இவை இன்னவண்ணத்தன என வகைப்படுத்த

குழந்தைகளுக்கு இயலாது. ஆழ்ந்த கருமைகலந்த நிறங்களைக் காட்டிலும் வெண்மைகலந்த இளவண்ணங் களே குழந்தைகள் மனதைக் கவர்கின்றன என்பர். நான்காம் ஆண்டிலேயே குழந்தைகள் வண்ணங்களைச் சரியாக விளக்கும் தன்மையைப் பெறுகின்றனவாம். இவ்வாறு ஆராய்ந்து பார்த்தால் குழந்தையின் பார்வை மெள்ள மெள்ள வளர்ச்சி பெறுவதையும், அண்மையில் உள்ளதையும் தூரத்தில் உள்ளதையும் அது எவ்வெவ் வாறு உணர்ந்து அறிகின்றது என்பதையும் நன்கு காண முடியும், இவற்றையெல்லாம் இங்கு உனக்கு விளக்க மாகச் சொல்லப் புகுந்தால் அதுவே ஒரு பெரும் நூலாக முடியும். ஆகவே, பார்வை பற்றி இந்த அளவோடு நிறுத்திக் கொள்ளுகிறேன்.

**அரசி!**

பார்வைக்குப்பின் குழந்தையின் கேட்டறியும் திறனைப்பற்றிச் சிறிது சொல்லலாம் என எண்ணுகி றேன். பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் பிறக்கும்போது செவிடாகத்தான் இருக்கும். ஆனல் அந்தநிலை அதிக நேரம் இருக்காது. குறைப் பிரசவத்தில் பிறக்கும் குழந் தைகள் நல்ல பருவத்தே பிறக்கும் குழந்தைகளைக் காட் டிலும் நீண்ட நேரம் செவிடாக இருக்குமாம். அன்று பிறந்த குழந்தைக்குப் பேரொலியும் கேட்காது என் பதை ஆராய்ச்சியாளர் கண்டிருக்கின்றனர். ஒரு சில குழந்தைகளே பிறந்த நாளிலேயே ஒலியை உணர்ந்து கொள்ளுகின்றனவாம். பிறந்த இருபத்தைந்தாவது நாளில் கேட்கும் திறன் குழந்தைகளுக்கு அதிகமாகும் என்பர். ஐந்தாவது வாரத்துக்குப்பின் ஒரு சிறு ஒலியும் — பிறர் நடப்பதும்கூட - குழந்தையின் தூக்கத்தைக் கலைக்கும் வகையில், சில குழந்தைகளுக்கு அவற்றின் ஒலி கேட்கும் திறன் வளர்ச்சியுறும் போலும். ஆருவது வாரத்

தில் குழந்தை தாயின் இன்னொலிப் பாடலைக் கேட்டுக் கொண்டே உறங்கும் திறன் பெற்றுவிடுகிறது. பதினோருவது வாரத்தில் குழந்தை ஒலி உண்டாகும் திசை நோக்கித் திரும்பிப் பார்க்கும். ஐந்தாவது மாதத்தில் இவ்வொலி உணர்ச்சி நன்கு வளர்ச்சி பெற்று விடுகிறது. குழந்தை பால் உண்பதையும் விட்டுவிட்டு அந்த ஒலி வரும் திசையையே நோக்கிப்பார்க்கும். ஆம்! உன் குழந்தை இப்படி அடிக்கடி பால் குடிப்பதை நிறுத்தி விட்டு உன் தங்கை வள்ளி பாடும் பாடல்களை கேட்டுக் கொண்டே இருக்கிறது என்பதை நீ பல முறை என்னிடம் சொல்லி இருக்கிறாயல்லவா! மூன்று திங்களுக்குள்ளாக இசைகேட்டு உணரும் குழந்தையின் உணர்ச்சி அடுத்த ஆறு திங்களில் நன்கு வளர்ச்சியுறும். இவ்வாறு குழந்தையின் ஒலி கேட்கும் அறிவு மெள்ள மெள்ள வளர்ச்சி அடைகிறது.

அடுத்து உற்று அறிவும் உணர்வினைப் பற்றிச் சில சொல்ல நினைக்கின்றேன். குழந்தை புற உலகக் காற்றை உட்கொள்ளத் தொடங்கும் அதே வேளையில் உற்று அறிவும் அறிவையும் பெற்றுவிடுகிறது என்பர் ஆராய்வாளர். ஒருவர் அதை எடுத்து அணைத்தாலோ அன்றித் தொட்டாலோ அவற்றால் உண்டாகும் உணர்ச்சி குழந்தைக்கு உண்டு போலும். தாய் வயிற்றிலிருந்து பிறக்கும்—தரையில் விழாத—பிரசவத்தின் இடையில் உள்ள குழந்தைக்கும்கூட இந்த உற்றறியும் உணர்ச்சி உண்டு. குழந்தையின் உதடுகளே மிக எளிதாக உற்றறியும் உணர்வினை பெறும் என்கின்றனர். இளங் குழந்தை பிறந்து இருபத்திரண்டு மணி நேரத்துக்குள் அதன் உடல் உணர்ச்சி-தலை முதல் கால் வரையில்—ஒரே நிலையில் இருப்பதில்லை. மூன்று திங்களுக்குப் பிறகு குழந்தை உற்றுணரும் பண்பு நன்கு வளர்ச்சியுறும். உடல் மூழ்க ஊற்றும் வெந்நீரில் சிறு மாறுதல் உண்டானாலும் அதை

உணர்ந்து கொள்ளுகின்ற திறன் குழந்தைக்கு உண்டா கின்றது. அதனாலேயே நாம் ஒரே நிலையில் சூடாக வைக்காத வெந்நீரில் மூழ்கும்போது குழந்தைகள் வீறிட்டு அழுகின்றதைக் காண்கிறோம். சில சமயங்களில் இளங் குழந்தைகளும்கூடத் தட்பவெட்ப நிலையை உணர்ந்து கொள்ளுகின்றன என்பதை நீ நன்கு அறிவாய். எதிர் பாராது தரை 'ஜில்'லிட்டால்—நீராலோ மூத்திரத்தாலோ நனைத்தால்—குழந்தை அழுவதை நீ கண்டு அந்தக் குளிர்ச்சியைப் போக்கி வேறு உடையை மாற்றியிருக் கிறாய் அல்லவா!

இனி, குழந்தையின் உணவுச்சுவை அறியும் திறம் பற்றிச் சில எழுதலாம் என நினைக்கின்றேன். குழந்தைகள் பிறக்கும் நிலையிலேயே சுவைஉணர்வினைப் பெற்று விடுகின்றன என்பதைப் பலவகையில் தேர்ந்து வெளி யிட்டிருக்கிறார்கள். இனிப்பை விரும்பும் அளவு அவை கசப்பு போன்ற பிறவற்றை விரும்புவதில்லை எனவும் கண்டிருக்கிறார்கள். அவற்றின் சுவைஉணரும் முறை பல வகையில் மாறுபடும் போலும். ஒருசிலர் குழந்தைகள் விரும்பும் அல்லது உணரும் சுவைத்திறன், அது நாள் தோறும் பெறுகின்ற சுவைக்கு ஏற்பவே அமையும் என்று கூறினாலும், பல சிறந்த அறிஞர்கள் அச்சுவை உணரும் திறனைக் குழந்தைகள் பிறந்ததும் இயல்பாகவே பெறுகின்றன என்றுதான் தம் ஆராய்ச்சி முடிவை வெளி யிட்டிருக்கிறார்கள். தாய்ப்பாலை விரும்பிக் குடிக்கும் குழந்தைகள் சர்க்கரை கலந்த பசும் பாலைக் குடித்து அதன் சுவை கண்டபின் அதிகமாக அத்தாய்ப்பாலை விரும்பாது, இனிய சர்க்கரைச் சுவையோடு கூடிய பசும்பாலையே விரும்புகின்றன என்பது உண்மையன்றோ! சில தாயார் தம் குழந்தைகளுக்குப் பசும்பால் போன்ற வற்றைக் கொடுக்கும்போது அவை வெறுப்பதைக் காண் கிறோம். ஆனால் அப்பாலில் உள்ள குறையையோ கெட்ட

ஞல் சுவை மாறிய தன்மையையோ, கொடுக்கும் தாயைக் காட்டிலும் அதைச் சுவைக்க எண்ணும் குழந்தையால் நன்கு அறியமுடிகிறது. இவ்வாறு வளர்ச்சி அடையும் நாக்கு அறியும் சுவை நாளுக்கு நாள் மெள்ள வளர்ச்சி அடைகின்றது என்பது கண்கூடு. குழந்தைகளின் சுவை அதன் சுற்றுச் சார்புக்கு ஏற்ப அமைவதும் உண்டு என்பர் சிலர்.

இன்று கடைசியாக உனக்கு நுகர்ந்து முக்கால் சுவையறியும் குழந்தையின் தன்மையைக் கூறி இக்கடி தத்தை முடிக்கலாம் என நினைக்கின்றேன். பிறந்த இளங் குழந்தைகளுக்கு முகர்ந்தறியும் ஆற்றல் இயல்பாகவே அமைந்து விடுகின்றதாம். சில பிடிக்காத மணம் அவை பிறந்த சில மணி நேரங்களில் வீசினுலும், அவற்றைத் துய்க்கமுடியாத காரணத்தால் குழந்தைகள் கண்களை இறுக மூடிக்கொள்ளுமாம். பிறந்த எத்தனை மணி நேரத் துக்குப்பின் இவ்வுணர்ச்சி உண்டாகும் என்பதைத் திட் டமாக வரையறுக்க முடியவில்லை. எப்படியும் பதினெட்டு மணி நேரத்துக்கு முன்பே இந்த நுகர்ச்சியால் வேற்று மணத்தை அக்குழந்தைகள் உணர்ந்துகொள்ளும் எனக் காட்டுகின்றனர். நன்ருக மூச்சு விடும் உடல் உரம் பெற்ற குழந்தைகளுக்கு இந்தப் புலன் உணர்வு மிக எளிதாக உண்டாகும். குருடாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு இந்த நுகர்வு உணர்ச்சி மற்றக் குழந்தைகளைக் காட்டிலும் அதிகமாக இருக்குமாம். பதினைந்து பதினுருவது மாதங் களில் இக்குழந்தைகளின் நுகர்வு உணர்ச்சி நன்கு வளர்ச்சி அடையும் போலும். பெரும்பாலான குழந்தை கள் அவர்தம் பெற்றோர் வாழும் சூழ்நிலைக் கேற்பவே இந்த ஐம்புல உணர்ச்சிகளைப் பெறுகின்றன. நல்ல அறி வுடைய குழந்தைகள் தம் உள்ளத்துக்கும் உரத்துக்கும் ஏற்ற வகையில் இப்புலன் உணர்வுகளை இயல்பாக வளர்க்கத் தொடங்குகின்றன. என்ருலும் பெற்ருேர் தம்

குறுக்கீடு முதலியவற்றால் அவை நல்ல வகையில் உணர்வு பெற்று வளர முடிவதில்லை, இதனாலேயே சில குழந்தைகள் சுற்றுச்சார்புகளால் சிறக்க, சில சுற்றுச் சார்புகளின் தாழ்நிலையாலே கெடுகின்றன. எனவே பெற்றவர் தங்களுக்குள் எத்தனை வேற்றுமையும் தாழ்வுத் தன்மையும் இருந்தாலும் குழந்தைகளை நல்ல சுற்றுச் சார்புகளுக்கு இடையே வளர்க்கவேண்டும்.

**அன்பின் அரசி!**

இவைபற்றியெல்லாம் இன்னும் எத்தனைப் பக்கங்கள் வேண்டுமானாலும் எழுதலாம். எனினும் கடிதம் நீளலாகாது அல்லவா! நீ வாய்ப்பு நேரும்போது நல்ல நூல்களை வாங்கிப் படித்துக்கொள். நீ இங்குவரும்போது இரண்டொரு நல்ல நூல்களைத் தருகிறேன். இன்றைக்கு இந்த அளவோடு நிறுத்திக்கொள்ளலாமென நினைக்கிறேன்.

அன்புள்ள,

**அப்பா.**

## 15. குழந்தையின் மன வளர்ச்சி

**அன்பின் அரசி,**

குழந்தையின் புறத்துறுப்புக்கள் எவ்வெவ்வாறு தொழில்படுகின்றன என்பதைப் பற்றிச் சென்ற கடிதத்தில் ஓரளவு குறித்தேன். இன்று இக்கடிதத்தில் அகத்துறுப்பாகிய மனவளர்ச்சி பற்றியும் அதன் வழி வளர்ச்சியுறும் உணர்ச்சிகள் பற்றியும் ஓர் அளவு கூறலாமென நினைக்கின்றேன். குழந்தையின் மன உணர்வு பையப் பைய வளர்ந்துவரும் நிலையினை நீயே உன் குழந்தை வழி கண்டுவருவாய் என்று எண்ணுகிறேன். உனது கடிதங்களில் அடிக்கடி குழந்தையின் வளர்ச்சி பற்றி எழுதி வருவது அதை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

தன் உணர்ச்சியின்றே உலகில் வந்து பிறக்கும் குழந்தைக்கு உணர்வு மெள்ள மெள்ள அரும்பி வளர்கின்றது. 'யான், எனது' என்ற இரண்டும் அற்றவரே உயர்ந்தவர்

என்பது வள்ளுவர் போன்ற பெரியவர் தம் உள்ளக் கிடக்கை. அந்த வகையிலே கண்டால் பிறந்த 'பச்சை மண்'ணுக்கு அந்த இரண்டு பற்றுமே கிடையாது. அத னல் தான் போலும் பிள்ளை உள்ளத்தைக் 'கள்ளம் கொள்ளாப் பிள்ளை உள்ளம்' எனப் பாராட்டிப் பேசுகின் றனர். குழந்தையின் புற உறுப்புக்களின் அசைவுகளைக் கொண்டே அதன் உள்ளத்து உணர்ச்சியை ஓரளவு புரிந்துகொள்ள முடியும். விரல்களை மடக்கி அறியாத பச்சிளங் குழந்தை சில நாட்களில் விரல்களை மடக்குவ தோடு நம் விரலையும் கெட்டியாகக் பற்றிக் கொள்ளு வதைப் பார்க்கிறோம். மற்றும் அதன் கையைக் கொண்டு முகத்திலும் உடம்பிலும் தேய்ப்பதையும் பார்க்கிறோம். எனவே அந்த மாற்றம் உள்ளத்தில் அதற்கு உணர்த்தும் ஒருவகை மாற்றத்தையே நமக்குக் குறிக்கின்றது. சற்று வளர்ந்தபின் குழந்தை ஒரு பொருளைப் பற்ற நினைத்து முயன்று அப்பொருள் தன் கைக்கு எட்டாவிட்டால் அழு வதைக் காண்கிறோம். ஆகவே ஏமாற்றத்தால் - விரும் பிய பொருள் கைக்கு எட்டவில்லையே என்ற காரணத் தால்—அதன் உள்ளத்தில் மாற்றம் உண்டாகி அதன் வழி அழுகையும் தோன்றுகிறது என அறியவேண்டும். அந்த உணர்ச்சி குழந்தையின் உள்ளத்தில் வரையப் படும் உணர்வுக் கோட்டின் விளக்கமேயாகும். நாள் தோறும் குழந்தையின் மழலையிலும், பார்வையிலும், பிற தோற்றங்களிலும் புதுப்புது மாறுதல்களைக் காணமுடி யும். அவையெல்லாம் அக்குழந்தையின் மனவளர்ச்சியைக் காட்டுவனவே என அறிஞர்கள் ஆராய்ந்து முடிவு செய் துள்ளனர். அவற்றால் அக்குழந்தையின் உள்ளத்தை அறுதியிட முடியும் என்பது அவர்கள் கருத்து.

குழந்தை பால் உண்பதிலும், பின் குப்புறக் கவிழ் வதிலும், தவழ்வதிலும் தளர்நடையிட்டுத் தள்ளாடித் தள்ளாடி விழுந்து எழுவதிலும்கூட அதன் உணர்ச்சியும்

அறிவு வளர்ச்சியும், முயற்சியும் நன்கு புலப்படும். சில சமயங்களில் குழந்தை எழுந்து நடக்க முயலும் காலத்தில் யாராவது கை கொடுத்துப் பிடித்தால் அது கையைத் தள்ளிவிட்டுத் தானுகவே தட்டித் தடுமாறி நடக்க நினைக்கிறதைக் காண்கிருேம். அது குழந்தையின் மனத்தின் அடிப்படையின் தன்முயற்சித் திறனேயே காட்டுகிறது. சில நல்ல குழந்தைகள் தனியாகத் தவழ்ந்தும் தளர் நடையிட்டும் தன்முயற்சியில் தலைகாட்டி நிற்கும்போது பெற்ற தாயே வந்து வாரி எடுத்து அணைத்தாலும் வெறுப்புக் கொள்வதைக் காண்கிருேம். தாயின் அரவணைப்பிலே தான் துயிலும் பண்பை விரும்பும் குழந்தை, அந்த அணைப்பே தன்முயற்சிக்கு இடையூருக வரும் போது தள்ளுகின்றது. அப்போது எது எதையோகூடப் பேச நினைக்கிறது குழந்தை. ஒருவேளை 'உன் உதவி எனக்கு வேண்டாம், என் முயற்சியில் என்னை வளர விடு' என்று அது நமக்குப் புரியாத மழலை மொழியில் பேசுகின்றதோ என்றுகூட எண்ணத் தோன்றும். எனவே குழந்தையின் அகவுணர்வாகிய மனவளர்ச்சி பெரியவர்கள் அறுதியிட்டுக் காணமுடியாத வகையில் வளர்ந்துகொண்டே செல்லுகிறது என்னலாம்.

குழந்தைகள் ஆருவது மாதத்தில் உட்காருவதும், ஒன்பது அல்லது பத்தாவது மாதத்தில் தத்தித் தத்தி நடக்க முயற்சிப்பதும் இயற்கை. நல்லகுழந்தைகள் இந்த நாட்களில்தான் தன்முயற்சியால் உட்கார, நடக்க முயலும். அந்தச் செயல்களுக்கு அக்குழந்தை தன் புற உறுப்புக்களோடு அகவுறுப்பாகிய மனத்தைத்தையும் தொழிற்படுத்தும் என்பர் ஆய்வாளர். நம் நாட்டிலும் பிற நாடுகளிலும் இப்படி உட்காருவதற்கும், நடப்பதற்கும், பழக்குவதற்கும் பல சாதனங்களையும் கருவிகளையும் செய்துப் பயன்படுத்துகிருர்கள். தன் முயற்சியில் வெற்றி பெற நினைக்கும் குழந்தை, அவற்றை ஓரளவு பயன்படுத்

திக் கொள்ளும். என்றாலும், தன்முயற்சியில் வெற்றி கொண்ட பிறகு அவற்றை நாமே வலியத் தந்தாலும் வெறுப்பாக வேண்டாமென ஒதுக்கும். இந்த உட்காரும்-நடக்கும்-முயற்சிகளைக் கண்ட புலவர்தாம் சப்பாணிப் பருவம், சிறுதேர் பருவம் போன்ற பருவங்களில் பண்ணொற்றப் பாட்டிசைத்து மகிழ்ந்தார்கள். இப்படிக் குழந்தை இருந்து, எழுந்து, நடக்க நினைக்கும் முயற்சியில் அதன் மன ஆற்றல் நன்கு புலப்படும் என்பது உறுதி.

**அன்பின் அரசி,**

இங்கே நான் சொல்லுபவையெல்லாம் நம் குழந்தைகளிடம் நாம் அன்றாடம் காணும் நிகழ்ச்சிகள்தாம். என்றாலும் அவற்றைப் பற்றியெல்லாம் நாம் உட்கார்ந்து ஓர்ந்து ஆராய்ச்சி செய்வதில்லை. அதற்கு ஏற்ற ஓய்வும் வாய்ப்பும் நமக்குக் கிடைப்பதில்லை. என்றாலும் மேலை நாட்டில் சிறந்த அறிஞர்கள் அவற்றை ஆராய்ந்து அழகிய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். குழந்தையின் மனவளர்ச்சியைப் பற்றித் தமிழிலும் நல்ல நூல்கள் வெளிவரவேண்டும். நீ உன் குழந்தை வளரும்போது அதனிடம் தோன்றும் வளர்ச்சி மாறுபாடுகளைக் கண்டு கொண்டே ஒரு பெரு நூல் எழுதிவிடலாம். நீ செய்வாயா? செய்தால் பயன் உண்டு. ஆம். உனக்கும் உலகுக்கும்.

இன்னொரு புதிய கருத்தை உனக்குச் சொல்லலாம் என நினைக்கின்றேன். முன்கடிதத்தில் சுற்றுச் சார்புக்கு ஏற்ற வகையில் குழந்தைகள் வளரும் என்று கூறினேன் அல்லவா? ஆம்! அந்த வகையில் பிறர் செய்வதைக் கண்டு தானும் அதுபோல் செய்யவேண்டும் எனத் தூண்டும் குழந்தை உள்ளம். முன் காட்டிய தன்முயற்சியால் செயலாற்றிய நிகழ்ச்சிகளுக்கும், பிறர் செயல்கண்டு

தொழிற்படும் நிகழ்ச்சிகளுக்கும் ஓரளவு உணர்வு இன்றி யமையாதது. மூளையின் தொழில்படு நிலை ஓரளவு செம்மைப்படுத்தப்பட வேண்டும். சில நிகழ்ச்சிகள், பார்த்துச் செய்யும்போது இயல்பாகவே முகிழ்க்கும் என்பர் அறிஞர். மன உணர்வை அதிகமாகப் பெய்யவேண்டிய இடமல்ல அது என்பர். குரங்குகள் மக்கள் செய்வதைப் போன்று செய்வதாகவும், கிளிகள் மக்களைப் போல் பேசப் பேசுவதாகவும் கதைகளை படிக்கிறோமல்லவா! அவை மன உணர்வு பெற்று அவ்வாறு செய்கின்றன என ஐயப்படுகிறார்கள். என்றாலும் ஓரளவு அவற்றிற்கு மன உணர்வு உண்டு என்பதை மறுக்க முடியாதே! பார்த்துச் செய்வதற்கு நிறைமன உணர்வு தேவை இன்றேனும் ஓரளவாவது அவ்வுணர்வு தேவையே. வளரும் மன வுணர்வின் வழியேதான் குழந்தை தன் செயலை ஆற்றத் தொடங்குகின்றது என்பது பொருந்தும்.

சில குழந்தைகளின் விளையாடல்களை நீ கண்டிருப்பாய். மரப் பொம்மையை வைத்துக்கொண்டு அதைக் காலிடைக் கிடத்தி நீராட்டுவது போன்றும், உடை உடுத்துவது போன்றும், உணவு அளிப்பது போன்றும் சில பெண்குழந்தைகள் செய்வதைக் காண்கிறோம். அது எதனால் வந்தது? பெண்களுக்கே உரிய இயற்கை மன உணர்வு ஓரளவு அரும்புகின்றது. என்றாலும் அதன் தாயார் அக்குழந்தைக்குச் செய்யும் அந்தச் சிறப்புக்களை யெல்லாம் அப்பொம்மைக்கும் செய்யவேண்டும் என அது விரும்புவதால்தான். எனவே பார்த்துத் தொழில் படும் உணர்வு குழந்தைகளுக்கு அரும்புவது இயற்கையே யாகும். அதனால்தான் குழந்தைகளின் முன் நற்செயல் களே செய்யவேண்டுமென நான் மேலே முன் ஒரு கடிதத்தில் குறித்தேன்.

நல்ல வகையில் குழந்தைகளை வளர்ப்பதற்குப் பெற்றோர்களே முன்னின்று வழிகாட்டிகளாக அமைய

வேண்டும், வீட்டிற்குள் மாறுபாட்டைக் காணும் குழந்தைகள் உண்மையில் மன வளர்ச்சியில் மாறுபெற்றே வளரும். மற்றவர்களை வரவேற்கும் முறையிலும், போற்றும் முறையிலும் செம்மையான நெறிகாணும் வகையில் பெற்றோர்கள் அமைந்து தொழிற்படுவார்களாயின் குழந்தைகளும் அவ்வாறு செம்மை நலம் சான்ற பண்புடன் வளரும். குழந்தைகள் மனவளர்ச்சி அறிந்து பெற்றோர்களும் அவற்றோடு பழகும் பிறரும் நேரிய வழியில் குழந்தைகள் முன் வாழ்ந்து காட்டுவார்களாயின் அக் குழந்தைகள் சிறந்த குழந்தைகளாகப் பண்பாட்டுடன் வளரும் என்பதில் ஐயமில்லை.

**அரசி !**

உன் குழந்தை அடிக்கடி உன்னை நோக்கி முறுவல் செய்கிறது அல்லவா? அந்த முல்லைச் சிரிப்பு குழந்தை முகத்தில் முதல் முதல் எப்போது அரும்புகிறது? சிரிப்பு எப்போது அரும்புகிறது? சிரிப்பு எப்போது வரும்? மக்கள் தாம் நினைத்த செயலில் வெற்றிக்கண்ட மகிழ்ச்சியிலோ, தாம் வேண்டியது பெற்ற மன நிறைவிலோ சிரிப்பு வெளிப்படுவது இயற்கை. எனவே சிரிப்பு மன நிகழ்ச்சியின் எதிர்ஒலியாகும். குழந்தை இந்த மன நிறைவைப் பெற்றதாலேயே அது சிரிக்க முடிகிறது. பிறந்த உடனே சிலமணி நேரங்களிலேயே அதன் உதட்டு அசைவினைக் கண்டு சிலர் குழந்தை அப்போதே சிரிக்கிறது என்று சொல்வார்கள். எனினும் ஆய்ந்து பார்ப்பின் குழந்தை சில நாட்கள் கழித்தே சிரிக்கத் தொடங்கும் என்பர். சிரிக்கவேண்டும் என்ற உள்ளுணர்வும், அதற்குக் காரணமாய மனநெகிழ்வும் குழந்தை பிறந்த சில நாட்களிலேயே உருவாகிவிடுவன. என்றாலும் அறிஞர்கள் குழந்தை பிறந்த இருபத்தைந்து நாட்கள் கழிந்தே அது மன உணர்வின்வழி வாய் திறந்து சிரிக்கத் தொடங்கும் எனக்கண்டுள்ளனர். அதற்குமுன் அது சிரிப்

பது போன்று காணப்பட்டாலும் அச்சிரிப்பு மனதைப் பற்றியது அன்று என்றும் கூறியுள்ளார்கள். குழந்தை மன உணர்வின் வழி உறங்கும்போதுகூடச் சிரிப்பது உண்டு. இதை நீ உன் குழந்தையிடம்கூடக் கண்டிருக்கிறாய் என அடிக்கடி எழுதுவாயே! குழந்தை தன் உருவைக் கண்ணாடியில் கண்டு சிரிக்கும் நாளைப் பிறந்த இருபத்தேழாவது வாரம் எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். மெள்ள மெள்ளப் புன்சிரிப்பு பெருஞ்சிரிப்பாகக் காலம் வளர வளர வளர்ந்துகொண்டே செல்லும். ஒரு ஆராய்ச்சியாளர் குழந்தை நாற்பது நாட்களுக்குப்பிறகே வாய்விட்டுச் சிரிக்கும் என்கின்றார். எனினும் பொருள்களைக் கண்டு நகைப்பதையும் ஒலிகேட்டு நகைப்பதையும் சற்று வளர்ந்த குழந்தைகளின் செயல்களாகவே கூறுவர். எப்படியாயினும் குழந்தையின் புன்சிரிப்பும் பெருநகையும் அதன் மனவளர்ச்சிக்கு ஏற்பவே அமைந்து மெள்ள மெள்ள வளர்கின்றன என்பது தேற்றம்.

பிள்ளைத் தமிழில் முத்தப் பருவம் என்று உண்டு. குழந்தையை முத்தம் தருமாறு வேண்டுவது அது. முத்தம் தருவதும் மனவளர்ச்சியின் அறிகுறியே. தாய் எத்தனை தடவை முத்தம் தந்தாலும் இளங் குழந்தைகள் திரும்பித் தருவதில்லை. முத்தத்தின் சிறப்போ தேவையோ குழந்தை அறியாதது. கொடுக்கும் முத்தத்தை அது ஏற்றுக்கொள்ளும். எனினும் அது திரும்பி முத்தம் கொடுக்கக் குறைந்தது ஒரு ஆண்டு ஆகும். அதுவரையில் அதன் மனது அம்முத்தம் பற்றி எண்ணி எண்ணி ஆய்ந்திருக்குமல்லவோ? பிறகு அந்த உணர்ச்சி மெள்ள மெள்ள வெளிவரும்.

முத்தத்திற்குப் பதில் முத்தம் தருவதாக அமையும் நன்றி உணர்ச்சி பிள்ளை உள்ளத்தே அதன் முப்பத்து

நான்காவது மாதத்தில் வளரும் என்பர் ஆய்வாளர். எனவே உயர்ந்ததாகிய நன்றியதலெனும் பண்பாடு மூன்றும் ஆண்டு நிரம்பாத முன்பே பிள்ளை உள்ளத்து இடம்பெறும் என்று அறிதல் வேண்டும்.

இவைபோன்றே குழந்தை அழுவதும் மன உணர்வை எடுத்துக்காட்டுவது என்பது நான் உனக்குச்சொல்லாம லேயே விளங்குமல்லவா! அழுகை பெரிதாகும்போது தலையை அசைப்பதும், காலை உதைப்பதுமாகிய பல் வேறு செயல்களைக் காண்கின்றோம். சிறு குழந்தை அழாதபோதுகூட, அடிக்கடி காலையும் கையையும் ஆட்டியும் உதைத்தும் வேடிக்கை காட்டுவதுபோன்று தொழில் படுவதையும் காண்கின்றோம். அவையெல்லாம் மன உணர்வின்வழி உருவாகும் செயல்களே எனக் கொள்ளல் பொருந்துவதாகும்.

குழந்தைகள் உடற்றசையின் அசைவு முதலியன வற்றின் செயல்களெல்லாம் பெரும்பாலும் மன உணர்வின் வழிப்பட்டனவே என்பர் அறிந்தோர். குழந்தையின் புலன்கள் வழிப்பெறும் மன உணர்வும் அம்மனத்தின் ஆணைவழித் தொழில்படும் புறச்செயல்களும் எண்ணில் அடங்கா. குழந்தையின் வளர்ச்சியில் ஒவ்வொரு சிறு செயலும் பொருள் உள்ளதேயாகும். அவற்றையெல்லாம் ஆய்ந்துகான ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் தேவை. அத் துடன் நாமும் அக்குழந்தைகளைப் போன்று குழந்தை யுள்ளம் பெற்றவராக வேண்டும். அக்குழந்தை உள்ளம் பெற்றவரே மக்களைப் பெற்றவர், மற்றல்லாதார்யாரோ இன்று இத்துடன் அமைகின்றேன்.

அன்புள்ள,

**அப்பா.**

## 16. அடித்தா? அணைத்தா?

**அன்புள்ள மங்கையர்க்கரசிக்கு,**

இதுவரை எழுதிய கடிதங்களில் பிள்ளைமை இன்பத்தைப் பற்றியும், அது கருவில் வளரும் திறம்பற்றியும், பிறந்து வளரும் நிலைபற்றியும் எழுதியிருந்தேன். இக்கடிதத்தில் அக்குழந்தையை-வாழ்வின் வளமார் செல்வத்தை–பெரும்பேற்றை–எப்படி வளர்க்க வேண்டும் என்பதுபற்றிச் சிறிது எழுதலாம் என்று நினைக்கின்றேன். இது பற்றி முன் சங்கச் சான்றோர் காட்டிய சில பாடல்களைக் காட்டினேன். இங்கே பொதுவாகச் சில கருத்துக்களைச் சொல்லுகிறேன்.

உலகில் பிறக்கும் பிள்ளைகள் அனைத்தும் அழகுடையனவாகவோ அறிவுடையனவாகவோ திறல் உடையனவாகவோ இருப்பதில்லை. இதற்கு எத்தனையோ

காரணங்களைச் சொல்லுவார்கள். முன் சில கடிதங்களில் நான் குறித்தபடி பரம்பரை அமைப்பும் சுற்றும் சார்பு நிலையுமே குழந்தைகளைப் பல்வேறு நிலையில் வளரச்செய்கின்றன. நல்ல பரம்பரைகளில் சில நலம் கெட்ட குழந்தைகளும், கெட்ட பரம்பரையில் முத்துச் சிப்பிகளும் பிறக்கின்றன என்றாலும், அவற்றை விதிவிலக்காகத்தான் கொள்ளவேண்டும் என்பர் ஆராய்ந்த அறிஞர்கள். சுற்றுச் சார்பு குழந்தை வளர்ப்பில் முக்கிய இடம் பெறுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. அதனால் இங்கே சென்னையிலேயே உள்ள சில செல்வர்கள் முறையாக நடக்கும் சில பள்ளிவிடுதிகளில் தத்தம் குழந்தைகளை இரவுபகல் எந்தநேரமும் தங்க விட்டுவிடுகின்றனர். தம் பிள்ளைகளுக்குச் சில வசதிகள் குறைந்தாலும் விடுதிகளின் நல்ல சூழ்நிலையில் அவை ஒழுக்கமுள்ள பிள்ளைகளாக வளரும் என நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை பெரும்பாலும் வெற்றி பெறுவதையும் காண்கின்றோம். எனினும் பெற்றவர்களில் சில நல்லவர் அவ்வாறு அனுப்பாது, தமக்குப் பல இடர்கள் இருந்தபோதிலும் அறைற்றை வெளிக்காட்டாது, குழந்தைகளுக்கு ஏற்ற சூழ்நிலையை அமைத்துக் கொண்டு அவர்களைப் பிரிய மனமில்லாது தம் வீட்டிலேயே வைத்து வளர்ப்பார்கள். அதுவே சிறந்த பண்பாகும்.

அவ்வாறு குழந்தை வளர்ப்பதில்தான் பெறும் பொறுப்பு, பெற்றவர்களுக்கு-சிறப்பாகத் தாய்க்கு - அமைகின்றது. தனது ஆசைகளை யெல்லாம் அடக்கிக் கொண்டு, குழந்தையின் நலமே தன்னலம் எனக்கருதி, வாழ்வையே தியாகவாழ்வாகச் செய்து சிறக்க வேண்டியதே தாய்மை அன்பாகும். இது பற்றி முன் ஒரு கடிதத்தில்கூட உனக்கு விளக்கியிருக்கிறேன்.

**அன்பின் அரசி!**

குழந்தை வளர்ப்பைப் பற்றி எழுதி இருக்கின்ற அத்தனைப் புலவர்களும் பிள்ளைகளை அணைத்தே வளர்க்க வேண்டும் என்றுதான் குறிப்பிடுகிறார்கள். என்றாலும் உலக வழக்கில் பலர் அப்படி இருப்பதில்லை என்பதை நீயே நன்கு கண்டிருக்கிறாய். நாட்டிலே 'முருங்கையை ஒடித்து வள, பிள்ளையை அடித்து வளர்' என்ற ஒரு பழமொழியும் உலவுவதை நீ அறிவாய். ஆம்! பல பிள்ளைகள் அப்படி அச்சத்தாலேயே வளர்க்கப் பட வேண்டிய சூழ் நிலையில் தள்ளப்பட்டு விடுகிறார்கள். ஆனால் அந்த 'அடி' என்னும் தண்டனை அன்புடையதாக இருக்கவேண்டும் என்பார் சிலர். வீட்டில் உள்ள தாய் தந்தை இருவரில் ஒருவர் அடிப்பவராக மற்றவர் அணைப்பவராக இருப்பதைக் காண்கிறோம். தந்தை அடித்தால் பெற்ற தாய் அணைத்துத் தேற்றுவாள். தாய் அடித்தால் தந்தை அணைத்துத் தேற்றுவார். அப்போதும் அந்த அடி அன்பின் அடியாகத்தான் இருக்கவேண்டும். அடியவரை ஆண்டவன் அந்த வகையிலே அருளொடு அன்பினைப் பின்னிப் அடித்து அருள்வான் என்ற உண்மையை '**அடித்தடித்து அக்கார முன் தீற்றிய அற்புதம் அறியேனே**' என்று மாணிக்க வாசகரும், '**நின்பணி பிழைக்கில் புளியம் வளாரால் மோதுவிப்பாய் உகப்பாய் முனிவாய்**' என்று அப்பரும் கூறியுள்ளார்கள் என்பதை எண்ணும்போது நமது உள்ளம் நைகின்றது அல்லவா! ஆம்! ஆண்டவனுடைய அந்த அன்பு கலந்த அடியினால் அவர்கள் செம்மைப் பட்டுச் சிறந்தார்கள் எனவும் காண்கிறோம். ஆனால் அந்த அடி அன்பற்றதாக இருக்ககூடாது.

அண்மையில் வாழ்ந்த அடியவர் ஒருவர் இந்த அடித்தலையும் அணைத்தலையும் பற்றிப் பாடிய பாடல் எனக்கு நினைவுக்கு வருகின்றது. தாய் தந்தையரில்

ஒருவர் அடிக்க மற்றவர் அணைத்துத் தேற்றுவது உலக நீதி. ஆனால் அந்தத் தாய்தந்தை என்ற இரண்டிடத்தையும் ஒருவரே நிரம்பும் போது அவர் அடிக்காது அணைக்கத்தான் வேண்டும் என்கின்றார் அவ்வடியவர். அவர் யார் என அறிய விரும்புகிறாயா? ஆம்! அவர்தான் வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள். இதோ அவர் வாக்கு. நீயே நன்கு படித்து அறிந்துகொள்.

'தடித்த ஓர் மகனைத் தந்தை ஈண்டடித்தால்
தாயுடன் அணைப்பள் தாயடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன் இங்கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திருமேனி அம்பலத்தாடும் புனித நீ
ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மையப்பா இனி ஆற்றேன்,
(ஆறுவது திருமுறை—பிள்ளைச் சிறுவிண்ணப்பம் 1)

இப்படியே பல அடியவர்கள் அடித்தும் அணைத்தும் ஆண்டவன் அருள்சுரப்பதைப்பற்றிப் பாடுவார்கள். எனினும் நாம் பெற்றெடுக்கும் குழந்தைகளை அடித்தும் அணைத்தும் வளர்ப்பதில் இன்னும் வேறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன என்பதை அறிவாய். ஆழ்ந்து சிந்திப்பின் அணைத்து வளர்ப்பதிலேதான் அன்பு-மகிழ்ச்சி—எல்லாம் கலந்திருக்கின்றன என்பதை நன்கு உணர முடியும். யார்தான் பெற்ற வாழ்வுச் செல்வமாகிய குழந்தையை அடிக்க ஒருப்படுவர்? என்றாலும் சிலர் அடிக்கிறார்களே என்றால் அது சூழ்நிலையினால் விளையும் கொடுமையேயாகும். சில குழந்தைகள் பெற்றோருக்குக் கோபத்தை உண்டாக்கும் வகையில் நடந்து கொள்ளுகின்றன என்பது உண்மைதான். அதற்குக் காரணம் அந்த இளங் குழந்தைகளுக்குப் பெற்றோரது வாழ்க்கை நிலையோ பிறசூழ்நிலைகளோ தெரியாததுதான்.

எது எப்படி இருந்தாலும் அடிக்காது குழந்தைகளை வளர்த்தலே நலம் பயப்பதாகும் என்பதே பலருடைய கருத்து.

ஆயினும் உலகில் அந்த முறையில் பலரால் வளர்க்க முடியவில்லை. அதற்கு எத்தனையோ காரணங்கள் உள. அடிக்கவேண்டாம் என்று கூறுகின்றவர்களே மாறு பட்ட சூழ்நிலையில் வாழ்வார்களேயானால் அவர்களும் அடிக்கவே முற்படுவார். ஆனால் அந்த வேளைகளில், ஒருவேளை அடித்தாலன்றித் திருத்தமுடியாத நிலை ஏற் படுகின்ற வேளைகளில்-வள்ளுவர் அரசனுக்கு உணர்த் திய அறிவுரையைப் பெற்றோர்கள் கைக்கொள்ள வேண்டும். ஆம்! 'கடி தோச்சி மெல்ல எறியவேண்டும், இதனால் குழந்தை உள்ளமும் கோடாது; அதன் குறையும் மறைந்து நீங்கும்.

'தம் பொருள் என்ப தம்மக்கள்' என்று வள்ளுவர் கூறுவதற் கொப்ப உலகில் பிறந்தார்க்கு உயரிய செல்வம் மக்களே யாதலால் எதைக் கொடுத்தும் அச்செல்வத்தை ஓம்பிக் காத்தலில் பின்னடைய லாகாது. தமிழ்நாட்டுத் தாய்மை உள்ளம் என்றும் பின்னிட்டதும் கிடையாது. இவ்வுண்மை இன்றும் நிலவுகின்றது. இன்னும் என்றென்றும் தமிழ்நாட்டுத் தாய்மை நலமுற்றுத் தழைக்கும் எனக் கூறிக் கொண்டு இக்கடிதத்தைச் முடித்துக் கொள்ளுகிறேன். அதோ உன் குழந்தை மழலைமொழி கேட்கிறது. சென்று பார்

அன்புள்ள,

அப்பா.

## 17. பிள்ளைப் பேறு வேண்டாவா?

**அன்பின் அரசி !**

இன்று உனக்குப் புதுவகையில் இக்கடிதத்தை எழுதத் தொடங்குகின்றேன். இதுவரையில் நான் எழுதிய கடிதங்களையெல்லாம் முறையாகப் படித்துப் பயன் பெற்றிருப்பாய். அவற்றிலெல்லாம் மக்கட்பேறே மனித வாழ்வில் மிகச் சிறந்தது என்பதை எத்தனை எத்தனை புலவர்கள் விளக்கியுள்ளார்கள் என்பதை நீ அறிந்து கொண்டாயல்லவா! ஆம்! அன்று தொட்டு இன்றுவரை தமிழ் நாட்டில் வாழ்ந்த எத்தனையோ புலவர்கள் பாராட்டிய இந்த மக்கட் செல்வத்தைப்பற்றி இன்று எத்தனையோ பேர் எத்தனையோ வகையில் பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் வருவதை நீ அறிந்திருப்பாய் என நினைக்கிறேன்.

உலகில் மக்கள் தொகை நாள்தோறும் வளர்ந்து கொண்டே போவதை அனைவரும் அறிந்துதான் இருக்கி

ளுர்கள். உலகில் இப்படியே மக்கள் இனம் பெருகிக் கொண்டே போனுல் இன்னும் சில நாட்களில் மனிதன் வாழாமல் திண்டாட வேண்டிவரும் என்று பெரிய பொருளாதார நிபுணர்களெல்லாம்கூடப் பேசத் தொடங்கிவிட்டனர். அதற்கு அவர்கள் தடுப்பு வேலை களையும் மேற்கொள்ளத் தொடங்கிவிட்டனர். அவர்கள் மிகச் சுலபமாகக் கண்டவழி கருப்பத்தடை என்பது தான். 'பிள்ளைகளைப் பெருதே' என்று சொல்லுவது தான் அவர்கள் கண்ட சுருக்குவழி. சொல்லுவதோடு மட்டுமன்றி நம் நாட்டில் அரசாங்கத்தார் அத்துறையில் தீவிரமாகத் தொழிற்படத் தொடங்கியும் விட்டனர். இதை நினைத்தால் உண்மையில் வேதனைதான் உள்ளத் தில் பிறக்கிறது.

உயிரின வளர்ச்சியின் உச்சத்தில் வாழ்கின்ற மனிதனின் போக்கே இன்று விபரீதமாக அமைந்துள்ளது என்பதை நீ அறிவாய். நான் அதுபற்றி முன்னர்ப் பல நூல்களில் விளக்கி எழுதி உள்ளதையும் நீ படித்திருக் கிருய். அந்த மனிதனுடைய விபரீதப் போக்குக்கு இது ஓர் உதாரணம். உடலுக்கு ஏற்பச் சட்டையைத்தைத்து கொள்ளாமல் சட்டைக்கு ஏற்ப உடலைக் குறைக்கும் கதையைத்தான் இது நினைப்பூட்டுகின்றது. மக்கள் வாழ்வின் தேவைக்கு ஏற்றவகையில் உணவையும் உடை யையும் தயார் செய்ய இயற்கைச் சாதனங்கள் சூழ இருந்தும்கூட அந்த நிலையை மறந்த மனிதன் இப்படிக் குறுக்கேபாய நினைக்கிருன். இதற்கெல்லாம் காரணம் மனிதன் தன்னம்பிக்கையை இழந்ததோடு மனிதப் பண்பையும் இழந்தவனுக இருப்பதுதான். பரந்த நிலப் பரப்பில் இன்னும் பத்தில் ஒருபகுதிகூட மனிதன் கைக்குள்ளும் உழவுக்குள்ளும் வரவில்லை. அந்த உழவுப் பகுதியும் சரியாகப் பயன்படுத்தப் படவில்லை. அரசாங்கம் தரும் கணக்கின்படியே பிற உலகநாடுகளில்

ஓர் ஏக்கர் நிலத்தில் விளையும் நிலைக்கும் நம் நாட்டு நிலைக்கும் எத்தனையோ மாறுபாட்டைக் காண்கின்றோம். பரிசுபெறத் தக்க உயர்ந்த நிலையே அப்படியாயின் மற்ற வற்றைச் சொல்லவும் வேண்டுமா?. இப்படி உழைப்பிலும் தன்னம்பிக்கையிலும் உறுதியற்று வாழும் மனிதன் நாட்டில் வாழும்வரையில் மக்கள் இனம் வளரவிடுவதைத் தடுக்கத்தானே முயல்வான்.

## அன்பின் குழந்தாய் !

இன்று நான் ஏதேதோ எழுதிக் கொண்டு போகி றேனே என்றுதானே எண்ணுகிறாய். ஆம். இன்றைய உலகை—சிறப்பாக நம்நாட்டை—நினைத்துக்கொண்டால் வேதனைத்தான் பிறக்கிறது. அன்று தொட்டு இன்று வரை வாழ்ந்த அத்தனைப் பெரியவர்களும் போற்றிய பிள்ளைமை இன்பத்தைக் கருவறுக்கும் 'திருத் தொண்டை' நினைத்தால் நடுக்கம்தான் உண்டாகின்றது. அதற்கு ஏற்றாற்போலப் பலகதைகளும், படக்காட்சிக ளும் கூட நாட்டில் படிக்கவும் காட்டவும் பெறுகின்றன. கதையிலும் படத்திலும் மட்டுமன்றி உண்மை வாழ்வி லேயும் இக்கொடுமை நிலவுவதை நாடு அறியும். அன்றாடம் நாளிதழ்களிலே வறுமையின் காரணமாக மக்களைக்கொன்று தாமும் மடியும் தாயாரைக் காண முடிகிறது. ஒருவேளை அப்படி முடியாது உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் தாய் அரசாங்கத்திடம் அகப் பட்டால் அவளை விசாரித்துத் தண்டனை தரவும் அரசாங் கம் தயங்கவில்லை; ஆனால் அவளைக் கொடுமைக்கு உள் ளாக்கிய வறுமையைப்போக்க வழி காண்பதில்லை. வறுமையைப்போக்க வேண்டும் என்று அறிஞர்கள் சொன்னால் அதற்குச் சிறந்த முறை கருவை அழித்தலே என மறுமொழிகூறும் இருபதாம் நூற்றாண்டின் நாக ரீகத்தை என்னென்று சொல்லுவது?

**அன்பின் செல்வி !**

இன்றும் சில நாடுகள் மக்களை பெற்று எண்ணிக் கையை வளர்க்கும் பணியில் ஈடுபடுகின்றன. அவ்வாறு பிறக்கும் மக்களுக்கு வாழ வழியும் வகையும் புதுப் புது வகையில் அவ்வரசாங்கங்கள் செய்து கொண்டேதான் இருக்கின்றன. ஆனால் இங்கும் இன்னும்சில இடங்களி லும்தான் கருவறுக்கும் திருத்தொண்டு நடைபெறுகிறது. இதற்குக் காரணம் இங்கே மக்கள் வறுமையால் வாடி இறப்பதைக் காணமுடியவில்லை என்றும், மக்கள் எண் ணிக்கை ஆண்டுதோறும் வளர்ந்துகொண்டே போகிறது என்றும், அதைக் கட்டுப்படுத்தவே இந்தத்திட்டங்கள் என்றும் கூசாமல் கூறுவர். ஆனால் சற்று எண்ணிப் பார்த்தால் இக்கூற்று எவ்வளவு பொருந்தாதது என்பது விளங்காமல் போகுமா?

உலகில் எத்தனையோ பகுதிகள் பண்படுத்தத் தக்க வழியிலிருந்தும் அவ்வாறு பண்படுத்த முடியாத கொடிய நிலையில் நாம் இருந்து வருகிறோம். சில நாடுகள் பாலை வனங்களைச் சோலை வனமாக்குகின்றன என அறிகி றோம். சில நாடுகள் கடற்கரை நெய்தல் மணலிலே நெல் பயிரிடும் பண்பாட்டை உண்டாக்கி உணவினைப் பெருக்குகின்றன என அறிகிறோம். நம் நாட்டிலோ உண்மையிலேயே பயிரிடவேண்டிய நிலங்கள் இருந்தும் பாழாகக்கிடக்கின்றன. ஏன்? தண்ணீர் இல்லையா? ஏன் இல்லை? எத்தனையோ வற்றாத சீவநதிகள் வழிந்து கடலில் கலக்கின்றன. அவற்றை நாட்டின் பிற பகுதி களுக்குத் திருப்பினால் என்ன? ஒரே நாடு என்று கூறிக் கொண்டே இந்நாட்டின் ஒரு பகுதியில் உள்ள ஆற்று நீரை மற்றொரு பகுதிக்கு அனுப்ப முடியவில்லை. இப்படி இருந்தால் எவ்வளவு நிலமிருந்து எப்படி வளம் பெறும்? இதனால்தான் நான் முன்னே சொன்னபடி

துணிக்கு ஏற்ப—சட்டைக்கு ஏற்ப—உடலைக் குறைக்கும் கொடுமைக்கு உள்ளாக வேண்டியுள்ளது.

**அருமைச் செல்வி !**

நம் சென்னை நகரில் கருச்சிதைக்கும் 'திருமடங்கள்' பல இருக்கின்றன. ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் தனித்தனியாகப் பல இடங்கள் இருப்பதை அவற்றின்முன் தொங்கவிடப்பட்டிருக்கும் பலகைகளால் காணமுடிகின்றது. அவற்றைக் காணுந்தோறும் என் உள்ளம் மிகமிக வருந்தும். 'தம் பொருள் என்ப தம் மக்கள்' என்ற பாட்டிசைத்த வள்ளுவர் பிறந்த நாட்டிலா இத்தகைய விளம்பரங்கள் என எண்ணிஎண்ணிப் பெருமூச்சு விடுவேன். என் செய்வது? இதுதான் நாகரிகம் எனக்கருதும் பொல்லாத அநாகரிகக் காலத்தில் நாம் வாழநேர்ந்ததே என்று வருத்தப்படுவதன்றி வேறு என்ன செய்யமுடியும்?

குழந்தை பிறக்கவில்லையே என்று கோடானுகோடி தவம் செய்தும், காசி, இராமேச்சுவரம் என்று யாத்திரை செய்தும், அரசமரத்தடியில் நாகம் நிறுவிச் சுற்றி வழிபட்டும் பலமுறையில் வேண்டி வேண்டி நின்ற நாட்டிலே தான் இன்று இந்த வேண்டாத நிலை உண்டாகி இருக்கிறது. இவற்றுள் சில அறியாதவர்களும் சிக்கித் தடுமாறுவதை நான் அறிவேன். மக்கள் தேவை இல்லை என இதனால் நிலைகெட்டு, பின் பெற்ற மக்களையும் பறிகொடுத்து வேறு மக்களைப் பெற்றுக்கொள்ளவும் முடியவில்லையே என ஏங்கும் 'தம்பதி'களை நான் நன்கு அறிவேன். எல்லாத் துறைகளிலும் செயற்கைச் சேற்றில் பட்டு உழலும் மனித சமுதாயம் இந்தத்துறையிலும் அச் சேற்றையே நாடிச் சென்றுவிட்டது.

**செல்வி !**

எங்கெங்கோ சென்றுவிட்டேன். என்றாலும் எண்ணினால் இதற்கும் ஓர் இயக்கமா என்ற வேதனைதான்

பிறக்கிறது. இன்றும் சிலர் மக்கள் இல்லையே என வாடுவதையும் காண முடிகின்றது. இதற்கிடையில் இந்தக் கொடுமையும் வாழ்கிறதே. இயற்கைக்குத் தெரியும் மக்களினத்தை பெருக்காமல் தடுக்க. ஆம்! அது தன் வழியில் செயலாற்றிக் கொண்டுதான் வருகிறது, 'எல்லாம் தன்னாலேயே நடக்கின்றன, என்று தருக்கித் திரியும் மனிதனுக்கு அவ்வப்போது இயற்கை தலையி லடித்துப் புத்தி புகட்டுகிறது. என்றாலும் அவன் கர்வம் அடங்கவில்லை. அந்தக் கர்வத்தினாலேயே இதுபோன்ற குருட்டு யோசனைகளில் அவன்புத்தி செல்லுகின்றது. என்றாலும் இந்த நிலை என்றும் நீடிக்குமா என்பது ஐயம் தான். செயற்கை என்றாவது செம்மை வாழ்வு வாழ்ந்த துண்டா? காலம் பதில் சொல்லும்.

**அன்புடைச் செல்வி,**

இவற்றைப்பற்றியெல்லாம் அறிய அறிய உனக்கு வியப்பாக இருக்கின்றது அல்லவா? ஆம். இந்த நூற் றாண்டு நாகரிகமே அப்படிப்பட்டதுதான். உண்மைக் கெங்கும் இடம் கிடையாது. அது மண்ணுக்குள் மறைந்த மாணிக்கமாகத்தான் மங்கிக் கிடக்கின்றது. போலிகளே எங்கும் தலைவிரித்தாடுவதைக் காண்கின்றோம். இன்று உலகில் ஒளிவிடும் போலி வைரங்களோடு உண்மை வைரங்கள் போட்டியிட முடியுமா? உனக்குத் தெரியுமே! உயர்ந்தரகக் காஞ்சிபுரம் பட்டுச்சேலையை விடப் பகட்டாக இருக்கும் வேறு பட்டுக்களைத்தானே பெரும் பாலான மக்கள் விரும்புகின்றனர். இப்படி எத்தனை எத்தனையோ காட்டலாம். ஆம். அதுபோன்றே தொல் காப்பியர் காலந்தொட்டு இன்று வரை வந்த மெய்ச் செல்வமாகிய மக்கட் செல்வத்தை மறைக்க இந்தப் போலிப் பிரசாரம் கிளம்பியிருக்கிறது. எனினும் காலத் தேவன் இதற்குத்தக்க விடையளிப்பான் என்பது உறுதி.

ஒருசிலர் இந்தப் பிரசார எல்லைக்குள் வேறுவகையாக உட்படுகின்றனர். சில ஆடவரும் பெண்டிரும் மணம் செய்துகொள்ளாமலே வாழ்வைக் கழிக்கின்றனர். அவர்கள் இயற்கை வாழ்வு வாழத் தெரியாதவர்கள் தாம். உலகின் இயற்கை வாழ்வு, ஆணும் பெண்ணும் கூடித் தாமும் வாழ்ந்து வையத்தையும் வாழ வைப்பதுதான். கடவுள் காட்சியைக் காட்டவந்த அடியவர்களெல்லாம் கூட இந்த உண்மையைத் தான் காட்டுகின்றனர். கயிலையில் இறைவனைக் கண்டதாகக் கூறும் அப்பர் ஐயாற்றில் ஆண் பெண் இணைந்த காட்சியைத்தான் கயிலைக் காட்சியாகக் காட்டுகின்றார். 'பிடியொடு களிறு', 'கோழியொடு சேவல்' 'வரிக்குயிலொடு பேடை' இப்படி ஆணும் பெண்ணும் கலந்திருப்பதே கயிலைக் காட்சி. அதே நோக்கில்தான் திருமாலும் தன் துணைவியை மார்பில் வைத்திருப்பதாகவும், சிவன் சக்தியை உடலின் பாதியில் வைத்திருப்பதாகவும் கூறுவர். திருமூலர் தம் திருமந்திரத்தில் இக்கரு வளர்ச்சியைப் பற்றி 41, பாடல்களில் விளக்கியுள்ளார். எனவே ஆண்பெண் இருவரும் இணைந்துவாழாத வாழ்வு செயற்கை வாழ்வு என்பது மட்டுமன்று; கடவுள் நெறிக்குமாறு பட்டதும் கூட. ஆகவே தமிழ் நாட்டு இல்லற வாழ்வு தான் தெய்வநெறியாக நின்று மக்கட் செல்வத்தை நாட்டில் மலர வைப்பது. அதனாலேயே வள்ளுவரும் 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று காட்டினார். இந்த உண்மையை உணராது சிலர் மணம் வேண்டாமென்று தியாக வாழ்வில் வாழ்வதாகச் சொல்லிச் செயற்கைச் சேற்றில் சிக்கித் தவிக்கின்றனர். ஆம் இவர்கள் வாழ்வும் நான் முன்பு காட்டிய செயற்கை வைரம் போன்றதேயாம். திருந்துவார்களா இவர்கள்?

மற்றொன்றும் இங்கே கூற வேண்டும். மனித வாழ்வின் இல்லற நெறியில்லையேல் உலகம் என்றோ

சுடுகாடாக மாறியிருக்கும். வள்ளுவர் கதையையும் அவர் பிறந்த முறையையும் உண்மை என்று கொண்டு நீ ஒன்றை நினைத்துப்பார். அவருடைய பெற்றோர்கள் இரண்டு மூன்று குழந்தைகள் பிறந்தபின் இக் குடும்பக் கட்டுப்பாட்டுச் சேற்றில் சிக்கியிருப்பார்களானால் உலகம் போற்றும் வள்ளுவரை நாம் பெற்றிருக்க முடியுமா? அதுபோன்றே அண்ணல் காந்தியாரின் பெற்றோர் ஓரிருமக்கள் பிறந்தபின் குடும்பக் கட்டுப் பாடுக்குள் அழுந்தியிருப்பாராயின் நம் நம் தலை முறையில் ஒரு வழிகாட்டியை இழந்திருக்கமாட்டோமா? இப்படியே திருநாவுக்கரசரது பெற்றோரும், விவேகா னந்தர் பெற்றோரும், ஐன்ஸ்டைன், நியூடன் போன்ற மேதைகளின் பெற்றோரும் பிற வழிகாட்டிகளின் பெற் றோரும் இக்கட்டுப்பாட்டுக்கு அடங்கியோ அன்றி மணம் செய்துகொள்ளாமலோ இருந்திருப்பார்களானால் உலகம் என்னாகி யிருக்கும்? ‘அறிவார் யார் நல்லார் பிறக்கும் குடி?’ என்று தமிழ் நாட்டில் வழங்கும் மொழி உனக்குத் தெரியுமே. எனவே எந்த அன்னையின் மணிவயிற்றில் எத்தகைய ஞானக் குழந்தை பிறக்குமோ? யார் அறிவார்! ஆம்! அத்தகைய உலகுக்கு நலம்தரும் இன்பப் பூங்காவின் இடைப்பட்ட அன்புப் பாதையை அடைப்பவரே இக்கட்டுப்பாட்டுக்கு அடங்குபவரும் மணம் வேண்டாம் என்பவரும்.

உனக்கு ஓர் ஐயம் பிறக்கலாம். எங்கோ பல கோடிக்கு ஒருவர் பிறந்து உலகை வாழ்விப்பதற்காக அனைவரும் கட்டுப்பாடு செய்யாதிருக்க வேண்டுமா? என்ற கேள்வி எழுவது இயல்புதான். அந்தப் பல கோடிக்கு ஒன்று எங்கு பிறக்கும் என்று தெரிந்தா லன்றோ மற்றவர் வேறுவழி செல்ல முடியும்? காந்தியா ரின் பெற்றோர் அவர் பிறக்குமுன் அறிவார்களா அவர் வாழ்ந்த அறவாழ்வுபற்றி? இதோ இன்று வாழும்

காமராசரின் அன்னையார் அவரைப் பெற்றெடுக்குமுன் பாராண்டு சிறப்பார் எனக் கனவு கண்டிருக்க முடியுமா? அதுவும் எல்லாருக்கும் எல்லா வாய்ப்புக்களும் சிறக்க நிற்கும் இக்காலத்தில் எப்படிக் காட்ட முடியும்? 'சேற்றில் செந்தாமரை' போல் எங்கு யார் பிறப்பார்கள் எனக் காட்ட முடியுமா? உலகை உய்விக்க வந்த அடியவர்களும், அறிஞர்களும், ஆணை யாளர்களும் எத்தகைய குலங்களில் பிறந்தார்கள் என் பதை உலக வரலாறு காட்டுகிறதே. 'கபில ரகவல்' என்ற நூலில் அவர் அன்றைய அறிஞர்கள் பிறந்த குடியையும் முறையையும் காட்டியுள்ளனரே. எனவே மற்றெதற்கு இன்றேனும், அத்தகைய நல்லவர் பிறக்கும் நாளும் குடி யும் நாம் அறியோம் என்பதனால், அந்த வழிகாட்டிகள் வருவதற்காகவாவது இச் செயற்கைச் சேற்றில் நாம் இறங்கக்கூடாது என நான் விரும்புகின்றேன். இன்னும் இந்த கட்டுப்பாட்டை விதித்துச் செயலாற்றும் தலைவர்கள் சற்றுச் சிந்தித்தால் ஓர் உண்மை விளங்கும். ஆம். அவர் தம் பெற்றோர்கள் இக்கட்டுப்பாட்டை எண்ணியிருந்தால் இவர்கள் வாழ்வு ஏது? இந்த விதண்டாவாதம்தான் ஏது?

உலகம் பரந்து கிடக்கிறது. பல உலகங்களைக் கண்டு குடியேற வாய்ப்பு இருக்கிறது. இந்த நாளில் உழைப்பை மறந்து, தன்னம்பிக்கையை மறந்து, இக் கட்டுப்பாட்டில் இறங்குவதுபோன்ற அநாகரிகச் செயல்-"வாழ வழியில்லை' அதனால் குழந்தை பெற வேண்டாம், என்ற கட்டுப்பாட்டுச் செயல் - இந்த உலகத்திற்கே வேண்டாத ஒன்று. அதற்குப் பதில் மக்களினம் ஒன்று கத் திரண்டு உள்ள உரமும் உடல் உழைப்பும் கொண்டு பாடுபடுமானால் இன்றைய மக்கட் தொகையைப்போல் இரண்டாயிரம் மடங்கு பெருகினாலும் அத்தனை பேரை யும் வாழவைக்க வழியுண்டு என்பது திண்ணம்.

இவ்வாறெல்லாம் எழுதுவதுபற்றிச் சிலர் என்னைக் குறைகூறவும்கூடும். என்றாலும் மனதில்பட்ட உண்மையை-உலகம் உள்ளளவும் வாழவேண்டிய உண்மையை–அன்று தொட்டு இன்று வரை அறிஞரும் அன்பரும் காட்டிவந்த உண்மையை நான் காட்டவில்லை என்றால் மனித சமூகத்துக்கே நான் துரோகம் இழைத்தவனாவேன் என்ற உணர்விலேயே இத்தனையும் உனக்கு எழுதுகிறேன்.

செல்வமாகிய குழந்தை வேண்டாம் என்று சொல்ல யாருக்கும் உரிமை இல்லை. எத்தனை மகப்பெறினும் மனமிருந்தால் வைத்துக் காப்பாற்றலாம். தனி மனிதனுக்கு முடியவில்லையானால் அரசாங்கம் அந்தப் பணியினைச் செய்யலாம். அப்படிச் சில அரசாங்கங்கள் செய்துவருகின்றன எனவும் அறிகின்றோம். அப்படியிருக்க நாம் மட்டும் ஏன் தேவை அற்ற ஒரு செயலை மேற்கொள்ளவேண்டும் என்று என்உள்ளம் கேட்கிறது. கேட்டு என்ன பயன்? நாம் சொன்னால் யார் கேட்பார்? வல்லான் வகுத்ததே வாய்க்கா லன்றோ! என்றாலும் இயற்கை அவர்களுக்குப் பாடம் கற்பிக்கும் நாள் நெடுந்தொலைவில் இல்லை என்றுமட்டும் திட்டமாகக்கூறுவேன். நீ இந்த சூழல்களுக்கு இடையில் சிக்காமல் பார்த்துக் கொள். அதோ உன் அன்புச் செல்வம் அழைக்கிறது. அணைத்து மகிழ்ந்து இன்புற்று வாழ்! இன்னும் குழந்தை பற்றி எத்தனையோ கடிதங்கள் எழுதத் தோன்றுகிறது என்றாலும், நீ விரைவில் இங்கே வரப்போகிறாயல்லவா? அப்போது அனைத்தையும் நேரில் சொல்லுகிறேன். கேட்டுப் பயன் பெறுவாய் என நினைக்கிறேன். நீயும் உன் செல்வமும் நீடு வாழ்க என வாழ்த்துகின்றேன்.

அன்புள்ள,

**அப்பா.**

## ஆசிரியர் அ. மு. ப. வின் நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | *கட்டுரைப் பத்து | 1 | 50 |
| 2. | *இந்திய முதற் சட்டம் (நாடகம்) | 3 | 00 |
| 3. | *மலேயாச் சொற்பொழிவுகள் | 2 | 00 |
| 4. | *தமிழன் கண்ட மலேயா | 2 | 50 |
| 5. | *கண்டதும் கருத்தும் | 1 | 50 |
| 6. | *சாதி வெறி (நாடகம்) | 1 | 50 |
| 7. | *கறை படிந்த உள்ளம் | 1 | 50 |
| 8. | *கவிதை யுள்ளம் I & II | 1 | 00 |
| 9. | காப்பியக் கதைகள் (மூன்றும்) | 5 | 00 |
| 10. | மனிதன் எங்கே செல்கிறான்? | 1 | 50 |
| 11. | பாசம் (நாடகம்) | 1 | 75 |
| 12. | பெண் | 1 | 50 |
| 13. | தமிழ்நாட்டு விழாக்கள் | 1 | 50 |
| 14. | வாழ்வுப் பாதை | 4 | 50 |
| 15. | கவிதையும் வாழ்க்கையும் | 7 | 00 |
| 16. | சமயமும் சமூகமும் | 2 | 00 |
| 17. | மணிபல்லவம் | 1 | 25 |
| 18. | தமிழக வரலாறு | 6 | 00 |
| 19. | இளமையின் நினைவுகள் | 2 | 50 |
| 20. | பாட்டும் பயனும் | 2 | 00 |
| 21. | துன்பச் சுழல் | 2 | 00 |
| 22. | வையைத் தமிழ் | 3 | 50 |
| 23. | கங்கைக் கரையில் காவிரித் தமிழ் | 2 | 50 |
| 24. | தமிழ் உரைநடை | 3 | 50 |
| 25. | கூடி வாழ் | - | 75 |
| 26. | அவை பேசினால் | - | 75 |
| 27. | ஒரு நாளைக்கு ஒரு நீதி | - | 75 |
| 28. | வாழ வேண்டுமா? | - | 75 |
| | நான்கு நூல்களும் (கட்டு) | 3 | 00 |
| 29. | மக்கட் செல்வம் - மணப்பரிசு | 2 | 00 |

ஆங்கில நூல்கள்:

| | | |
|---|---|---|
| **The Gleanings of Tamil Culture** | **1** | **50** |
| **Tamilnad Through Ages** | **3** | **50** |

* மறு பதிப்பு அச்சில்

**தமிழ்க்கலைப் பதிப்பகம்**

*சென்னை-30.*

விற்பனை உரிமை: **பாரி நிலையம்**

*59, பிராட்வே, சென்னை-1.*